# நான்காம் பகுதி

## இலங்கை மத்திய வங்கியினதும் வங்கி நிறுவனங்களினதும் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் பற்றி 1985 ஆம் ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | 1985 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஊழியர் சகாய நிதிய (திருத்தச்) சட்டம் | (i) |
| 2. | 1985 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதிகளும் பிணைப் பொறுப்புக்களும் (திருத்தச்) சட்டம் | (viii) |
| 3. | 1985 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கிராமிய அபி விருத்தி வங்கிகள் சட்டம் | (ix) |
| 4. | 1985 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உண்ணுட்டரசிறை (திருத்தச்) சட்டம் | (xxvii) |
| 5. | 1985 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க மரணச் சொத்து வரி (திருத்தச்) சட்டம் | (L) |
| 6. | 1985 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் | (Lvi) |
| 7. | 1985 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கப் பணச் சட்ட (திருத்தச்) சட்டம் | (Lx) |
| 8. | 1985 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க மரணச் சொத்து வரி (நீக்கச்) சட்டம் | (Lxix) |
| 9. | 1985 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம் | (Lxx) |
| 10. | 1985 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் | (Lxxi) |
| 11. | 1985 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க உண்ணுட்டரசிறை (திருத்தச்) சட்டம் | (Lxxii) |

# 1985 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (திருத்தச்) சட்டம்

*[1985, சனவரி மாதம் 9 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

1. இச்சட்டம் 1985 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும் 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 5 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவில், இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அதன் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:—

''(ஆஆ) நிதியத்துக்குச் செலுத்தவேண்டிய உதவு தொகையை அத்தகைய உதவுதொகை செலுத்தப்படவேண்டிய தேதியன்று தொழில்தருநர்கள் செலுத்தத் தவறியமை காரணமாகப் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களிடையே 16 ஆம் பிரிவினது ஏற்பாடுகளின்கீழ், மிகைக் கட்டண வகையாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட பணத்திலிருந்து, பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய மிகைக் கட்டணத் தொகையைச் சபையானது அமைச்சரின் ஒருப்பாட்டுடன் தீர்மானித்தல் வேண்டும்;''; அத்துடன்

(2) அதன் (ஒ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:—

''(ஒ) நிதியத்தின் பணங்களை முதலீடுசெய்வதிலிருந்து பெறப்பட்ட வருமானத்திலிருந்து இச்சட்டத்தின்கீழ் சபையினுலும் ஆணையாளரினுலும் முறையே தத்தமது பணிகளை நிறைவேற்றுகையில் உறப்பட்ட செலவுகளைக் கழித்தல் வேண்டும்;''.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

''சட்டத்தினை நிருவகிப்பதில் உறப்பட்ட செலவுகள்

7அ. இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் ஆணையாளராலும் நாணயச் சபையாலும் உறப்பட்ட செலவுகள் நிதியத்தின் பணங்களை முதலீடுசெய்வதிலிருந்து பெறப்பட்ட வருமானத்தின்மீது பொறுப்பாக்கப்படுதல் வேண்டும்''.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், ''செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்; ஆயின், இச்சட்டம்'' என்னும் சொற்களிலிருந்து அந்த உட்பிரிவு முடியும்வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, ''செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்''. என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், ''அடுத்துவரும் மாதத்தின் கடைசி நாளுக்கு முன்னராக நிதியத்துக்குச் செலுத்துவதற்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அடுத்துவரும் மாதத்தின் கடைசி நாளன்று அல்லது அதற்கு முன்னராக நிதியத்துக்குச் செலுத்துவதற்கு'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அந்தப் பிரிவை, அதன் (1) ஆம் உட்பிரிவென மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில், அதன் (உ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:—

''(உ) அத்தகைய உறுப்பினர் மேவப்பட்ட தொழிலொன்றில் தொழிலுக்கமர்த்தப்பட்டிராதொழிந்து அத்துடன் ஓய்வூதியத்துக்குரித்துடைய தொழிலைப் பின்வரும் சேவைகளில் மேற்கொண்ட பின்னர்,—

(i) பகிரங்க சேவையில்;

(ii) 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தினால் அமைக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவையில்;

(iii) 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் சட்டத்தின் 47 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட மாவட்ட சேவையில்;

(iv) உள்ளூராட்சிச் சேவை உறுப்பினர் ஒருவராக இருப்பது தவிர்ந்த, ஏதேனும் உள்ளூரதிகார சபையின் சேவையில்,''; அத்துடன்

*(3)* மீள இலக்கமிடப்பட்ட *(1)* ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும்:—

''(2) இப்பிரிவின் *(1)* ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் ஓர் உறுப்பினரால் சமர்ப்பிக்கப்பட்ட மருத்துவச் சான்றிதழின் மெய்ம்மைபற்றித் தொழில் ஆணையாளர் சந்தேகிப்பதற்குக் காரணத்தைக் கொண்டுள்ளவிடத்து, சம்பந்தப்பட்ட உறுப்பினரை, முறையாக அமைக்கப்பட்ட ஒரு மருத்துவச் சபையைக் கொண்டு அல்லது அரசாங்க மருத்துவ அலுவலரைக் கொண்டு மீளப் பரிசோதனை செய்விக்கும்படி அவர் ஆற்றுப் படுத்தலாம் என்பதுடன், அத்தகைய மீள்பரிசோதனையின்மீது, மூல மருத்துவச் சான்றிதழானது, ஏதேனும் முக்கிய விபரத்தைத் தருவதில் பொய்யானதாக இருந்ததெனக் காணப்பட்டால், ஆணையாளர் அச்சான்றிதழை நிராகரித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பதிவு செய்யப்பட்ட மருத்துவத், தொழிலரால் வழங்கப்படும் மருத்துவச் சான்றிதழ்களை எதிர் காலத்தில் ஏற்றுக்கொள்ள மறுப்பதற்கு உரித்துடையவராதலும் வேண்டும்''.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

*(1)* அதன் *(2)* ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலமும்:—

''(2அ) தொழில்தருநர்களால், அல்லது ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியத்தின் அல்லது அங்கிகரிக்கப்பட்ட உதவுதொகை வழி ஓய்வூதியத் திட்டத்தின் நிருவாகிகளால் ஏதேனும் மாதம் தொடர்பாக இச்சட்டத்தின்கீழ், கொடுபடற்பாலனவான உதவுதொகைகள், அதனை அடுத்துவரும் மாதத்தின் கடைசி நாளன்று அல்லது அதற்கு முன்னராக அத்தகைய நிதியத்துக்கு அல்லது திட்டத்துக்குக் கொடுக்கப்படாமலும், தொழில் தருநர் அல்லது நிருவாகி, அத்தகைய உதவு தொகை செலுத்தத் தவறியமை அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகள் காரணமாக ஏற்பட்டது என்று ஆணையாளர் திருப்தியுறும்வண்ணம் விளக்கமளிக்க முடியாமலும் இருக்கின்றவிடத்து, தொழில்தருநர் அல்லது நிருவாகி போமதியாகவுள்ள உதவுதொகைகளுடன் சேர்த்து மேலதிகமாக, பின்வரும் முறையில் அத்தகைய தொகைமீது கணிக்கப்படும் ஒரு மிகைக் சட்டணத்தையும் அந்நிதியத்துக்கு அல்லது திட்டத்திற்குச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்:—

*(அ)* அந்த உதவுதொகைகள் பத்து நாட்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு நிலுவையாகவிருக்கின்றவிடத்து, போமதியாகவுள்ள உதவுதொகைகளின் ஐந்து நூற்று வீதத்தைக் கொண்ட ஒரு மிகைக்கட்டணம்;

(ஆ) அந்த உதவுதொகைகள் பத்து நாட்களுக்கு மேற்பட்டு, ஆனல் ஒரு மாதத்துக்கு மேற்படாத காலப்பகுதிக்கு நிலுவையாகவிருக்கின்றவிடத்து, போமதியாகவுள்ள உதவுதொகைகளின் பதினைந்து நூற்றுவீதத்தைக் கொண்ட ஒரு மிகைக்கட்டணம்;

(இ) அந்த உதவுதொகைகள் ஒரு மாதத்துக்கு மேற்பட்டு, ஆனல் மூன்று மாதங்களுக்கு மேற்படாத காலப் பகுதிக்கு நிலுவையாகவிருக்கின்றவிடத்து, போமதியாகவுள்ள உதவு தொகைகளின் இருபது நூற்றுவீதத்தைக் கொண்ட ஒரு மிகைக்கட்டணம்;

(ஈ) அந்த உதவுதொகைகள் மூன்று மாதங்களுக்கு மேற்பட்டு, ஆனல் ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலப் பகுதிக்கு நிலுவையாகவிருக்கின்றவிடத்து, போமதியாகவுள்ள உதவு தொகைகளின் முப்பது நூற்றுவீதத்தைக் கொண்ட ஒரு மிகைக்கட்டணம்;

(உ) அந்த உதவுதொகைகள் ஆறு மாதங்களுக்கு மேற்பட்டு, ஆனல் பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்படாத காலப் பகுதிக்கு நிலுவையாகவிருக்கின்றவிடத்து, போமதியாகவுள்ள உதவுதொகைகளின் நாற்பது நூற்றுவீதத்தைக் கொண்ட ஒரு மிகைக் கட்டணம்; அத்துடன்

(ஊ) அந்த உதவுதொகைகள் பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்பட்டதொரு காலப் பகுதிக்கு நிலுவையாகவிருக்கின்றவிடத்து, போமதியாகவுள்ள உதவுதொகைகளின் ஐம்பது நூற்று வீதத்தைக் கொண்ட ஒரு மிகைக்கட்டணம்;

(2ஆ) மிகைக்கட்டணங்கள் மூலம் பெறப்பட்டு, ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியத்தின் அல்லது அங்கீகரிக்கப்பட்ட உதவு தொகைவழி ஓய்வூதியத் திட்டத்தின் நிதியத்துக்குச் செலுத்தப்பட்டுள்ள பணங்கள், விடயத்துக்கேற்ருற்போல அத்தகைய நிதியத்தின் அல்லது திட்டத்தின் பாகமாக அமைவதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், முறையே அந்தந்த நிதியத்தின் அல்லது திட்டத்தின் உறுப்பினர்களிடையே அதற்கிணங்கப் பங்கிடப்படுதலும் வேண்டும்.''; அத்துடன்

(2) அதன் (11) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(12) விடயத்துக்கேற்றவாறு ஒரு தொழில்தருநருக்கும் அல்லது, நிருவாகிக்கும், அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியத்தின் அல்லது அங்கீகரிக்கப்பட்ட உதவு தொகைவழி ஓய்வூதியத் திட்டத்தின் எவரேனும் உறுப்பினருக்குமிடையே பிணக்கொன்று இருக்கின்றமை பற்றி அறிவிக்கப்பட்டுள்ளவிடத்து, ஆணையாளர் அத்தகைய பிணக்கைத் தீர்ப்பதற்கு, அச்சூழ்நிலைகளில் தோதானவையெனக் கருதக்கூடியவாருன அத்தகைய பணிப்புகளை வழங்குதல் வேண்டும். இவ்வுட்பிரிவின்கீழ் ஆணையாளரால் வழங்கப்பட்ட பணிப்புகள் எவையும், பிணக்குக்கான திறத்தவரைப் பிணிப்பனவாக இருத்தல் வேண்டும்.''.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அதன் (ஆ) என்னும் பந்தியில், ''கொடுத்துதவுகின்ற; அல்லது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''கொடுத்துதவுகின்ற;'' என்னும் சொல்லை இடுவதன்மூலமும்;

(2) அதன் (இ) என்னும் பந்தியில், ''அல்லது தடுக்கின்ற'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அல்லது தடுக்கின்ற; அல்லது'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அதன் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:—

''(ஈ) 27 ஆம் பிரிவின்கீழ் ஆணையாளர் தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில், அவரால் ஆக்கப்பட்ட ஏதேனும் பணிப்பை மீறுகின்ற,''.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''தவறுகின்ற தொழில்தருநர் எந்த மாவட்டத்தில் வதிகின்றாரோ, அந்த மாவட்டம் அல்லது எந்த மாவட்டத்தில் அத்தகைய தொழில்தருநருக்குச் சொந்தமான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதுவும் இருக்கின்றதோ அந்த மாவட்டம் எதிலும் நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கின்ற'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''நிதியத்தின் எந்த உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் தொடர்பாகத் தவறுகை புரியப்பட்டதோ அந்த உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் அத்தகைய தவறுகின்ற தொழில்தருநரால் எந்த மாவட்டத்தில், தொழிலிலமர்த்தப்பட்டிருக்கின்றாரோ அல்லது தொழிலில் அமர்த்தப்பட்டிருந்தாரோ அந்த மாவட்டம் எதிலும் நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கின்ற'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், ''எந்தப் பிரிவில் அத்தகைய இடம் அமைந்துள்ளதோ அந்தப் பிரிவில் நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிவானுக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''நிதியத்தின் எந்த உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் தொடர்பாகத் தவறுகள் புரியப்பட்டதோ அந்த உறுப்பினரின் அல்லது உறுப்பினர்களின் வேலை செய்யுமிடம் எந்தப் பிரிவில் அமைந்துள்ளதோ அந்தப் பிரிவில் நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிவானுக்கு'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) ''மேவப்பட்ட தொழில்'' என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:—

' ''முறையாக அமைக்கப்பட்ட மருத்துவச் சபை'' என்பது நியாயமான சந்தேகத்தை எழச் செய்யும் மருத்துவச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கும் ஆட்களைச் சோதனை செய்யும் நோக்கத்திற்காக ஆணையாளரால் விண்ணப்பிக்கப்பட்டதன்மேல், சுகாதார சேவைகள் பணிப்பாளர், தலைமையதிபதியினுல் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஒரு மருத்துவச் சபை என்று பொருள்படும் '';

(2) ''சம்பாத்தியங்கள்'' என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப், பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:—

' ''சம்பாத்தியங்கள்'' என்பது—

(அ) கூலிகள், சம்பளம் அல்லது கட்டணங்கள்;

(ஆ) வாழ்க்கைச் செலவுப்படி, விசேட வாழ்க்கைப்படி, அத்துடன் அதையொத்த பிற படிகள்;

(இ) விடுமுறைகள் தொடர்பிலான கொடுப்பனவு;

(ஈ) விதித்துரைக்கப்பட்ட தொழில்களில், தொழில் தருநரால் ஊழியர்களுக்கு அளிக்கப்படும் சமைத்த அல்லது சமைக்காத ஏதேனும் உணவினதும் அத்துடன் அவ்வாறு அளிக்கப்படுகின்றவாறுன, ஏதேனும் உணவைத் தயாரிப்பதில் அல்லது உருவாக்குவதில் பயன்படுத்தப்படும் அத்தகைய ஏதேனும் வியாபாரப் பொருளினதும் காசுப் பெறுமதி; அத்தகைய பெறுமதியானது, ஆணையாளருக்கு மேன் முறையீடு செய்வதற்கு அமைவாக, தொழில் தருநரால் மதிப்பீடு செய்யப்படும் அத்தகைய மேன்முறையீட்டின் மீது ஆணையாளரின் முடிவு இறுதியானதாக இருக்கும்;

(உ) சாப்பாட்டுப் படி; அத்துடன்

(ஊ) விதித்துரைக்கப்படக்கூடியவாறுன அத்தகைய பிற வகை ஊதியங்கள்,

என்று பொருளாகும்;.

(3) ''ஊழியர்'' என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:—

' ''ஊழியர்'' என்பது தொழில்தருநருடன் எத்தன்மையிலேனும் ஒப்பந்தமொன்றை, அது வெளிப்படையானதாக அல்லது உட்கிடையானதாக, வாய்மொழி மூலமானதாக அல்லது எழுத்திலானதாக இருப்பதுடன் அது சேவை ஒப்பந்தமாக அல்லது தொழிற்பயிற்சி ஒப்பந்தமாக அல்லது ஏதேனும் வேலையை நிறைவேற்றுவதற்கான

ஆள்சார் ஒப்பந்தமாக இருக்கக்கூடிய அத்தகைய ஒப்பந்தத்தைச், செய்து கொண்டுள்ள அல்லது ஒப்பந்தத்தின்கீழ் வேலை செய்கின்ற எவரேனும் ஆள் என்று பொருளாவதோடு ஏதேனும் குறிப்பிட்ட நேரத்தில் அத்தகைய ஆள் தொழிலில் இருப்பினுஞ்சரி இல்லாவிடினுஞ் சரி, அத்தகைய ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் சாதாரணமாகத் தொழிலுக்கமர்த்தப்படும் எவரேனும் ஆளையும் உள்ளடக்கும்',; அத்துடன்

(4) ''தொழில்தருநர்'' என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:—

' ''தொழில்தருநர்'' என்பது எவரேனும் வேலையாளைத் தொழிலுக்கமர்த்துகின்ற அல்லது அவரது சார்பில் எவரேனும் வேலையாளைத் தொழிலுக்கமர்த்துகின்ற வேறெவரேனும் ஆள் என்று பொருளாவதோடு (குழுமமாக, கம்பெனியாக, கூட்டுத்தாபனமாக அல்லது தொழிற்சங்கமாக இருக்கக்கூடிய) தொழில்தருநர் குழு ஒன்றையும் எவரேனும் வேலையாளை வேறெவரேனும் ஆள் சார்பில் தொழிலுக்கமர்த்துகின்ற எவரேனும் ஆளையும் உள்ளடக்கும் என்பதுடன் சட்ட மரபுரிமையாளரையும், சட்ட வழியுரிமையாளரையும், நிறைவேற்றுநர் அல்லது நிருவாகியையும் கம்பெனி ஒடுக்குநரொருவரையும் உள்ளடக்கும்; அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் விடயத்தில், அத்தகைய குழுவின் தலைவரை அல்லது செயலாளரையும், பங்காண்மையொன்றின் விடயத்தில், முகாமைப் பங்காளரை அல்லது முகாமையாளரையும் உள்ளடக்கும்';.

# 1985 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதிகளும் பிணைப்பொறுப்புக்களும் (திருத்தச்) சட்டம்

*[1985, சனவரி மாதம் 9 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகளும் பிணைப்பொறுப்புக்களும் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டமானது, 1985 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதிகளும் பிணைப்பொறுப்புக்களும் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகளும் பிணைப் பொறுப்புக்களும் கட்டளைச்சட்டமானது, அக்கட்டளைச்சட்டத்தின் 30 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது என்பதுடன், இப்புதிய பிரிவானது அக்கட்டளைச் சட்டத்தின் 30அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

கூட்டு முதலீட்டு நிதியத்தின் முதலீடுகளிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானத்தைக் கையாளும் முறை

30அ. (இதனகத்துப் பின்னர் ''நிதியம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) கூட்டு முதலீட்டு நிதியத்தினுல் ஏதேனும் கடனுழ் நிதியத்தின் பணங்கள் முதலீடு செய்யப்படுமிடத்து—

(அ) முதிர்வுறும் கடனை மீட்பதற்கென ஏதேனும் கடனுழ் நிதியத்தின் வைப்புக்களைத் தீர்த்து வைப்பதிலான எல்லாச் செலவழிப்புக்களும் நிதியத்திலிருந்து செய்யப்பட்ட பின்னர், நிதியத்திற்கு ஏற்கனவே கிடைக்கப்பெற்றனவாயிருந்து, அல்லது திரளுகின்றனவாயிருந்து, அத்துடன் 1984 சனவரி 1 ஆம் தேதியிலிருந்து 1984 திசெம்பர் 31 ஆம் தேதி வரையிலான காலப் பகுதியின்போது மேன்மிகையாக அமைகின்றனவாயிருப்பின், அத்துடன்

(ஆ) 1985, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் நிதியத்திற்குத் திரளுகின்றனவையான,

அத்தகைய முதலீட்டின் மீதான எல்லாப் பங்கிலாபங்களும், வட்டியும், மிகையூதியமும், ஏனைய இலாபங்களும் திரட்டு நிதியத்துக்குச் செலுத்தப்படல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக ''கூட்டு முதலீட்டு நிதியம்'' என்பது, பணச் சட்டத்தின் 106 (2) ஆம் பிரிவின் நியதிகளின்படி மத்திய வங்கியினுல் தாபிக்கப்பட்டதும், ஏதேனும் கடனுழ் நிதியத்தின் பணங்கள் முதலீட்டுக்கென அதனுள் வைப்பிலிடப்படுவதுமான நிதியம் எனப் பொருளாகும்''.

# 1985 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, கிராமிய அபிவிருத்தி வங்கிகள் சட்டம்

*[1985, ஏப்றில் மாதம் 10 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**கிராமிய இடப்பரப்புகளில் கமத்தொழில், குடிசைக்கைத்தொழில், சிறு அளவிலான கைத்தொழில், மீன்பிடித்தொழில், வர்த்தகம் அத்துடன் வேறு அபிவிருத்திச் செயற்பாடுகள் என்பனவற்றின் அபிவிருத்திக்கு ஏற்பாடு செய்வதன் மூலம் கிராமியப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் கருத்துடன் பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகளைத் தாபிப்பதற்கு மத்திய வங்கியின் நாணயச்சபையை இயலச் செய்வதற்கும், அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடை நேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

1. இச்சட்டம் 1985 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகள் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

## பாகம் I

### பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகளைத் தாபித்தல்

2. (1) கிராமிய இடப்பரப்புக்களில் கமத்தொழில், குடிசைக் கைத் தொழில், சிறு அளவிலான கைத்தொழில், மீன்பிடித் தொழில், வர்த்தகம் அத்துடன் வேறு அபிவிருத்திச் செயற்பாடுகள் என்பவற்றின் அபிவிருத்திக்கு ஏற்பாடு செய்வதன் மூலம் கிராமியப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக (இதனகத்துப் பின்னர் ''வங்கி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கி ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றைத் தாபித்தல் அவசியமென (இதனகத்துப் பின்னர் ''நாணயச்சபை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) மத்திய வங்கியின் நாணயச் சபை கருதுகின்ற விடத்து, நாணயச் சபையானது கசெற்றில் வெளியிடப்படும் (இதனகத்துப் பின்னர் ''கூட்டிணைத்தற் கட்டளை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) கட்டளை மூலம்—

(அ) கிராமிய இடப்பரப்புகளில் கமத்தொழில், குடிசைக் கைத்தொழில், சிறு அளவிலான கைத்தொழில், மீன்பிடித் தொழில், வர்த்தகம் அத்துடன் வேறு அபிவிருத்திச் செயற்பாடுகள் என்பவற்றின் அபிவிருத்திக்கு ஏற்பாடு செய்வதன் மூலம் கிராமியப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக வங்கி தாபிக்கப்படுதல் வேண்டுமென்று வெளிப்படுத்தலாம்;

(ஆ) வங்கிக்குக் கூட்டிணைப்புப் பெயரொன்றைக் குறித்தொதுக்கலாம்;

(இ) வங்கி தொழிற்பட வேண்டிய இடப்பரப்பைக் குறிப்பிடலாம்;

(ஈ) வங்கியின் பிரதான தொழில் இடத்தைக் குறிப்பிடலாம்;

(உ) வங்கித் தொழிலைத் தொடங்க வேண்டிய தேதியொன்றை நிர்ணயிக்கலாம்; அத்துடன்

(ஊ) 8 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆட்களின் பெயர்களை வங்கிப் பணிப்பாளர் சபையின் முதல் உறுப்பினர்களாகக் குறிப்பிடலாம்.

(2) ஒவ்வொரு வங்கியும், கூட்டிணைத்தற் கட்டளை மூலம் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரினுல் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்ருதல் வேண்டுமென்பதுடன் இடையரு வழியுரிமையையும், பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய பெயரில் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

3. (1) வங்கியின் பிரதான தொழிலிடமானது, கூட்டிணைத்தற் கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாருக இருத்தல் வேண்டும்.

(2) வங்கியானது கூட்டிணைத்தற் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்புக்குள்ளாக இருக்கும் ஏதேனுமிடத்தில், பணிப்பாளர் சபை அவ்வாறு செய்தல் அவசியமானதெனக் கருதுகின்றவிடத்து, அதன் கிளைகளையும் முகவர் நிலையங்களையும் தாபிக்கலாம்.

4. வங்கியின் குறிக்கோள்கள் கூட்டிணைத்தற் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்புக்குள்ளாகக் கமத்தொழில், கைத்தொழில், கடற்ருெழில், வர்த்தகம் அத்துடன் வேறு அபிவிருத்திச் செயற்பாடுகளை மேம்படுத்துவதாதல் வேண்டும்.

5. வங்கியானது ஏதேனும் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் தவிர்ந்த வங்கித்தொழிலைக் கொண்டு நடாத்தலாம்; அத்துடன் கொடுக்கல் வாங்கல்களைச் செய்யலாம்.

6. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, வங்கியானது, அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுகையில், பின்வரும் தத்துவங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையேனும் பிரயோகிக்கலாம்:—

(அ) கமத்தொழில் தொழிற்பாடுகளுக்காக அல்லது கமத்தொழிலோடு உறவுபட்ட வேறு நோக்கங்களுக்காகக் குறிப்பாகக் கமக்காரர்களுக்கும், கமத்தொழில் தொழிலாளர்களுக்கும், தனித்தனியாகவாயினுஞ்சரி அல்லது தொகுதிகளாகவாயினுஞ்சரி, அத்துடன் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சந்தைப்படுத்துதல் மற்றும் பதனிடுதற் சங்கங்களுக்கும் குறுங்கால, நடுத்தரகால, நெடுங்காலக் கடன்களையும் அத்துடன் வேறு கடன் வசதிகளையும் வழங்குதல்;

(ஆ) பணிப்பாளர் சபையினது அபிப்பிராயப்படி சிறு அளவினவாக இருக்கும் குடிசைக் கைத்தொழில்கள், மீன்பிடித் தொழில், வர்த்தகச் செயற்பாடு அல்லது வேறு வகையான அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள நுண்வினைக்கம்மியருக்கும் அத்தகைய வேறு ஆட்களுக்கும், தனித்தனியாகவாயினுஞ்சரி அல்லது தொகுதிகளாகவாயினுஞ்சரி, குறுங்கால, நடுத்தரகால அத்துடன் நெடுங்காலக் கடன்களையும் வேறு கடன் வசதிகளையும் வழங்குதல்;

(இ) நடைமுறைக் கணக்குகளேயும், வைப்புக் கணக்குகளேயும், சேமிப்புக் கணக்குகளேயும் வேறு கணக்குகளேயும் திறத்தல், பேணுதல், அத்துடன் முகாமை செய்தல்;

(ஈ) நாணய, மாற்றுண்டியல்கள், வாக்குறுதிப்பத்திரங்கள், வரைவுண்டியல்கள், பங்குகள், தொகுதிக்கடன் முறிகள், சான்றிதழ்கள், பங்குச் சான்றிதழ்த் தொகுதி அத்துடன் வேறு சாதனங்கள், பிணைப்பொறுப்புகள் என்பவற்றைக் கழிவு தள்ளிக் கொடுத்தல், வாங்குதல், விற்றல் அத்துடன் கையாளுதல்;

(உ) கடன்களேயும், முற்பணங்களேயும் ஒழுங்கு செய்தல், வைப்பாக அல்லது பாதுகாப்பான கட்டுக்காப்புக்காகப் பணத்தையும் பிணைப் பொறுப்புகளேயும் விலமதிப்புமிக்க பொருள்களேயும் பெற்றுக்கொள்ளல்;

(ஊ) பணத்தையும் பிணைப்பொறுப்புகளேயும் சேகரித்தல். அத்துடன் அனுப்புதல்;

(எ) அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனத்தை முகாமை செய்தல், அத்துடன் பொதுவாக வங்கியாளர்களால் கொண்டு நடாத்தப்படும் எல்லா வகையான முகவர் நிலயத் தொழில்களேயும் கொண்டு நடாத்துதல்;

(ஏ) வங்கி தகுந்ததெனக் கருதும் அத்தகைய முறையில் பணத்தைக் கடனெடுத்தல் அல்லது திரட்டுதல், அத்துடன் கடனெடுக்கப்பட்ட, திரட்டப்பட்ட அல்லது கடனுகக் கொடுக்கவேண்டிய ஏதேனும் பணத்தைத் தவருது மீளச் செலுத்துவதனே, கோரப்படா மூலதனம் உட்பட, தற்போதுள்ளதாயினுஞ்சரி எதிர்காலத்தில் வருவதாயினுஞ்சரி, வங்கியின் ஆதனங்கள் அல்லது சொத்துக்கள் முழுவதையும் அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தை ஈடுவைப்பதன் மூலம், பொறுப்பாக்குவதன் மூலம் அல்லது அவற்றின் சோந்தை மூலம், உறுதிப்படுத்துதல் அத்துடன் அதே போன்ற ஈடு, பொறுப்பு அல்லது சோந்தை மூலம் வங்கி மேற்கொள்ளக்கூடிய ஏதேனும் கடப்பாடு அல்லது பொறுப்பு வங்கியினுல் நிறைவேற்றப்படுவதனே உறுதிப்படுத்துதலும் உத்தரவாதமளித்தலும்;

(ஐ) பிணைப் பொறுப்புக்கள் மீதும் ஆதனத்தின் மீதும் பணங் கடன் கொடுத்தலும், முற்பணம் கொடுத்தலும், அத்துடன் அது உசிதமானதெனக் கருதக்கூடிய அத்தகைய நியதிகள் மீது ஒன்றில் பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பில்லாது, அத்தகைய ஆட்களுக்கு, குழுமங்களுக்கு அல்லது கம்பனிகளுக்குக் கொடுகடன் சலுகை வழங்கலும்;

(ஒ) கமத்தொழில் விளைபொருட்களேயும், கைத்தொழில் உற்பத்திப்பொருட்களேயும் சந்தைப்படுத்துவதனேயும் பதனிடுவதனேயும் உதவியளித்தலும் மேம்படுத்தலும்;

(ஓ) மீன் சந்தைப்படுத்துவதையும், மீன் உற்பத்திப் பொருட்களேப் பதனிடுவதனேயும் உதவியளித்தலும் மேம்படுத்துதலும்;

(ஔ) நாணய சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறுன அத்தகைய நிபந்தனைகளுக்கமைவாக, அடைவு பிடிப்பவரொருவரின் தொழிலைக் கொண்டு நடாத்துதல்;

(க) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை அல்லது கமத்தொழில், கைத்தொழில், கடற்றொழில், வர்த்தக அல்லது வேறு தொழில் முயற்சியைக் கொள்ளுதல் அல்லது கொள்வனை செய்தல், அத்துடன் அத்தகைய ஆதனத்தை அல்லது தொழில் முயற்சியை முகாமை செய்தல் அல்லது முகாமைக்கு ஒழுங்கு செய்தல். அத்துடன் அத்தகைய ஆதனத்தை அல்லது தொழில் முயற்சியை விற்றல் அல்லது வேறு வகையாக விற்றுத் தீர்த்தல்;

(ங) வங்கியின் குறிக்கோள்களை எய்துவதற்காக முன்னேடிக் கருத்திட்டங்கள் உட்பட, சிறு அளவிலான கிராமிய அபிவிருத்திக் கருத்திட்டங்களை மேற்கொள்ளுதல்;

(ச) சூழலியற் புனரமைப்புப் பணியின் பாகமாக மரம் நடுதல், கிராமங்களைச் சீர்திருத்துதல் போன்ற அத்தகைய தொழிற்பாடுகளுக்கு ஊக்கமளித்தல் மூலம் கிராமிய இடப்பரப்புகளின் அபிவிருத்தியை மேம்படுத்த உதவுதல், அத்துடன் பொதுவாக வங்கியின் குறிக்கோள்களுக்குப் பயன்படும் ஆலோசனை உதவியை வழங்குதல்;

(ஞ) கமத்தொழில், கைத்தொழில், கடற்றொழில் மற்றும் வர்த்தகச் செயற்பாடுகளுக்குத் தேவைப்படும் குதங்கள், கிட்டங்கிகள், களஞ்சியங்கள், கட்டிடங்கள் என்பவற்றைக் கிராமிய இடப்பரப்புகளில் நிருமாணிப்பதில் ஈடுபடுதலும் அதனை மேம்படுத்துதலும்;

(ட) பணிப்பாளர் சபையினுல் உருவாக்கப்பட்ட வழிகாட்டுரைகளுக்கமைவாக, ஏதேனும் வங்கித்தொழில் நிறுவனத்தால் அல்லது கூட்டுறவுச் சங்கத்தினுல் நிதியுதவி அளிக்கப்பட்டுவருகின்ற, அல்லது அத்தகைய வங்கித் தொழில் நிறுவனத்தால் அல்லது கூட்டுறவுச் சங்கத்தினுல் கொண்டு நடாத்தப்பட்டு வருகின்ற ஏதேனும் பொறுப்பு முயற்சியை அல்லது கருத்திட்டத்தைப் பொறுப்பேற்றுக் கொள்ளுவதற்காக அத்தகைய வங்கித் தொழில் நிறுவனத்துடன் அல்லது கூட்டுறவுச் சங்கத்துடன் ஏதேனும் உடன்படிக்கையினைச் செய்துகொள்ளுதல்;

(ண) மத்திய வங்கியில், ஏதேனும் வர்த்தக வங்கியில் அல்லது கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது நாணயச் சபையின் அங்கீகாரத்துடன் இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் வங்கியில் அல்லது நிதி நிறுவனத்தில் வைப்புக் கணக்குகளை ஆரம்பித்தல்;

(த) கிராமிய இடப்பரப்பில் குதங்களையும், கிட்டங்கிகளையும், களஞ்சியங்களையும், கட்டிடங்களையும், எந்திர சாதனத்தையும் உபகரணத்தையும் அத்துடன் வேறு பண்டங்களையும் குத்தகைக்கு விடுதல், வாடகைக்கு விடுதல், பூரணமாக விற்றுத் தீர்த்தல் அல்லது வாடகைக் கொள்வனவு அடிப்படையில் விற்றல்;

(ந) வங்கியொன்றின் கடன் கொடுக்கும் செயற்பாடுகளுக்கு உள்ளகக் கட்டமைப்பு ஆதாரம் வழங்குவதற்காகக் கூட்டுறவுச் சந்தைப்படுத்தும், பதனிடும் சங்கங்களிலும் வேறு வகையான கூட்டுறவுச் சங்கங்களிலும் பங்குகளைக் கொள்வனவு செய்தல் அல்லது கொள்ளுதல்;

(ப) அசைவற்ற அல்லது அசைவுள்ள ஏதேனும் ஆதனத்தை எத்தன்மைத்தான எம்முறையிலேனும் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடு வைத்தல், அடகு வைத்தல், விற்றல் அல்லது வேறு வகையாகக் கையுதிர்த்தல்;

(ம) வங்கியின் வேலையைக் கொண்டு நடாத்துவதற்கு அவசியமாகக் கூடிய வாறான அத்தகைய அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமித்தல்;

(ய) சகாய நிதியமொன்றைத் தாபித்தல், அத்துடன் வங்கியால் தொழிலமர்த்தப்பட்ட ஆட்களுக்கு நலன்புரி மற்றும் பொழுது போக்கு வசதிகளையும் வதிவிட வசதிகளையும் ஏற்பாடு செய்தல்;

(ர) வங்கியின் பணியாட்டொகுதியினரை விலக்குதலும், அவர்களின்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும்;

(ல) பணியாட்டொகுதியினரின் கூலிகளை அல்லது சம்பளங்களை அல்லது வேறு ஊதியத்தை நிர்ணயித்தல்;

(வ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் சேவை நியதிகளையும் நிபந்தனைகளையும் தீர்மானித்தல்;

(அஅ) வங்கியின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும், கடமைகளைப் புரிவதற்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் இலங்கைக்குள்ளேயாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினும் சரி செய்து கொள்ளல் அத்துடன் நிறைவேற்றுதல்;

(ஆஆ) வங்கியின் அலுவலர்களினதும், சேவையாளர்களினதும் நியமனம், பதவியுயர்வு, ஊதியம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, நடத்தை அத்துடன் அவர்களுக்கு விடுமுறை வழங்குதல் என்பன உட்பட, அவர்கள் தொடர்பாக விதிகளை ஆக்குதல்;

(இஇ) வங்கியினது அலுவல்களின் நிருவாகம் தொடர்பிலான விதிகளை ஆக்குதல்; அத்துடன்

(ஈஈ) சபையின் அபிப்பிராயப்படி, வங்கியின் தொழிலை முறையாகக் கொண்டு நடாத்துவதனை இயலச் செய்வதற்கு அவசியமான எல்லா விடயங்களையும் செய்தல்.

## பாகம் II

### வங்கியின் முகாமை

7. *(1)* வங்கியினது அலுவல்களினதும், தொழிலினதும் முகாமையும், நிருவாகமும் (இதனகத்துப் பின்னர் ''சபை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணிப்பாளர் சபைக்கு உரித்தாதல் வேண்டும்.

*(2)* சபையானது, இச்சட்டத்தின் கீழான அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழான வங்கியின் தத்துவங்கள் எல்லாவற்றையும் பிரயோகிக்கலாமென்பதுடன், இச்சட்டத்தின்கீழ் வங்கியால் செய்யப்படக்கூடிய எல்லாச் செயல்களேயும் விடயங்களேயும் செய்யலாம்.

*(3)* சபையானது அதன் தத்துவங்களேப் பிரயோகிக்கையில் ஸ்திரமான தொழில் நெறிகளின் மீது செயலாற்றுதல் வேண்டுமென்பதுடன் கிராமிய அபிவிருத்தியின் அக்கறைகளுக்குப் போதிய கவனம் செலுத்துதலும் வேண்டும்.

8. *(2)* சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:—

*(அ)* அமைச்சரின் ஒருப்பாட்டுடன் நாணயச் சபையினுல் நியமிக்கப்படும் மூன்று பணிப்பாளர்கள்.

*(ஆ)* மூன்ரும் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாருக நியமிக்கப்படும் அல்லது தேர்ந்தெடுக்கப்படும் இரண்டு பணிப்பாளர்கள்.

*(2)* நாணயச் சபையானது, அமைச்சரின் ஒருப்பாட்டுடன் இப்பிரிவின் *(1)* ஆம் உட்பிரிவின் *(அ)* என்ற பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களிலிருந்து தவிசாளரொருவரை நியமித்தல் வேண்டும்.

*(3)* நாணயச் சபையானது, அமைச்சரின் ஒருப்பாட்டுடன் *(1)* ஆம் உட்பிரிவின் *(ஆ)* என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட இரண்டு பணிப்பாளர்களே, முதல் தடவையாக இரண்டு ஆண்டுக் காலப்பகுதிக்கு அல்லது 20 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாருக வங்கியின் பங்குகளேக் கைமாற்றம் செய்யும்வரை, இக்காலப்பகுதிகளுள் எது பிந்தியதோ அது வரை பதவி வகிக்குமாறு நியமித்தல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் வங்கியின் பொதுக் குழுவானது, மத்திய வங்கி தவிர்ந்த வேறு பங்குடைமையாளர்களேப் பிரதிநிதித்துவஞ் செய்வதற்காக, நாணயச் சபையினுல் தீர்மானிக்கப்படக்கூடியவாறன அத்தகைய தகைமைகளேக் கொண்டுள்ள ஆட்களிடையிலிருந்தும் அத்தகைய நடைமுறைக்கிணங்கவும் இரண்டு பணிப்பாளர்களேத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

*(4)* மூன்ரும் உட்பிரிவின்கீழ் முதற்றடவையில் நியமிக்கப்படும் பணிப்பாளர்கள் தவிர்ந்த பணிப்பாளரொருவரின் பதவிக்காலப் பகுதியானது, *(5)* ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, ஐந்து ஆண்டுகளாதல் வேண்டும்.

*(5)* எவரேனும் பணிப்பாளர் அவரது பதவிக்காலம் முடிவடைவதன் முன்னர் பதவியை வறிதாக்குகின்றவிடத்து, நாணயச் சபையானது விடயத்திற்கேற்றவாறு அமைச்சரின் அல்லது வங்கியினது பொதுக் குழுவின் ஒருப்பாட்டுடன் அத்தகைய பணிப்பாளரின் பதவிக் காலத்தில் முடிவுறுதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகிக்கவென வழியுரிமையாளரொருவரை நியமித்தல் வேண்டும் அல்லது தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(6) நாணயச் சபையானது, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அத்தகைய சபையினுல் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் எவரையேனும் பதவியிலிருந்து அகற்றலாம்.

(7) காலங்கழிவதன் மூலம் பதவியை வறிதாக்கும் பணிப்பாளரொருவர் மீள நியமிக்கப்படலாம் அல்லது மீளத் தேர்ந்தெடுக்கப்படலாம்.

(8) மூன்ரும் உட்பிரிவின்கீழ் வங்கியின் பொதுக் குழுவினுல் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் அவருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று வங்கியின் பொதுக் குழுக் கூட்டத்தில் சமுகமாயிருந்து பிரேரணைமீது வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை கொண்டு நிறைவேற்றப்படுமாஞல், அவரது பதவியை வறிதாக்குதல் வேண்டுமென்பதுடன் அவரது வழியுரிமையாளர் அத்தகைய பணிப்பாளரின் முடிவுருதெஞ்சியுள்ள பதவிக் காலப் பகுதிக்குத் தேர்ந்தெடுக்கப்படுதலும் வேண்டும்.

(9) எவரேனும் பணிப்பாளர் நாணயச் சபைக்கு முகவரியிடப்பட்ட கடிதம் மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம்.

(10) எவரேனும் பணிப்பாளர் சுகவீனம் காரணமாக அல்லது வேறு இயலாமை காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்கின்றவிடத்து, நாணயச் சபையானது விடயத்துக்கு ஏற்ருற்போல அமைச்சரின் அல்லது வங்கியின் பொதுக் குழுவின் ஒருப்பாட்டுடன் சபையின் கூட்டங்களில் அவ்ரது மாற்ருகப் பதிற் கடமையாற்றவெனப் பொருத்தமான ஆளொருவரை நியமிக்கலாம் அல்லது தேர்ந்தெடுக்கலாம்; அத்துடன் அத்தகைய ஆள் அங்கு வாக்களிக்க உரிமை உடையவராதல் வேண்டும்.

9. ஆளெவரும்—

(அ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக அல்லது ஏதேனும் மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினரொருவராக அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபை உறுப்பினரொருவராக; அல்லது

(ஆ) இலங்கையில் வலுவிலிருக்கும் ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்த சுவாதீனமற்றவரெனக் காணப்பட்டவராக அல்லது வெளிப்படுத்தப்பட்டவராக; அல்லது

(இ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலிருக்கும் ஏதேனும் சட்டத்தின் கீழ் கடனிறுக்க வகையற்றவரென அல்லது வங்கி முறிந்தவரென வெளிப்படுத்தப்பட்டு விடுதலைபெருக் கடனிறுக்க வகையற்ற அல்லது வங்குரோத்தான ஆள் ஒருவராக; அல்லது

(ஈ) நல்லொழுக்கப் பிறழ்வை உள்ளடக்குவதும், ஆறு மாதங்களுக்குக் குறையாத காலப் பகுதிக்கு மறியற்றண்டனை மூலம் தண்டிக்கப்படற்பாலதுமான தவறென்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டவராக,

இருந்தால் அவர் பணிப்பாளரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது பணிப்பாளராகத் தொடர்ந்திருந்துவருவதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

10. (1) தவிசாளர் சுகவீனம் காரணமாக, இயலாமை காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருந்தால், நாணயச் சபையானது, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அவரது இடத்தில் பதிற் கடமையாற்றவென வேறொரு பணிப்பாளரை நியமிக்கலாம்.

(2) நாணயச் சபையானது, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், காரணம் எதனையும் குறித்தொதுக்காது, சபைத் தவிசாளரின் நியமனத்தை முடிவுறுத்தலாம்; அத்துடன் அத்தகைய முடிவுறுத்தல் பற்றி ஏதேனும் நீதிமன்றத்தில் கேள்விக் குட்படுத்தலாகாது.

(3) தவிசாளர் நாணயச் சபைக்கு முகவரியிடப்பட்ட கடிதம் மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம்.

(4) இரண்டாம் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைவாகத் தவிசாளரின் பதவிக்காலமானது சபையில் அவரது உறுப்பாண்மைக் காலமாதல் வேண்டும்.

11. வங்கியின் நிதியங்களிலிருந்து, நாணயச் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியத்தைப் பணிப்பாளர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

12. வங்கியினால் செய்துகொள்ளப்பட உத்தேசிக்கப்பட்ட ஓர் ஒப்பந்தத்தில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அக்கறை கொண்டுள்ள பணிப்பாளர் ஒருவர் பணிப்பாளர் சபைக் கூட்டமொன்றில் அவரது அக்கறையின் தன்மை பற்றி வெளிவிடுதல் வேண்டும். அந்த வெளிவிடுகை அத்தகைய சபையினது கூட்டக் குறிப்புகளில் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன் அந்தப் பணிப்பாளர் அத்தகைய ஒப்பந்தம் தொடர்பில் அத்தகைய சபையினால் செய்யப்படும் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிவில் பங்கு பற்றுதலும் ஆகாது.

13. (1) சபையின் தவிசாளர், சமுகமாயிருந்தால், சபையின் ஒவ்வொரு கூட்டத்திலும் தலைமை தாங்குதல் வேண்டும். ஏதேனும் அத்தகைய கூட்டத்திற்கு தவிசாளர் சமுகமளிக்காதிருந்தால் சமுகமளித்திருக்கும் பணிப்பாளர்கள் தம்முள் ஒருவரை அத்தகைய கூட்டத்தில் தலைமை தாங்கத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) சபையின் ஏதேனும் கூட்டத்தில் தலைமை தாங்கும் ஆள் அவரது சொந்த வாக்குடன் மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(4) இரண்டாம் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைவாக, சபையானது சபையின் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கை முறையையும் அத்தகைய கூட்டங்களில் தொழிலைக் கையாளுவதனையும் ஒழுங்குபடுத்தலாம்.

14. சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் பணிப்பாளர்களுக் கிடையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பது காரணமாக மட்டும் அல்லது பணிப் பாளரொருவரின் நியமனத்தில் அல்லது தெரிவில் உள்ள ஏதேனும் குறைபாடு இருப்பது காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது.

15. (1) சபையானது அதன் தத்துவங்களுள்ளும் கடமைகளுள்ளும் எதனை யும் தவிசாளருக்கு அல்லது வங்கியின் வேறு எவரேனும் ஊழியருக்கு கையளிக் கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஏதேனும் தத்துவம் அல்லது கடமை, எந்த ஆளுக்குக் கையளிக்கப்பட்டதோ அந்த ஆள் ஒவ்வொருவரும் அவருக்குக் கையளிக் கப்பட்ட அத்தகைய தத்துவத்தை அல்லது கடமையைச் சபையின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளுக்கமைவாக, பிரயோகித்தல் அல்லது புரிதல் வேண்டும்.

16. (1) வங்கியின் இலச்சினையானது, தவிசாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(2) வங்கியின் இலச்சினை சபையினல் தீர்மானிக்கப்படக் கூடியவாருன அத் தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) வங்கியின் இலச்சினையானது, சபையின் இரு பணிப்பாளர்களின் சமுகத் தில் தவிர, சாதனம் எதனிலும் பொறிக்கப்படுதல் ஆகாது; அத்துடன் அவ்விரு பணிப்பாளர்களும் அங்கு அவர்கள் இருந்தனரென்பதற்கு அடையாளமாக அச் சாதனத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும்.

17. (1) இருபதாம் பிரிவின் கீழ் மத்திய வங்கியின் பங்கு வைத்திருப்பு பரவலாக்கப்பட்டதும் அல்லது அதன் பின்னர், எழுத்திலான ஏதேனும் சட்டத் தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளையும், வங்கியின் பங்குடைமையாளர்களாகவுள்ள கூட்டுறவுச் சங்கங்களை யும் வங்கியின் பொதுக் குழுவில் பிரதிநிதித்துவஞ் செய்வதற்கென அத்தகைய வங்கிகளினுலும் சங்கங்களினுலும் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரண்டு பேரைக் கொண்ட வங்கியின் பொதுக் குழு வொன்று இருத்தல் வேண்டும்.

(2) சபையானது—

(அ) பங்கு வைத்திருப்பதைக் கருத்தில் கொண்டு இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அத்தகைய வர்த்தக வங்கிகளால் பெயர் குறித்து நியமிக்கப்படக்கூடிய அல்லது கூட்டுறவுச் சங்கங்களினல் தேர்ந்தெடுக் கப்படக்கூடிய ஆட்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கலாம்;

(ஆ) அவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்படவுள்ள அல்லது தேர்ந்தெடுக் கப்படவுள்ள ஆட்களுக்குத் தேவையான தகைமைகளைத் தீர்மானிக் கலாம்; அத்துடன்

(இ) வங்கியின் பொதுக் குழுவுக்கு அத்தகைய ஆட்களைத் தேர்ந்தெடுப்பதில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறையைத் தீர்மானிக்கலாம்.

(3) வங்கியின் பொதுக் குழுவானது அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணத்திற்காக மட்டும் அதற்குரித்தாக்கப்பட்ட பணிகளைப் புரிதலிலிருந்து தகுதியற்றதாக்கப்படுதலாகாது.

18. வங்கியானது வங்கித் தொழில் மற்றும் தொழில்நுட்ப ஆளணியினரையும் கமக்காரரையும் நுண்வினைக்கம்மியரையும் அத்துடன் தனியாகவோ, கூட்டாகவோ கூட்டுறவுச் சங்கங்களுக்கூடாகவோ இணைந்து செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஏனைய ஆட்களையும் கமத்தொழில், கைத்தொழில், மீன்பிடித் தொழில், வர்த்தகம், வியாபாரம், வேறு அபிவிருத்திச் செயற்பாடுகள் போன்ற விடயங்களில் பயிற்சியளிக்க ஊக்குவிக்கலாம்; அத்துடன் ஆதரவு அளிக்கலாம்; அத்துடன் இந்த நோக்கங்களுக்காக, வங்கியானது அது தொடர்பாக உறப்படும் செலவுகளைக் கொடுத்துத் தீர்க்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

## பாகம் III

## நிதி

19. வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட பங்கு மூலதனம் ஒவ்வொன்றும் நூறு ரூபா கொண்ட ஐந்து இலட்சம் பங்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ள ஐந்து கோடி ரூபாவாதல் வேண்டும்.

20. (1) ஏழாம் உட்பிரிவுக்கமைவாக, வங்கியின் அப்போதைக்கான வழங்கப்பட்ட மூலதனம் ஒரு கோடி ரூபாவாதல் வேண்டும்.

(2) வங்கியின் வழங்கப்பட்ட மூலதனமானது, மத்திய வங்கியினால் முழுமையாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) கூட்டிணைக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுக் காலப்பகுதியின் பின்னர், மத்திய வங்கியானது, வழங்கப்பட்ட மூலதனத்தின் நாற்பத்தொன்பது வீதம் வரையிலான பங்குகளை, எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கலாம்.

(4) கூட்டுறவுச் சங்கங்களினால் கூட்டாக வைத்திருக்கப்படும் ஆகக் கூடிய பங்கு வைத்திருப்பு, வங்கியின் வழங்கப்பட்ட மூலதனத்தின் பத்து வீதத்துக்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(5) வங்கியின் பங்குதாரராக இருக்கும், எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகவுள்ள, வங்கியொன்று அல்லது கூட்டுறவுச் சங்கமொன்று அதற்குச் சொந்தமான பங்குகளை எத்தன்மைத்தான எம்முறையிலேனும் வங்கியின் பங்குதாரர் தவிர்ந்த வேறெவரேனும் ஆளுக்கு உடைமை மாற்றுதலாகாது.

(6) ஐந்தாம் உட்பிரிவுக்கு முரணான உடைமை மாற்றம் எதுவும் வெற்றும் வறிதுமாதல் வேண்டும்.

(7) வங்கியின் வழங்கப்பட்ட மூலதனம் நாணயச் சபையினுல் அதிகரிக்கப் படலாமென்பதுடன் மேலதிக மூலதனம் வழங்கப்பட்டவிடத்து, அத்தகைய மூலதனம் இப்பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட வாறு அதே முறையில் செலுத்தப்படுதலும் வேண்டும்.

இப்பிரிவினதும் 17 ஆம் பிரிவினதும் நோக்கங்களுக்காக, இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட வர்த்தக வங்கி என்பது, இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட இலங்கை வங்கி, 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கி, (145 ஆம் அத்தியாயமான) கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட ஹட்டன் நாஷனல் வங்கி, வரையறுக்கப் பட்ட இலங்கை வர்த்தக வங்கி என்று பொருளாகும்.

21. வங்கியானது கூட்டிணைக்கப்பட்டதும் அதனைத் தாபித்தல் தொடர் பான ஆரம்பச் செலவினங்களைச் சமாளிப்பதற்காக நாணயச் சபையினுல் தீர் மானிக்கப்படும் பணத்தொகையொன்றைப் பூரண நன்கொடை வகையாக மத் திய வங்கியானது குறித்தொதுக்க வேண்டும்.

22. (1) வங்கியானது, மத்திய வங்கியிலிருந்து காலத்துக்குக் காலம், நாணயச் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு, பணத்தொகைகள் மீதான வட்டி, அவற்றை மீளச் செலுத்துதல் என்பன தொடர்பான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமைவாக, ஆறு மாதத்துக்கு மேற்படாத காலப் பகுதிகளுக்குப் பணத் தொகைகளைக் கடனுகப் பெற்றுக் கொள்ளலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான வங்கியின் கடன் பெறுகைகள் எந்நேரத் திலும் வங்கியின் இறுத்த மூலதனத்தினதும், கட்டற்ற ஒதுக்குகளினதும் பத்து நூற்று வீதத்துக்குச் சமனுன தொகையை விஞ்சுதலாகாது.

23. வங்கியானது, நாணயச் சபையின் முன்னங்கீகாரத்துடன் அரசாங்கத் திடமிருந்து காலத்துக்குக் காலம், கடன் பெறலாமென்பதுடன் அரசாங்கமானது காலத்திற்குக் காலம் திரட்டிய நிதியத்திலிருந்து மத்திய வங்கிக் கூடாக, அர சாங்கத்தினுல் தீர்மானிக்கப்படக்கூடியவாறுன அத்தகைய நியதி நிபந்தனைகளுக் கமைவாக, பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பணத் தொகையை வங்கிக்குக் கடனுக வழங்கலாம்.

24. வங்கி, நாணயச் சபையின் முன்னங்கீகாரத்துடன் ஏதேனும் வெளி நாட்டு அரசாங்கத்திடமிருந்து அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள எத்தன்மைத் தான வேறு ஏதேனும் மூலத்திலிருந்து ஏதேனும் பணத் தொகையை அதன் மீதான வட்டி, அதனை மீளச் செலுத்துதல் என்பன தொடர்பில், நாணயச் சபைக்கும் அத்தகைய வெளிநாட்டு அரசாங்கத்திற்குமிடையிலான அல்லது விட யத்துக்கேற்றுற்போல அத்தகைய வேறு மூலங்களுக்குமிடையிலான உடன்படிக்கை மூலம் தீர்மானிக்கப்படக் கூடியவாறுன அத்தகைய நியதி, நிபந்தனைகளின்மீது காலத்துக்குக் காலம் கடன் பெறலாம்.

25. வங்கியானது பொதுவான ஒதுக்கு நிதியமொன்றைத் தாபித்தல் வேண்டுமென்பதுடன் சபையால் தீர்மானிக்கப்படும் அதன் வருடாந்த இலாபங் களில் ஒரு குறிப்பிட்ட வீதத்தை ஒவ்வோராண்டும் அத்தகைய நிதியத்துக்கு வரவு வைத்தலும் வேண்டும்.

26. வங்கியானது வாரா மற்றும் ஐயுறவுக் கடன்களுக்காகச் சிறப்பு ஒதுக்கு நிதியமொன்றைத் தாபித்தல் வேண்டுமென்பதுடன், சபையால் தீர் மானிக்கப்படும் அதன் வருடாந்த இலாபங்களில் ஒரு குறிப்பிட்ட வீதத்தை அத்தகைய நிதியத்துக்கு வரவு வைத்தலும் வேண்டும்.

27. சிறப்பறிஞர் சேவைகளைப் பெறுவதிலும் அதன் இடைநேர் விளைவான செலவினங்களிலும், சபையால் உறப்படும் செலவினத்தைச் சமாளிப்பதற்கு வங்கியை இயலச் செய்வதற்காக, வங்கியானது ''பணியாட்டொகுதி அபிவிருத்தி நிதியம்'' என அழைக்கப்பட வேண்டிய ஒரு நிதியத்தைத் தாபிக்கலாம், பேண லாம், முகாமை செய்யலாம் அத்துடன் கட்டுப்படுத்தலாம்; அத்துடன் அத் தகைய நிதியம் எப்பணிகளை நிறைவேற்றுவதற்காகத் தாபிக்கப்பட்டதோ அப் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானதெனக் கருதும் அத்தகைய பணத் தொகையை காலத்துக்குக் காலம், வங்கியின் மூலவளங்களிலிருந்து நிதியத்துக்கு மாற்றம் செய்யலாம்.

28. (1) உள்ளூர் அல்லது வெளியூர் ஒழுங்கமைப்புக்களிலிருந்து கொடை களை அல்லது நன்கொடைகளை ஏற்றுக்கொள்வதற்காக இப்பிரிவில் ''நிதியம்'' என்று குறிப்பீடு செய்யப்படும் ''சிறப்பு மூலவளங்கள் நிதியம்'' என அறியப்பட வேண்டிய நிதியமொன்றை வங்கியானது தாபித்தல் வேண்டும். நிதியமானது வங்கியின் பொது நிதிகளின் பாகமாக அமைதல் ஆகாது. ஆனால் தனியான நிதியமொன்ருக இருக்கும் அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் அல்லது அரசாங்கத்தினுல் அங்கீகரிக்கப்படக்கூடியவாருன அத்தகைய ஏதேனும் வெளி நாட்டு அரசாங்கத்துக்காக, வெளிநாட்டு அல்லது சருவதேசிய ஒழுங்கமைப்புக் காக அல்லது ஆளுக்காக அல்லது ஆட்களுக்காக, வங்கியின் பொது நிதிகளி லிருந்து வேருக வங்கியினுல் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கொடை அளிப்பவருக்கும் வங்கிக்குமிடையில் செய்யப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின் நியதிகளின்படி, வங்கியானது நிதியத்திலிருந்து ஏதேனும் கடனை, முற்பணத்தை, கொடையை அல்லது வேறு கடனுதவியை, ஏதேனும் கமத்தொழில், கைத்தொழில், கடற்ரெழில், வர்த்தக அல்லது வேறு தொழில் முயற்சிகளுக்குச் செய்ய அல்லது கொடுக்க இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது.

(3) நிதியத்தின் நோக்கங்களுக்காகக் கொடை அளிப்பவரால் செய்யப்பட்ட எல்லா நன்கொடைகளினதும் கொடைகளினதும் தொகை, வங்கியினுல் நிதியத் திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் நிதியத்தின் தொழிற்பாடு களிலிருந்து எழும் தேறிய வருமானம் அல்லது வட்டி நிதியத்தில் வரவு வைக்கப் படுதலும் வேண்டும்.

(4) நிதியத்தின் நோக்கங்களைக் கொண்டு நடாத்தும் குறிக்கோளுடன் வங்கி யால் செய்யப்பட்ட ஏதேனும் செயலில் அல்லது விடயத்தில் இருந்து எழுகின்ற அல்லது செயல் அல்லது விடயம் தொடர்பாக உறப்படுகின்ற வங்கியின் எல்லா நிதிசார் ஈடுபாடுகளும் அல்லது பொறுப்புக்களும் நிதியத்தின்மீது பொறுப்பாக்கப் படுதல் வேண்டும்.

(5) நிதியத்தின் நெடுங்கால நலன்களுக்குப் பங்கமின்றி, நிதியத்தின் குறிக் கோள்களை நிறைவேற்றுவதில் உடனடியாகப் பயன்படுத்தப்பட முடியாதுள்ள நிதியத்தின் மிதமிஞ்சிய மூலவளங்களைச் சபையானது, அது தோதானதெனக் கருதும் அத்தகைய பிணைப் பொறுப்புக்களில் முதலீடு செய்யலாம்.

(6) பின்வரும் கருமங்கள் எல்லாம் தொடர்பாக அல்லது அவற்றில் எது தொடர்பாகவும் இச்சட்டத்தின் கீழ் விதிகள் ஆக்கப்படலாம்:—

(அ) நிதியத்தின் கணக்குகள் வைத்திருக்கப்படவேண்டிய முறை;

(ஆ) வாராக் கடன்களுக்கும், ஐயுறவுக் கடன்களுக்கும் இருப்புச் சொத்துக் களின் தேய்மானத்துக்கும், அத்துடன் வழமையான வங்கித் தொழில் நடைமுறைக்கு இணங்கக்கூடிய அத்தகைய வேறு எதிர்பாராத நிகழ்வு களுக்குமென நிதியத்தில் ஒதுக்குகளைத் தாபித்தல்;

(இ) நிதியத்தினை மூடுதல் அல்லது ஒடுக்குதல்; அத்துடன்

(ஈ) மேற்சொல்லப்பட்ட கருமங்களுள் எதனுடனும் தொடர்புபட்ட அல் லது இடைநேர் விளைவான வேறு எவையேனும் கருமங்கள்.

29. நாணயச் சட்டத்தில் உள்ளது எது எவ்வாறிருப்பினும், நாணயச் சட்டத்தின் 93 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், வங்கியானது அதன் தொழிலைத் தொடங்கிய தேதியிலிருந்து மூன்று ஆண்டுக் காலப்பகுதிக்கு வங்கிக்கு அல்லது வங்கி தொடர்பாக ஏற்புடையனவாகாதென்பதுடன், அதன் பின்னர் அடுத்து வரும் தொடர்ந்த மூன்று ஆண்டுக் காலப்பகுதிக்கு, அத்தகைய வங்கியானது, அப்பிரிவின் கீழ் அத்தகைய வங்கியானது பேணி வரவேண்டுமென்று தேவைப் படுத்தப்பட்ட ஒதுக்குகளில் அரைவாசியை மட்டும் பேணி வருமாறு தேவைப் படுத்துதலும் வேண்டும்.

30. வங்கியானது, அதன் தொழிலைத் தொடங்கிய தேதியிலிருந்து பத்து ஆண்டுகளுக்கு அதன் இலாபங்கள், வருமானம் என்பவற்றின்மீது வருமானவரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

31. (1) வங்கியால் வழங்கப்படும் ஏதேனும் கடன், பிணைப் பொறுப்பு மீதும் சபையால் தீர்மானிக்கப்படக்கூடிய வேறு நியதி நிபந்தனைகள் மீதும் வழங்கப்படுதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவில் உள்ளது எது எவ்வாறிருப்பினும், சபையானது அதன் பூரண தற்றுணிபில், ஏதேனும் திட்டத்தின் தன்மையையும் நோக்கெல்லை யையும் கருத்தில் கொண்டு சபையினால் எழுத்தில் பதியப்பட வேண்டிய காரணங் களுக்காகச் சபை முடிவு செய்யும் எவ்விடயத்திலும் பிணைப் பொறுப்பில்லாது நாணயச் சபையினால் குறித்துரைக்கப்பட்டவாறான நோக்கங்களுக்காக அல்லது பிணைப் பொறுப்பு அவசியமில்லாத எந்நோக்கத்துக்காக அத்தகைய கடன் வழங் கப்பட்டதோ அந்நோக்கத்துக்குக் கடன்களை வழங்கலாம்.

## பாகம் IV

### பணியாட்டொகுதி

32. (1) தவிசாளர் வங்கியின் பிரதான நிறைவேற்று அலுவலராதல் வேண்டும்.

(2) தவிசாளர், சபையின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, வங்கித்தொழிலின் பணிப்புக்கும் வங்கியின் ஒழுங்கு அமைப்புக்கும், வங்கியின் தத்துவங்களை நிறைவேற்றுவதற்கும் வங்கி ஊழியர்களின் நிருவாகத்திற்கும், கட்டுப்பாட்டுக்கும் பொறுப்பாதல் வேண்டும்.

(3) தவிசாளர் சபையின் அங்கீகாரத்துடன் அவ்வாறு செய்வது அவசியமெனக் கருதுகின்றபோதிலெல்லாம் இச்சட்டத்தினல் அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையை வங்கியின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு எழுத்தில் கையளிக்கலாமென்பதுடன், அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர் அத்தகைய தத்துவத்தை, பணியை அல்லது கடமையைத் தவிசாளரின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கமைவாகப் பிரயோகித்தலும், நிறைவேற்றுதலும், புரிதலும் வேண்டும்.

33. (1) சபையானது அதன் பணிகளைத் திறமையாக நிறைவேற்றுவதற்கு அவசியமானதென அது கருதும் அத்தகைய அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களும், சேவையாளர்களும் சபையால் தீர்மானிக்கப்படக் கூடியவாருன அத்தகைய முறையிலும், அத்தகைய வீதத்திலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கமைந்தவர்களாதலும் வேண்டும்.

## பாகம் V

### கடன்களை அறவிடுதல்

34. தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் V ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், வங்கியால் கடன்கள் அறவிடப்படுதலுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் VI

### கணக்காய்வும், கணக்குகளும்

35. வங்கியின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

36. (1) வங்கியானது, அதன் வரவு செலவு, சொத்துக்கள், பொறுப்புக்கள் அத்துடன் வங்கியின் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன தொடர்பில் முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் வங்கிக் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

37. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திரண்டாம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் IX ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன், வங்கியைக் கலைத்தலுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் VII

### பொது

38. வங்கியில் வைப்புக் கணக்கொன்றை அல்லது சேமிப்புக் கணக்கொன்றை வைத்திருக்கும், பதினாறு வயதுக்கு மேற்பட்ட ஆளொருவர், அத்தகைய ஆளின் வரவில் இருக்கும் பணமானது, அவரது இறப்பின் மேல், எவ்வாளுக்குச் செலுத்தப்படுதல் வேண்டுமோ, அவ்வாளைப் பெயர் குறித்து நியமிக்கலாம், அத்துடன் 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன் அத்தகைய பெயர் குறித்த நியமனத்துக்கும் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவருக்கு அத்தகைய கணக்கிலுள்ள பணத்தைக் கொடுப்பனவு செய்வதற்கும், இவை தொடர்பாகவும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

39. பின்வரும் எழுத்திலான சட்டங்களின் ஏற்பாடுகள் வங்கிக்கு ஏற்புடையனவாகா:—

(அ) பணங் கடன் கொடுத்தற் கட்டளைச் சட்டம்;

(ஆ) கடணிணக்கக் கட்டளைச் சட்டம்;

(இ) அடைவு பிடிப்போர் கட்டளைச் சட்டம்.

40. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திரண்டாம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன் வங்கியின் பொதுக் குழுவைத் தெரிவு செய்வதற்கான பங்குதாரர்களின் கூட்டங்களில் பின்பற்றப்படும் நடபடி முறைக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

41. (89 ஆம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தின் கருத்துக்குட்பட, வங்கியானது அங்கீகரிக்கப்பட்ட கொடுகடன் முகவர் நிலையம் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

42. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து இரண்டாம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரை வரிச் சட்டத்தில் உள்ளது எது எவ்வாறிருப்பினும், வங்கியால் ஆக்கப்பட வேண்டுமென அல்லது நிறைவேற்றப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் சாதனம் அல்லது வங்கியால், வங்கித் தொழில் தொடர்பாக ஆக்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சாதனம், அத்துடன் கடனுக்கான ஏதேனும் பிணைப் பொறுப்புத் தொடர்பாக, வங்கிக்குச் சார்பாக வேறு எவரேனும் ஆளினால் ஆக்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சாதனம், அச்சட்டத்தின் கீழ் தீர்வைக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

**43.** ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தோராம் ஆண்டின் 65 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட வங்கியில் கணக்குகளைத் திறக்கலாம்.

**44.** வங்கியின் ஒவ்வொரு பணிப்பாளரும், அலுவலரும் அல்லது வேறு ஊழியரும் அவரால் உறப்படும் அல்லது அவரது கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக உறப்படும், அவரது தன்னிச்சையான செயல் மூலம் அல்லது தவறுகை மூலம் இழைக்கப்பட்டவை தவிர்ந்த அத்தகைய எல்லா இழப்புகளுக்கும் செலவுகளுக்கும் எதிராக வங்கியால் இழப்பீடு அளிக்கப்படுதல் வேண்டும்.

**45.** *(1)* வங்கித் தொழிலில் ஊழியத்திலமர்த்தப்பட்ட ஒவ்வொரு பணிப்பாளரும், கணக்காய்வாளரும், அலுவலரும் அல்லது வேறு ஊழியரும் அல்லது முகவரும் அல்லது வேறு ஆளும், அவரது கடமைகளிலீடுபட முன்னர், வங்கியின் கொடுக்கல் வாங்கல்கள், அதன் வாடிக்கையாளர்கள், எவரேனும் ஆளின் அல்லது நிறுவனத்தின் கணக்குகளின் நிலை, அத்துடன் அது தொடர்பான எல்லாக் கருமங்களும் தொடர்பாக அவர் கண்டிப்பான இரகசியத்தை நிறைவேற்றுவாரென வாக்குறுதி செய்து வெளிப்படுத்துகையில் ஒப்பிமிடுதல் வேண்டுமென்பதுடன், பின்வரும் சந்தர்ப்பங்களில் தவிர, தனது கடமைகளை நிறைவேற்றுதலில் தனது அறிவுக்கெட்டுகின்ற எவையேனும் வேறு கருமங்களை வெளிவிடமாட்டாரென்று அத்தகைய வெளிப்படுத்துகைமூலம் வாக்குறுதியளித்தலும் வேண்டும்.

*(அ)* (i) சபையால்; அல்லது

(ii) நீதிமன்றமொன்றினால்; அல்லது

(iii) அத்தகைய கருமங்கள் எந்த ஆள் தொடர்பானவையோ அந்த ஆளினால்; அல்லது

(iv) நாணயச் சபையினால்;

அவ்வாறு செய்யத் தேவைப்படுத்தப்படும்பொழுது;

*(ஆ)* அவரது கடமைகளைப் புரிகையில்; அத்துடன்

*(இ)* இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுள் எதனுடனும் இணங்கியொழுகுவதற்காக.

*(2)* வங்கித் தொழிலில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு பணிப்பாளரும், கணக்காய்வாளரும் அலுவலரும் அல்லது வேறு ஊழியரும், முகவரும் அல்லது வேறு ஆளும் *(1)* ஆம் உட்பிரிவின் கீழான தனது வாக்குறுதியை மீறாமல் கேள்விக்குப் பதிலளிக்க முடியாதெனின் வங்கித் தொழில் தொடர்பான எக் கேள்விக்கும் பதிலளிக்க மறுக்கலாம்.

(3) வங்கித் தொழிலில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு பணிப்பாளரும், கணக்காய்வாளரும், அலுவலரும் அல்லது வேறு ஊழியரும், முகவரும் அல்லது வேறு ஆளும் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அவரால் ஒப்பமிடப்பட்ட வெளிப்படுத்துகைக்கு முரணாக ஏதேனும் தகவலை வெளிப்படுத்தினால், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரின் முன்னிலையிலான சுருக்க முறை விசாரணையின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணத்துக்கு, அத்தகைய குற்றப் பணம் நீதிவானொருவர் தனது சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் விதிக்கக்கூடிய தொகையை விஞ்சுகின்றதெனினும், ஆளாதல் வேண்டும்.

46. நாணயச் சபையானது வங்கியின் கொள்கை பற்றியும், அதன் கடமைகளைப் புரிவது பற்றியும், தத்துவங்களைப் பிரயோகித்தல் பற்றியும் எழுத்திலான பொதுவான அல்லது சிறப்பான பணிப்புக்களைக் காலத்துக்குக் காலம் சபைக்கு வழங்கலாம்.

47. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்குமிடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள், மேலோங்கி நிற்றல் வேண்டும்.

48. (1) இச்சட்டத்தின் கீழ் விதிகள் ஆக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் அல்லது அதிகாரமளிக்கப்படும் எல்லா அல்லது ஏதேனும் கருமங்கள் தொடர்பாகச் சபையானது விதிகளை ஆக்கலாம்.

(2) இச்சட்டத்தின் கீழ்ச் சபையால் ஆக்கப்படும் விதி எதுவும், நாணயச் சபையினால் அங்கீகரிக்கப்படும் வரை, வலுவுடையதாதல் ஆகாது.

49. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி,—

''வங்கித் தொழில்'' என்பது கோரப்படுவதன்மேல் கொடுபடற்பாலதான பண வைப்புக்களை ஏற்றுக்கொள்வதன் மூலம் பொது மக்களிடமிருந்து நிதிகளைப் பெறும் தொழிலெனவும், சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது வழமையான வங்கித் தொழில் நெறிமுறையில் அத்தகைய நிதிகள் முழுவதையும் அல்லது நிதிகளின் பாகத்தை முற்பணங்களுக்காக, முதலீடுகளுக்காக அல்லது வேறேதேனும் தொழிற்பாடுகளுக்காகப் பயன்படுத்துதல் என்றும் பொருளாகும்;

''மத்திய வங்கி'' என்பது (422 ஆம் அத்தியாயமான) நாணயச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருள்படும்;

''வர்த்தக வங்கி'' என்பது (422 ஆம் அத்தியாயமான) நாணயச் சட்டத்தில் உள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

''கூட்டுறவுச் சங்கம்'' என்பது தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கமெனப் பொருள்படும்;

''பொறுப்பு முயற்சி'' என்பது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப் படாத எத்தன்மைத்தான பெயராலோ பதவிப் பெயராலோ அழைக் கப்படும், ஆட்கள் குழுவென்று பொருளாவதோடு ஒரு தனிக் கூட் டுத்தாபனத்தை அல்லது தனிச் சொத்துரிமையையும் உள்ளடக்கும்;

''வங்கியின் பொதுக் குழு'' என்பது இச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அமைக்கப்பட்ட வங்கியின் பொதுக் குழு எனப் பொருள்படும்;

''நாணயச் சபை'' என்பது (422 ஆம் அத்தியாயமான) நாணயச் சட்டத் தின் கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை எனப் பொருள்படும்; அத்துடன்

''சிறு அளவிலான கைத்தொழில்'' என்பது பொறித் தொகுதியிலும் எந்திரத் தொகுதியிலும் முதலீடு செய்யப்பட்டிருக்கும் தொகை, காணியும் கட்டடங்களும், பயன்பாட்டுப் பொருள்களும் நீங்கலாக, பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாத, தொழினுட்பமும், இடமும் எவ்வாறிருப்பினும், ஏதேனும் கைத்தொழிலென்று பொருள்படும்.

## 1985 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, உண்ணுட்டரசிறை (திருத்தச்) சட்டம்

*[1985, ஏப்றில் மாதம் 25 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

### 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணுட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 1985 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உண்ணுட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணுட்டரசிறைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு, அந்தப் பிரிவின் (அ) என்னும் பந்தியில் அந்தப் பந்தியின் (xlii) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(xliv) 1984 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை அச்சுத் தொழில் நிறுவகச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட இலங்கை அச்சுத் தொழில் நிறுவகத்தின்;

(xlv) 1985 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மின்வலு மீதப்படுத்தல் நிதியச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட மின்வலு மீதப்படுத்தல் நிதியத்தின்;

(xlvi) 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேயிலே சிறு பற்று நிலங்கள் அபிவிருத்திச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட தேயிலே சிறு பற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையின்;

(xlvii) 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின்;

(xlviii) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட மா கொழும்புப் பொருளாதார ஆணைக் குழுவின்.''.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவானது, அந்தப் பிரிவின் (உ) என்னும் பந்தியில் ''ஆறு ஆண்டுகளை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பத்து ஆண்டுகளை'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில் ''கொடுக்கப்பட்டதாதல் வேண்டும்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''கொடுக்கப்பட்டதாதல் வெண்டும்;'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:—

''(ஈ) அத்தகைய தனியாளினல் பெற்றுக்கொள்ளப்படுவதும் பன்னிரண்டாயிரம் ரூபாவை விஞ்சாததுமான மொத்தப் பங்கிலாபங்களின் கூட்டு மொத்தத்தைக் கொண்டிருக்கின்றவாறான 1985, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கான, தனியாள் எவரினதும் வருமானத்தின் அத்தகைய பாகம்.''.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அப்பிரிவின் (எ) என்னும் பந்தியிலுள்ள ''திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் பந்தியைச் சேர்த்துக்கொள்வதன் மூலமும்:—

''(ஏ) 1971-ஆம் ஆண்டின் 46-ஆம் இலக்க, தெங்குப்பொருள் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட தெங்குப், பொருள் அபிவிருத்தி அதிகாரசபையால் எந்திரத்தொகுதியை நவீனமயப்படுத்துவதற்காக நிருவகிக்கப்படும் ஆலை அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட''.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அந்தப் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில், ''ஆனல் 1983, மார்ச்சு 31 ஆம் தேதிக்கு முன்னர்'' என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக ''ஆனல் 1983, மார்ச்சு 31 ஆம் தேதிக்கு முன்னர்; அல்லது'' என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(iii) கப்பல் பழுதுபார்த்தல், கப்பல் தகர்த்தல், கடல்வழிச் சரக்குக் கொள்கலன்களைப் பழுதுபார்த்தலும், புதுக்குதலும் ஆகிய சேவைகளுக்கு வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவை ஏற்பாடு செய்வதற்காகவும், கணனி மென்பொருள், கணனி நிகழ்ச்சித் தயாரிப்பு, கணனி முறைமைகள், அல்லது கணனித் தரவு பதிதல் ஆகிய சேவைகளுக்கு ஏற்பாடு செய்வதற்காகவும் கூட்டிணைக்கப்பட்டதும் (அத்தகைய கம்பனி 1984, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று, அல்லது அதற்குப் பின்னர், ஆனல் 1989, மார்ச்சு 31 ஆம் தேதிக்கு முன்னர் அத்தகைய சேவைகளை ஏற்பாடு செய்யத் தொடங்கியிருப்பின்) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினல் அங்கீகரிக்கப்பட்டதுமான,''.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20அ என்னும் பிரிவானது ''ஏற்றுமதி விற்பனை வரவு'' என்பதன் வரைவிலக்கணத்தின் (ஈ) என்னும் பந்தியில் ''அப் பங்களவினை விஞ்சாத'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''1984, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டிற்கு அப்பங்களவினை விஞ்சாத;''. என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவானது, அந்தப் பிரிவின் (1) ஆம் உட்பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அந்த உட்பிரிவின் (ச) என்னும் பந்தியில் ''அக்கம்பனியை அமைப்பதில் உறப்பட்ட செலவினம்; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''அக்கம்பனியைஅமைப்பதில் உறப்பட்ட செலவினம்;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அந்த உட்பிரிவின் (ஒ) என்னும் பத்தியில் ''உறப்பட்ட செலவினம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''உறப்பட்ட செலவினம்; அத்துடன்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அந்த உட்பிரிவின் இறுதியில் பின்வரும் பந்தியைச் சேர்த்துக் கொள்வதன் மூலமும்:—

''(ட) அத்தகைய ஆளினல் கொண்டு நடாத்தப்பட்ட வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் என்பன இல்லாதொழிந்தமை காரணமாக ஓர் ஊழியரின் ஊழியம் முடிவுற்றதன்மேல் அத்தகைய ஊழியருக்கு அத்தகைய ஆளினல் செய்யப்பட்ட பணிக்கொடைக் கொடுப்பனவில் உறப்பட்ட செலவினம்,''.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், ''வர்த்தகக் கட்டிடங்களை வாடகைக்கு விடும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''வர்த்தக நோக்கங்களுக்காக வளவுகளை வாடகைக்கு விடும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) (iv) ஆம் உட்பந்தியில் ''மீளளிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்'' என்ற சொல்லமைப்புக்குப் பதிலாக ''மீளளிக்கப்படுதல் வேண்டும்''; என்ற சொல்லமைப்பை இடுவதன் மூலமும்;

(ஆ) (v) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:—

''(v) 1984, நவம்பர் 14 ஆம் தேதியன்று, அல்லது அதற்கு முன்னர் ஆறு ஆண்டுகளை விஞ்சாத காலப் பகுதியொன்றிற்காக, உருவாக்கப்பட்ட ஆண்டுத் தொகையொன்றின் வகையாக ஏதேனும் பணத்தொகை அவரால் கொடுக்கப்படற்பாலதாக இருக்குமிடத்து,

அத்தகைய ஆண்டுத் தொகையானது பெறுமதிவாய்ந்ததும் போதுமானதுமான எதிர்ப் பயனுக்காக அல்லது ஆண்டுத் தொகையாளரின் வாழ்வுக்காகவென இருந்தாலன்றி எந்த வரி மதிப்பீட்டாண்டில் அத்தகைய ஆண்டுத் தொகை, உருவாக்கப்பட்டதோ அந்த வரி மதிப்பீட்டாண்டின்போதும் அந்த வரி மதிப்பீட்டாண்டை அடுத்துறும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டின் போதும், அவரால் கொடுக்கப்படற்பாலதாகவுள்ள அத்தகைய ஏதேனும் பணத்தொகை தொடர்பில் கழிப்பனவு எதுவும், அனுமதிக்கப்படுதலாகாது; அத்துடன்

*(vi)* *1984*, நவம்பர் *15* ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் உருவாக்கப்பட்ட ஆண்டுத் தொகையொன்றின் வகையாக ஏதேனும் பணத் தொகை அவரால் கொடுக்கப்படற்பாலதாக இருக்குமிடத்து, அத்தகைய ஆண்டுத் தொகையானது—

(அ) நீதிமன்றத்தின் கட்டளையொன்றின் கீழ் பிரிமனைக் கொடுப்பனவாக அல்லது தாபரிப்புக் கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டாலன்றி;

(ஆ) முறையாக எழுதி நிறைவேற்றப்பட்ட, பிரிந்து வாழ்தல் உறுதியொன்றின் கீழ், அவரது வாழ்க்கைத் துணைக்குச் செலுத்தப்பட்டாலன்றி; அல்லது

(இ) பண வகையான அல்லது பணப் பெறுமதி வகையான, முழுப் பிரதி பயனுக்கெனக் கைம்மாறாகச் செலுத்தப்பட்டாலன்றி, எந்த வரி மதிப்பீட்டாண்டில் அத்தகைய ஆண்டுத் தொகை உருவாக்கப்பட்டதோ அந்த வரி வரிமதிப்பீட்டாண்டின்போதும், அந்த வரி மதிப்பீட்டாண்டை அடுத்துறும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டின் போதும் அவரால் கொடுக்கப்படற்பாலதாகவுள்ள அத்தகைய ஏதேனும் பணத்தொகை தொடர்பில் கழிப்பனவு எதுவும் அனுமதிக்கப்படுதலாகாது.''.

*11.* முதன்மைச் சட்டவாக்கத்தின் *30* ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

*(1)* அந்தப் பிரிவின் *(1)* ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (அஅ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:—

''(அஅ) *1984*, ஏப்பிறல் *1* ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் பதினெட்டாயிரம் ரூபா விடுதொகையொன்று,''; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (அஅ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின் வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(அஅஅ) 1985, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இருபத்து நாலாயிரம் ரூபா விடு தொகையொன்று; அத்துடன்''; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத்தில்—

(அ) பந்தி (இ) என்பதனை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:—

''(இ) 1984, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் பதினெட்டாயிரம் ரூபா விடுதொகையொன்று;'' அத்துடன்

(ஆ) பந்தி (இ) என்பதனை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(ஈ) 1985, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில் இருபத்து நாலாயிரம் ரூபா விடுதொகையொன்று.''.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலுள்ள, ''ஐந்தாம் உட்பிரிவில்'' என்னும் சொல்லமைப்பிற்குப் பதிலாக ''ஐந்தாம் உட்பிரிவின் அத்துடன் (5அ) என்னும் உட்பிரிவின்'', என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியில் அந்தப் பந்தியின் (vii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:—

''(viii) 1984 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை அச்சுத் தொழில் நிறுவகச் சட்டத்தினல் தாபிக்கப்பட்ட இலங்கை அச்சுத் தொழில் நிறுவகத்திற்கு;'';

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ச) என்னும் பந்தியில், ''தனியாளொருவரினல்'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, ''வதிவுள்ள தனியாளொருவரினல்'' என்னும் சொற்களையும், ''இருபத்தைந்து வயதிற்குக் குறைந்த திருமணமாகாத பிள்ளையின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''முப்பது வயதிற்குக் குறைந்த திருமணமான அல்லது திருமணமாகாத பிள்ளையொன்றின்'' என்னும் சொற்களையும் இடுவதன் மூலமும்;

(4) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

''(5) (அ) 1979, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்காகவும், அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின்னுறும் ஐந்து வரிமதிப்பீட்டாண்டுகளுள் ஒவ்வொன்றிற்காகவும், ஒரு கம்பனி தவிந்த ஆளெவரினதும், அத்துடன்

(ஆ) 1979 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்காக, ஏதேனும் கம்பனியினதும்,

அந்த வரிமதிப்பீட்டாண்டின்போது, அந்த ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட, (2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (௧), (ங) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டன தவிர்ந்தவையான எல்லாத் தகைமை பெறும் கொடுப்பனவுகள் தொடர்பிலும், வரி மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து செய்யப்படும் கழிப்பனவு, அத்தகைய வரி மதிப்பிடற்குரிய வருமானத்தின் மூன்றிலொரு பங்கினை விஞ்சுதலாகாது.'';

(5) ஐந்தாம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(5அ) 1985, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்காக, ஒரு கம்பனி தவிர்ந்த ஆளெவரினதும் வரி மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து செய்யப்படும் கழிப்பனவு—

(1) அந்த வரி மதிப்பீட்டாண்டில் அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட (2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (௧), (ங) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டன தவிர்ந்தவையான தகைமை பெறும் கொடுப்பனவுகள் யாவும் தொடர்பில் அத்தகைய வரி மதிப்பிடற்குரிய வருமானத்தின் மூன்றிலொரு பங்கை, அல்லது ஐந்திலட்சம் ரூபாவை இவற்றில் எது குறைந்ததோ அதனை விஞ்சுதலாகாது;

(2) அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட (2) ஆம் உட்பிரிவின் (இ), (௧), (ங) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டவையான, தகைமை பெறும் கொடுப்பனவுகள் யாவும் தொடர்பில் ஐந்திலட்சம் ரூபாவை விஞ்சுதலாகாது;

(3) பந்திகள் (i) இலும், (ii) இலும் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமை பெறும் கொடுப்பனவுகளின் கூட்டு மொத்தம் தொடர்பில் ஐந்திலட்சம் ரூபாவை விஞ்சுதலாகாது.''.

(6) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(7அ) ஏதேனும் கம்பனியில் எவையேனும் பங்குகளைக் கொள்வனவு செய்தமை தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் கீழ், அவரது வரி மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து விடுதொகையொன்றின் கழிப்பனவுக்கு உரித்துடையவராகவுள்ள எவரேனும் ஆள், அத்தகைய பங்குகளை விற்பனை செய்தும், அத்துடன் அத்தகைய விற்பனைத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாக அந்த உட்பிரிவின் கீழ், எந்தப் பங்குகள் தொடர்பில் அவர் தமது வரி மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து செய்யப்படும் கழிப்பனவொன்றிற்கு உரித்துடையவராகவுள்ளாரோ அந்த வேறு சாதாரணப் பங்குகளைக் கொள்வனவு செய்துமுள்ளவிடத்து, இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட பங்குகளைக் கொள்வனவு செய்ததன் விளைவாக வருமான வரியிலிருந்தான எந்தக் குறைப்பிற்கு அவர் உரித்துடையவராகவுள்ளாரோ அந்தக் குறைப்பானது முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட பங்குகளைக் கொள்வனவு செய்ததன் விளைவாக வருமான வரியிலிருந்தான எந்தக் குறைப்பிற்கு அவர் உரித்துடையராகவிருந்தாரோ அந்தக் குறைப்பின் தொகையினால் குறைக்கப்படுதல் வேண்டும்.'';

(7) அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவில் ''(ஈ) என்னும் பந்தியில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''(ஈ), (க) என்னும் பந்திகளில்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்'';

(8) அப்பிரிவின் (9) என்னும் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் (உ) என்னும் விடயத்தை (ஊ) என மீள எழுத்திடுவதன் மூலமும், மீள எழுத்திடப்பட்ட விடயத்திற்கு நேர் முன்னர் பின்வரும் விடயத்தை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(உ) (1) கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் ஆகக் கூடுதலான தொழில் வாய்ப்பு இல்லாத இடப்பரப்பொன்று என அமைச்சரால் குறித்துரைக்கப்பட்டதான இடப்பரப்பொன்றில் எந்தக் கைத்தொழிற் பொறுப்பு முயற்சி அதன் தயாரிப்பை அல்லது உற்பத்தியைத் தொடங்குகின்றதோ; அத்துடன்

(2) இருபத்தைந்துக்கு மேற்பட்ட ஆட்களைத் தொழிலுக்கமர்த்துகின்றதோ,

அந்தக் கைத்தொழிற் பொறுப்பு முயற்சியொன்றாகவுள்ளதும், சாமான்களின் அல்லது பொருள்களின் தயாரிப்பிற்காக அல்லது உற்பத்திக்காக அப்பொறுப்பு முயற்சியைக் கொண்டு நடாத்துவதில்; அல்லது''.

*13.* முதன்மைச் சட்டவாக்கத்தின் *32* ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

*(1)* அப்பிரிவின் *(1)* ஆம் உட்பிரிவில்—

*(அ)* அவ்வுட்பிரிவின் *(அ)* என்னும் பந்தியின் *(iii)* ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:—

''*(iii)* *1984,* ஏப்பிறல் *1* ஆம் தேதியன்று தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில் இச் சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் IIஅ என்னும் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில்;'';

*(ஆ)* அப்பந்தியின் *(iii)* ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''*(iv)* *1985,* ஏப்பிறல் *1* ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில், இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் IIஆ என்னும் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில்;''; அத்துடன்

*(இ)* அப்பிரிவின் *(1)* ஆம் உட்பிரிவிற்கான காப்பு வாசகத்தின் *(i)* ஆம், *(ii)* ஆம் உட்பந்திகளை நீக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாக பின்வரும் உட்பந்திகளை இடுவதன் மூலமும்:—

''*(i)* ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பதாம் ஆண்டு ஏப்பிறல் *1* ஆம் தேதியன்று தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பிலும் அவ்வரி மதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின்னுறும் மூன்று வரி மதிப்பீட்டாண்டுகளுக்கெனவும் பன்னிரண்டாயிரம் ரூபாவையும்;

*(ii)* ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து நான்காம் ஆண்டு ஏப்பிறல் *1* ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டிற்கெனப் பதினெட்டாயிரம் ரூபாவையும்; அத்துடன்

*(iii)* ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டு ஏப்பிறல் *1* ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கென இருபத்து நாலாயிரம் ரூபாவையும்.'';

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ii) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்திகளை இடுவதன் மூலமும்:—

''(ii) 1980, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரி மதிப்பீட்டாண்டு தொடர்பிலும் அவ்வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின்னுறும் மூன்று வரிமதிப்பீட்டாண்டுகளுக் கெனவும் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் IIஆம் பாகத்தில்; அல்லது

(iii) 1984, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப் பீட்டாண்டு தொடர்பில் IIஅ என்னும் பாகத்தில்; அல்லது

(iv) 1985, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் IIஆ என்னும் பாகத்தில்.''.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், ''மேலதிகமாக அத்தகைய வரி மதிப்பீட்டாண்டுக்கான அத்தகைய கம்பனியின் வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் ஐந்து சதவீதத்தையும்; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''1979 ஆம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதி தொடங்குகின்ற வரி மதிப்பீட்டாண்டு தொடர்பிலும் அவ்வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின்னுறும் ஐந்து வரிமதிப்பீட்டாண்டுகளுள் ஒவ்வொன்றுக்காகவும், மேலதிகமாக அத்தகைய வரிமதிப்பீட்டாண்டுக்கான அத்தகைய கம்பனியின் வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் ஐந்து சதவீதத்தையும்; அத்துடன்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவானது, ''ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின்போது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''1979 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் போதும் அத்துடன் அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின்னுறும் ஐந்து வரிமதிப்பீட்டாண்டுகள் ஒவ்வொன்றின்போதும்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(6) நான்காம் உட்பிரிவினதும் (5) ஆம் உட்பிரிவினதும் நோக்கத் திற்காக, தனியாள் ஒருவரின் வரிமதிப்பிடற்குரிய வருமானமானது, 11 ஆம் பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் கீழ் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப் பட்டவாறான அவரது வருமானத்தின் அத்தகைய பாகத்தை உள்ளடக்குவ தாகக் கருதப்படுதல் வேண்டும்.''.

*17.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவானது, அப்பிரிவின் *(1)* ஆம் உட்பிரிவில் ''தேறிய செல்வம் என்பது, இவ்வத்தியாயத்தின்'' என்பது தொடங்கி ''என்று பொருள்படும்:—'' என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''*(1)* ''தேறிய செல்வம்'' என்பது—

*(1)* ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டு ஏப்பிறல் *1* ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலும் அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின்னுறும் நான்கு ஆண்டுகளுள் ஒவ்வொன்றுக்காகவும் வரிமதிப்பீட்டாண்டின் முதலாம் நாளன்று ஆளொருவருக்குள்ள செல்வத்தினதும்; அத்துடன்

*(11)* ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து நான்காம் ஆண்டு ஏப்பிறில் *1* ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் வரிமதிப்பீட்டாண்டின் கடைசி நாளன்றுள்ள செல்வத்தினதும்,

இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கணிக்கப்பட்ட கூட்டுப் பெறுமதியானது, அந்நாளன்று அவரால் கொடுபட வேண்டியுள்ள பின்வருவன தவிர்ந்த கடன்கள் எல்லாவற்றினதும் கூட்டு மொத்தப் பெறுமதியை எத்தொகையால் விஞ்சுகின்றதோ அத்தொகை என்று பொருள்படும்.''.

*18.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவு அப்பிரிவின் *(1)* ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''*(1)* வதிவற்ற கம்பனி ஒன்று தவிர்ந்த எவரேனும் ஆளின் வரிவிதிக்கற்பாலதான செல்வமானது—

(அ) *1979* ஏப்பிறில் *1* ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கும், அத்துடன் அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின்னுறும் ஐந்து வரிமதிப்பீட்டாண்டுகளுள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சுவதாகவுள்ள அந்த ஆளின் தேறிய செல்வத்தின் அத்தகைய பாகமாகவும்; அத்துடன்

(ஆ) *1985* ஏப்பிறில் *1* ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஐந்திலட்சம் ரூபாவை விஞ்சுவதாகவுள்ள அந்த ஆளின் தேறிய செல்வத்தின் அத்தகைய பாகமாகவும்,

இருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆள், அத்தகைய வரிவிதிக்கற்பாலதான செல்வம் தொடர்பில் செல்வ வரிக்கு ஆளாதலும் வேண்டும்.''.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

''(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

'(1) அசைவற்ற ஆதனம் எதனதும் பெறுமதியானது—

(அ) 1979, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டிற்கும், அந்த வரி மதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின்னுறும் நான்கு வரி மதிப்பீட்டாண்டுகள் ஒவ்வொன்றிற்கும் அத்தகைய வரி மதிப்பீட்டாண்டின் முதலாம் நாளன்றுள்ள அதன் சந்தைப் பெறுமதியாகவும்; அத்துடன்

(ஆ) 1984, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற வரி மதிப்பீட்டாண்டு எதற்கும், அத்தகைய வரி மதிப்பீட்டாண்டின் கடைசி நாளன்றுள்ள அதன் சந்தைப் பெறுமதியாகவும்,

இருத்தல் வேண்டும்.

ஆயின், எவ்வாறுயினும், 1977, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று (''வரி மதிப்பீடு செய்யப்படுபவர்'' என இவ்வுட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்படுபவரான) எந்த ஆளின் செல்வம் வரி மதிப்பிடப்படுகின்றதோ அந்த ஆளினது செல்வத்தின் பாகமாக அத்தகைய ஆதனமானது அமைந்ததாகவிருப்பின் அல்லது 1977 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அந்த ஆதனத்தைச் சொந்தமாக வைத்திருந்த அல்லது அதில் அக்கறை கொண்டிருந்த வேறு ஆளிடமிருந்து வரி மதிப்பீடு செய்யப்படுபவரினுல் கொடை வகையாகவாயினுஞ்சரி அல்லது மரபுரிமை வகையாக வாயினுஞ்சரி அது கொள்ளப்பட்டிருப்பின்—

(1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் முதலாம் நாளன்றும், அத்துடன் அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின்னுறும் நான்கு வரிமதிப்பீட்டாண்டுகளுள் ஒவ்வொன்றினதும் முதலாம் நாளன்றும்; அத்துடன்

(2) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து நான்காம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின் கடைசி நாளன்றும்,

உள்ள அத்தகைய ஆதனத்தின் சந்தைப் பெறுமதி, 1977 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அவ் வாதனத்துக்குச் செய்யப்பட்ட எவையேனும் சீர்திருத்தங்களின், சேர்ப்புக்களின் அல்லது மாற்றங்களின் செலவுக்குச் சமமான ஒரு தொகையினுல் அதிகரிக்கப்பட்ட தொகை, அல்லது—

(அ) உட்பந்தி (i) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின் விடயத்தில், அந்த வரிமதிப்பீட் டாண்டின் ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று; அல்லது

(ஆ) உட்பந்தி (ii) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதே னும் வரிமதிப்பீட்டாண்டின் விடயத்தில், அந்த வரிமதிப் பீட்டாண்டின் மார்ச்சு 31 ஆந் தேதியன்று,

உள்ள அதன் சந்தைப் பெறுமதி, இவற்றுள் எது குறைந்ததோ அத்தொகை, 1977, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அதற்கிருந்த சந்தைப் பெறுமதியாகக் கருதப்படுதல் வேண்டும்.''.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:—

''(அ) ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தினது சந்தைப் பெறுமதி யானது—

(1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப் பீட்டாண்டிற்கும், அந்த வரிமதிப்பீட்டாண்டை உட னடுத்துப் பின்னுறும் நான்கு ஆண்டுகளுள் ஒவ்வொன் றிற்கும், அத்தகைய வரிமதிப்பீட்டாண்டின் முதலாம் நாளன்றுள்ள அதன் சந்தைப் பெறுமதியாதல் வேண் டும்; அத்துடன்

(2) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து நான்காம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, அத்தகைய வரிமதிப்பீட்டாண்டின் கடைசி நாளன்றுள்ள அதன் சந்தைப் பெறுமதியாதல் வேண்டும்.'';

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், ''வரி மதிப்பீட்டாண்டின் முதல் நாளில்'' என்னும் சொற்களுக்குப் பதி லாக ''1979, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலும், அத் துடன் அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின்னுறும் நான்கு வரிமதிப்பீட்டாண்டுகளுள் ஒவ்வொன்று தொடர்பிலும் அந்த வரி மதிப்பீட்டாண்டின் முதலாம் நாளன்றும், அத்துடன் 1984, ஏப் பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கு கின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் வரிமதிப்பீட் டாண்டின் கடைசி நாளன்றும்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

*20.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவு, அப்பிரிவின் *(2)* ஆம் உட்பிரிவிலுள்ள ''அவ்வரிமதிப்பீட்டாண்டின் ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அவற்றிற்குள்ளதுமான பெறுமதியாகவிருத்தல்'' என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக ''கொடையளிக்கப்பட்ட தேதியன்று அவற்றிற்குள்ளதுமான பெறுமதியாகவிருத்தல்'' என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*21.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவு, அப்பிரிவின் *(1அ)* என்னும் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

*(அ)* அப்பிரிவின் *(1)* ஆம் பந்தியில் ''அவ்வரிமதிப்பீட்டாண்டினை உடனடுத்துப் பின்னுறும் மூன்று வரிமதிப்பீட்டாண்டுகளுக்கெனவும் பன்னிரண்டாயிரம் ரூபாவையும்; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''அவ்வரிமதிப்பீட்டாண்டினை உடனடுத்துப் பின்னுறும் மூன்று வரிமதிப்பீட்டாண்டுகளுக்கெனவும் பன்னிரண்டாயிரம் ரூபாவையும்;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

*(ஆ)* அந்த உட்பிரிவின் (ii) ஆம் பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும்:—

''*(ii)* ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து நான்காம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதி தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கெனப் பதினெட்டாயிரம் ரூபாவையும்; அத்துடன்

*(iii)* ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கென இருபத்து நாலாயிரம் ரூபாவையும்,''.

*22.* முதன்மைச் சட்டவாக்கத்தின் xii ஆம் அத்தியாயத்தின் ஒ என்னும் உப தலைப்பு ''உல்லாசப் பயணம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''உல்லாசப் பயணமும் ஏற்றுமதிகளும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:

*23.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 85அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"ஏற்றுமதிகளில் ஈடுபட்டுள்ள கம்பெனிகளின் குறித்த சில இலாபங்களும் வருமானங்களும் தொடர்பில் வருமான வரியிலிருந்து நிவாரணம்

85அ. 20 (1) ஆம் பிரிவில் அல்லது 20அ (1) ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பொறுப்பு முயற்சியொன்றின் ஏற்றுமதி மொத்த விற்பனை வரவிலிருந்து கம்பெனியொன்றின் தேறிய வெளிநாட்டுச் செலாவணிச் சம்பாத்தியங்கள், அப்பிரிவுகளினது ஏற்பாடுகளின் கீழ், எந்த ஆண்டிற்கு அக்கம்பெனியின் முழு இலாபங்களும் வருமானமும் அல்லது அவற்றின் பாகம் எதுவும் வருமான வரியிலிருந்து விலக்கப்பட்டுள்ளனவோ அந்த ஆண்டின் கடைசித் தேதியை உடனடுத்துப் பின்னுறும் பத்தாண்டு காலப் பகுதியொன்றிற்கு, ஒவ்வோர் ஆண்டுக்குமான அத்தகைய ஏற்றுமதிகளினது கேள்வு, காப்புறுதி என்பவற்றை இறுக்கு முன்னர் பெறுமதியின் எழுபத்தைந்து சத வீதமாக அல்லது அதற்கு மேற்பட உள்ளதென ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் சான்றுப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய கம்பெனியானது, மேற்குறிப்பிடப்பட்ட பத்தாண்டுகள் எதற்கும், ஏற்றுமதி இலாபங்கள், வருமானம் என்பன மீது செலுத்தப்படற்பாலதான வருமான வரியிலிருந்து, குறித்துரைக்கப்பட்ட பணத்தொகையின் ஐம்பது சதவீதத்திற்குச் சமமான பணத்தொகை ஒன்றின் கழிப்பனவொன்றிற்கு உரித்துடையதாதல் வேண்டும்;

இப்பிரிவின் நோக்கங்களுக்காக—

(அ) ''ஏற்றுமதி மொத்த விற்பனை வரவு'', ''ஏற்றுமதி இலாபங்களும் வருமானமும்'' என்பன, 20 ஆம் பிரிவிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஆ) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாக ''குறித்துரைக்கப்பட்ட பணத்தொகை'' என்பது—

(i) வதிவுள்ள கம்பனியொன்றின் விடயத்தில், அந்த வரிமதிப்பீட்டாண்டுக்காக அக்கம்பெனியின் மொத்த இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் அக்கம்பெனியின் ஏற்றுமதி இலாபங்களும் வருமானமும் என்ன விகிதாசாரத்தினைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்தை, 82 ஆம் பிரிவின் கீழ் அல்லது 83 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் நிவாரணத்தைக் கழித்த பின்னர், 33 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அக்கம்பெனியால் கொடுக்கற்பாலதான வருமான வரிக்கு எந்தப் பணத்தொகை கொண்டுள்ளதோ அந்தவொரு பணத்தொகை என்றும்; அத்துடன்

(2) வதிவற்ற கம்பெனியொன்றின் விடயத்தில், அந்த வரிமதிப்பீட்டாண்டுக்காக அக்கம்பெனியின் மொத்த இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் அக்கம்பெனியின் ஏற்றுமதி இலாபங்களும் வருமானமும் என்ன விகிதா சாரத்தினைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்தை, 82 ஆம் பிரிவின் கீழ் அல்லது 83 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் நிவாரணத்தைக் கழித்த பின்னர், 34 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் கீழ் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அக்கம்பெனியினால் கொடுக்கற்பாலதான வருமான வரிக்கு எந்தப் பணத் தொகை கொண்டுள்ளதோ அந்தப் பணத் தொகை எனவும்,

பொருளாகும்.''.

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 92அ ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 92அஅ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

'விபரத் திரட்டுகளும் ஏனைய ஆவணங்களும், தேசிய ஆளடையாள அட்டை இலக்கத்தை அல்லது கடவுச்சீட்டு இலக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்

92அஅ. 1985 ஆம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்கு, இச்சட்டத்தின் கீழ் வருமானவரி, செல்வ வரி அல்லது கொடைவரி இறுக்கப்படுவதற்குரிய தனியாள் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக—

(அ) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டிற்கான அவரது வருமானம், செல்வம் அல்லது கொடை பற்றிய விபரத் திரட்டில் பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்டுதல் வேண்டும்:—

(1) ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தெட்டாம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்படுவதற்கு ஆளாக வுள்ளவராயின், அவரது ஆளடையாள அட்டை இலக்கம்; அல்லது

(2) மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்படுவதற்கு ஆளாகாராயின், நடப்பிலுள்ள இவரது கடவுச்சீட்டு இலக்கம்;

(ஆ) கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அமைச்சரால் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கொடுக்கல் வாங்கல் தொடர்பான ஆவணங்களில் இச்சட்டத்தினது ஏற்பாடுகளின் ஒப்புரவான நிருவாகத்தை உறுதிப்படுத்துவதற்கான தேவையைக் கருத்திற் கொண்டு, பின்வருவனவற்றைச் சுட்டிக் காட்டுதல் வேண்டும்:—

(1) மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் அவர் பதிவு செய்யப்படுவதற்கு ஆளாகவுள்ளாராயின், அவரது, ஆளடையாள அட்டை இலக்கம்; அல்லது

(2) மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் அவர் பதிவு செய்யப்படுவதற்கு ஆளாகாராயின், நடப்பிலுள்ள அவரது கடவுச்சீட்டு இலக்கம்.''.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 97 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும், உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலும், (2) ஆம் உட்பிரிவிலும் அடங்கியுள்ள எது எப்படியிருப்பினும், 33 (1) (ஆ) என்னும் பிரிவின் கீழ், இலங்கையில் வதிவுள்ள ஏதேனும் கம்பெனியால், 1985, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில் அத்தகைய கம்பெனியால் பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கிலாபங்கள் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான வரியின் முழுத் தொகையும் அத்தகைய பங்கிலாபங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட தேதியை அடுத்துவரும் 30ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.''.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 125 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(1அ) பிரிவு 97 (3) என்பதில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ஒரு கம்பெனியால் செலுத்தப்படற்பாலதான வரியின் முழுத் தொகையும் அல்லது அத்தகைய வரியின் பாகம் அவ்வாறு செலுத்தப்படாதவிடத்து, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அத்தகைய வரி அல்லது அதன் பாகம் தவணை தவறியதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கம்பெனியும் தவணை தவறியதாகக் கருதப்படுதலும் வேண்டும்.'';

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற்கான காப்பு வாசகத்தின் (ii) ஆம் பந்தியில், ''செலுத்துவதற்கு ஆளாதலாகாது;'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''செலுத்துவதற்கு ஆளாதலாகாது.''

இப்பந்தியின் நோக்கத்துக்காக, கம்பெனியொன்று தொடர்பாக, 1985 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கான வருமான வரியானது, 33 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ், அந்த வரி மதிப்பீட்டாண்டில் அந்தக் கம்பெனியால் செலுத்தப்படற்பாலதான வரியை உள்ளடக்குதலாகாது.''. என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 131 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(1அ) ஆளொருவர், தவணை தவறியவருக்காக அத்துடன் (இப் பிரிவில் ''கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர் அல்லது வைத்திருப்பவர்கள்'' எனக் குறிப்பீடு செய்யப்படுபவரான) வேறெவரேனும் ஆளுக்காக அல்லது கூட்டாகவுள்ள ஆட்களுக்காக அல்லது அவர்களின் பொருட்டுப் பணத்தை வைத்திருக்குமிடத்து எந்தக் கூட்டுக் கணக்குத் தவணை தவறியவரால் செலுத்தப்பட்ட உதவு தொகைகளுக்குச் சாட்டப்படக்கூடியதென உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்பட்டு அவ்வாறு உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியால் சான்றுப்படுத்தப்பட்டுள்ளதோ அந்தக் கூட்டுக் கணக்கிலுள்ள பணங்களிலிருந்து அல்லது அத்தகைய பணங்களின் அத்தகைய பாகத்திலிருந்து தவணை தவறிய வரித் தொகையை அல்லது அதன் பாகத்தை (1) ஆம் உட்பிரிவின் கீழான ஓர் அறிவித்தலில் பெயர் குறிக்கப்பட்ட அலுவலருக்குச் செலுத்துமாறு அத்தகைய ஆளைத் தேவைப்படுத்துகின்றதான அந்த அறிவித்தலை அத்தகைய ஆளுக்கு ஆணையாளர் தலைமையதிபதியானவர் கொடுக்கலாம்:

ஆயின்—

(அ) (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலுக்கிணங்கப் பணத்தை அனுப்பி வைக்கின்றவரான ஆளொவ்வொருவரும் ஏனைய கூட்டுக் கணக்கு வைத்திருப்பவரொவ்வொருவருக்கும் அத்தகைய நிகழ்வு பற்றி அறிவித்தல் வேண்டும்;

(ஆ) தவணை தவறியவர் தவிர்ந்த கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர் ஒவ்வொருவரும் எந்தத் தேதியன்று (அ) என்னும் பந்தியின் கீழ் அறிவிப்பொன்றைப் பெற்றுக்கொள்கின்றாரோ அந்தத் தேதியிலிருந்து 2 கிழமைகளுக்குள், ஆணையாளர் தலைமையதிபதியால் அறிவித்தல் வழங்கப்பட்ட தேதியிலுள்ளவாறாக அத்தகைய கூட்டுக் கணக்கில் உள்ள மிகுதிக்கான தேறிய உதவு தொகையைக் குறித்து நிற்கின்ற அத்தகைய அனுப்பு தொகையின் ஏதேனும் பாகம் தொடர்பில் உரிமைக் கோரிக்கையொன்றை உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்யலாமென்பதுடன், ஆணையாளர் தலைமையதிபதியானவர், அத்தகைய உரிமைக் கோரிக்கையைச் சீர்தூக்கிப் பார்த்தலும், அத்துடன் அதன் மீது தமது கட்டளையை ஆக்குதலும் வேண்டும்;

(இ) பந்தி (ஆ) என்பதன் கீழ் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியால் ஆக்கப்பட்ட கட்டளையினால் இன்னலுறும் கூட்டுக் கணக்கு வைத்திருப்பவரொவ்வொருவரும், அவரால் கொடுக்கப்பட்ட உதவு தொகைகளுக்குச் சாட்டப்படக் கூடியதாக அவர் உரிமை கொருகின்றதான அத்தகைய பணத்தை அல்லது அத்தகைய பணத்தின் பாகத்தை அறவிடுவதற்கான கட்டளையொன்றை நாடுகின்ற வழக்கை மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கலாம்.

(68 ஆம் அத்தியாயமான) காலவிதிப்புக் கட்டளைச் சட்டத்திலுள்ள ஏதேனும் ஏற்பாடு எப்படியிருப்பினும், ஆணையாளர் தலைமையதிபதியால் அவருக்கு அறிவித்தல் வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடைந்த பின்னர் அத்தகைய பணத்தின் அல்லது அத்தகைய பணத்தினது பாகத்தின் அறவீட்டுக்காக வழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.''.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 149 ஆம் பிரிவு, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(6) முப்பத்தைந்தாம் பிரிவிலும், 38 ஆம் பிரிவிலும் முரணுக எது எவ்வாறிருப்பினும், 82 (1) ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டதான, இலங்கை அரசாங்கத்திற்கும், எந்த நாட்டில் வதிவற்ற பங்குதாரர் ஒருவர் வதிபவராகவுள்ளாரோ, அந்த நாட்டின் அரசாங்கத்திற்குமிடையேயான ஓர் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட பங்கிலாபங்கள் மீதான வரி வீதத்தை விஞ்சியதாக, வதிவுள்ள கம்பெனியொன்றினுல் அத்தகைய பங்கு தாரருக்குச் செலுத்தப்பட்டதொரு பங்கிலாபம் தொடர்பில், 38 ஆம் பிரிவிற்கிணங்கக் கழிக்கப்பட்ட வரியெதுவும், எந்த ஆண்டில் அத்தகைய வரி கழிக்கப்பட்டதோ அந்த ஆண்டின் முடிவிலிருந்து மூன்று ஆண்டு களுக்குள் அல்லது எந்தத் தேதியன்று அத்தகைய உடன்படிக்கை வலுவுக்கு வருகின்றதோ அந்தத் தேதியிலிருந்து ஓராண்டிற்குள், இவற்றுள் எது பிந்தியதோ அக்காலப் பகுதிக்குள், எழுத்தில் உரிய முறையில் செய்யப்பட்ட உரிமைக் கோரிக்கையொன்றின்மீது, அத்தகைய பங்குதாரருக்கு மீளளிக்கப் படுதல் வேண்டும்.".

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 151 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியிலுள்ள "அல்லது 92 (1) ஆம் அல்லது 127 (2) ஆம்" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக "அல்லது 92 (1) ஆம் அல்லது 92அஅ ஆம் அல்லது 127 (2) ஆம்" என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் 158 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச் சட்டவாக்கத்தின் 158அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

'உண்ணுட்டரசிறை ஊக்குவிப்பு நிதியம்

158அ. (1) உண்ணுட்டரசிறை ஊக்குவிப்பு நிதியம் என அழைக்கப்படுவதும், இதனகத்துப் பின்னர் இப்பிரிவில் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டு சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கு கின்ற ஒவ்வோர் ஆண்டு தொடர்பிலும், நிதியத்தின் நோக்கங் களுக்காக ஆண்டு தோறும் பாராளுமன்றத்தினுல் ஒதுக்கீடு செய் யப்படக்கூடியவாறுன அத்தகைய பணத் தொகைகள் நிதியத்திற் குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண் டும்:—

(அ) அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் திட்டத் திற்கிணங்க, உண்ணுட்டரசிறைத் திணைக்கள அலு வலர்களின் நலனுக்குத் தேவைப்படும் எல்லாப் பணத் தொகைகளும்; அத்துடன்

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதியால் நிருவகிக்கப்படும் சட்டம் எதனதும் நிருவாகத்தில் திறமையை உறுதிப் படுத்துவதற்காக, அமைச்சரால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான அத்தகைய திட்டத்திற்கிணங்க, உண் ணாட்டரசிறைத் திணைக்கள அலுவலரின் எவரேனும் வகுப்பினருக்கான அல்லது எவரேனும் வகுதியினருக் கான தொகுதி ஊக்குவிப்புப் படிகள்.

(4) ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அவரால் அதற் கெனச் சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்ட உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் எவரேனும் அலுவலர், விதித்துரைக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கிணங்க நிதியத்தை நிருவகித்தல் வேண் டும்.''.

31. முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவு இத்தால் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது:—

(1) ''அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி'' என்பதன் வரைவிலக்கணத்தின் (2) ஆம் பந்தியில், ''கம்பெனிகள் (கணக்காய்வாளர்கள்) ஒழுங்கு விதிகளின் கீழ்க் கணக்காய்வாளர் ஒருவராகப் பதிவு செய்யப்பட்ட தனியார் ஒருவராக இருந்து கொண்டு ஆணையாளர் தலைமையதிபதி யினால் அங்கீகரிக்கப்பட்டவராகவும்'' என்னும் சொற்களுக்குப் பதி லாக ''அதற்கென ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ்க் கணக்காய் வாளர் தலைமையதிபதியால் அங்கீகரிக்கப்பட்டவராகவும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்'';

(2) ''தொழில்'' என்பதன் வரைவிலக்கணத்தில் ''கம்பெனியொன்று வர்த் தக வளவுகளை வாடகைக்கு விடுவதனையும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''கம்பெனி ஒன்று வர்த்தக நோக்கங்களுக்காக வளவுகளை வாடகைக்கு விடுவதனையும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

32. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையானது இத் தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அந்த அட்டவணையின் பாகம் IIஅ என்பதில் உள்ள ''1984 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கான'' என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக ''1984 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரி மதிப்பீட் டாண்டிற்கான'' என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலமும்;

(ஆ) இந்த அட்டவணையின் பாகம் IIஅ என்பதை உடனடுத்துப் பின்வரும் பாகத்தை உட்புகுத்துவதன் மூலமும்:—

''பாகம் IIஆ

1985 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கான வருமானவரி வீதம் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:—

| | | | வரிவீதம் |
|---|---|---|---|
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் முதல் | 9,000 | ரூபாவுக்கு— | $7\frac{1}{2}$ வீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த | 9,000 | ரூபாவுக்கு— | 10 வீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த | 9,000 | ரூபாவுக்கு— | 15 வீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த | 9,000 | ரூபாவுக்கு— | 20 வீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த | 9,000 | ரூபாவுக்கு— | 25 வீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த | 9,000 | ரூபாவுக்கு— | 30 வீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த | 9,000 | ரூபாவுக்கு— | 35 வீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த | 9,000 | ரூபாவுக்கு— | 40 வீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த | 15,000 | ரூபாவுக்கு— | 45 வீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த | 15,000 | ரூபாவுக்கு— | 50 வீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் மிகுதிக்கு | | | —55 வீதம்''; |

அத்துடன்

(இ) அட்டவணையின் பாகம் IV என்பதை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:—

''பாகம் IV

32 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஊழியத்திலிருந்து கிடைக்கும் குறித்த சில இலாபங்களுக்கு ஏற்புடையனவான வருமானவரி வீதங்கள்—

(அ) 1979, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கும் அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின்னுறும் ஐந்து வரிமதிப்பீட்டாண்டுகளுக்கும்—

| | |
|---|---|
| முதல் 50,000 ரூபாவுக்கு | இல்லை |
| அடுத்த 25,000 ரூபாவுக்கு | 5 வீதம் |
| அடுத்த 25,000 ரூபாவுக்கு | 10 வீதம் |
| மிகுதியின் மீது | 15 வீதம் |

(ஆ) 1985, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு—

| | |
|---|---|
| முதல் 100,000 ரூபாவுக்கு | இல்லை |
| அடுத்த 50,000 ரூபாவுக்கு | 5 வீதம் |
| அடுத்த 50,000 ரூபாவுக்கு | 10 வீதம் |
| மிகுதியின் மீது | 15 வீதம்'' |

*33.* முதன்மைச் சட்டவாக்கத்தின் மூன்றும் அட்டவணையானது, அந்த அட்டவணையின் *(3)* ஆம் விடயத்தை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''*(3)* (இறுதி விருப்பாவணங்களின் கீழான நம்பிக்கைப் பொறுப்பாளர் தவிர்ந்த) நிறைவேற்றுநரும், (ஒழிப்போர் தவிர்ந்த) பெறுநரும் (இறுதி விருப்பாவணங்களின் கீழான நம்பிக்கைப் பொறுப்பாளர் தவிர்ந்த) நிறைவேற்றுநரினதும் (ஒழிப்போர் தவிர்ந்த) பெறுநரினதும் வரிவிதிக்கற்பாலதான வருமானம்—

*(1)* ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டு, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கும், அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின்னுறும் ஐந்து ஆண்டுகளுள் ஒவ்வொன்றிற்கும் ...30 வீதம்

*(2)* ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டு, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டு எதற்கும் ...40 வீதம்''

*34.* முதன்மைச் சட்டவாக்கத்திற்கான நான்காம் அட்டவணையானது, *(1)* ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''*(1)* ஒரு தரும நிறுவனம், அல்லது இலங்கையில் அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கின்ற வதிவற்ற கம்பெனி தவிர்ந்த எவரேனும் ஆளுக்கு—

*(அ)* 1979, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கும், அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின்னுறும் ஐந்து வரிமதிபீட்டாண்டுகளுக்கும்—

வரிவிதிக்கற்பாலதான செல்வத்தின் முதல் 200,000 ரூபாவுக்கு — $\frac{1}{2}$ வீதம்

வரிவிதிக்கற்பாலதான செல்வத்தின் அடுத்த 500,000 ரூபாவுக்கு — $\frac{3}{4}$ வீதம்

வரிவிதிக்கற்பாலதான செல்வத்தின் அடுத்த 1,000,000 ரூபாவுக்கு — 1 வீதம்

வரிவிதிக்கற்பாலதான எல்லாச் செல்வத்தின் மிகுதியின்மீதும் — 2 வீதம்

*(ஆ)* 1985, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டு எதற்கும்—

வரிவிதிக்கற்பாலதான செல்வத்தின் முதல் 500,000 ரூபாவுக்கு — $\frac{1}{2}$ வீதம்

வரிவிதிக்கற்பாலதான செல்வத்தின் அடுத்த 1,000,000 ரூபாவுக்கு — $\frac{3}{4}$ வீதம்

வரிவிதிக்கற்பாலதான செல்வத்தின் அடுத்த 1,500,000 ரூபாவுக்கு — 1 வீதம்

வரிவிதிக்கற்பாலதான எல்லாச் செல்வத்தின் மிகுதியின் மீதும் — 2 வீதம்''

35. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஐந்தாம் அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது:—

''ஐந்தாம் அட்டவணை

(பிரிவு 51)

கொடை வரி வீதங்கள்

1அ. 1979, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கும், அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின்னுறும் ஐந்து வரிமதிப்பீட்டாண்டுகளுள் ஒவ்வொன்றுக்கும் தனியாட்களுக்கு:—

| | |
|---|---|
| வரிவிதிக்கற்பாலதான எல்லாக் கொடைகளின் பெறுமதியில் முதல் 50,000 ரூபாமீது | இல்லை |
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளின் பெறுமதியில் அடுத்த 100,000 ரூபாமீது | 5 வீதம் |
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளின் பெறுமதியில் அடுத்த 100,000 ரூபாமீது | 10 வீதம் |
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளின் பெறுமதியில் அடுத்த 100,000 ரூபாமீது | 15 வீதம் |
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளின் பெறுமதியில் அடுத்த 100,000 ரூபாமீது | 20 வீதம் |
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளின் பெறுமதியில் அடுத்த 100,000 ரூபாமீது | 25 வீதம் |
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளின் பெறுமதியில் அடுத்த 200,000 ரூபாமீது | 30 வீதம் |
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளின் பெறுமதியில் அடுத்த 200,000 ரூபாமீது | 35 வீதம் |
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளின் பெறுமதியில் அடுத்த 200,000 ரூபாமீது | 40 வீதம் |
| எல்லா வரிவிதிக்கப்பாலதான கொடைகளின் பெறுமதியில் அடுத்த 200,000 ரூபாமீது | 45 வீதம் |
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளின் பெறுமதியில் அடுத்த 200,000 ரூபாமீது | 50 வீதம் |
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளின் பெறுமதியில் அடுத்த 500,000 ரூபாமீது | 55 வீதம் |
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளின் பெறுமதியில் அடுத்த 500,000 ரூபாமீது | 60 வீதம் |
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளின் பெறுமதியில் மிகுதியின் மீதும் | 70 வீதம் |

1ஆ. 1985, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, தனியாட்களுக்கு:—

| | |
|---|---|
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளின் பெறுமதியில் முதல் 250,000 ரூபாமீது | இல்லை |
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளின் பெறுமதியில் அடுத்த 250,000 ரூபாமீது | 5 வீதம் |
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளின் பெறுமதியில் அடுத்த 250,000 ரூபாமீது | 10 வீதம் |
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளின் பெறுமதியில் அடுத்த 250,000 ரூபாமீது | 15 வீதம் |
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளின் பெறுமதியில் அடுத்த 250,000 ரூபாமீது | 20 வீதம் |
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளின் பெறுமதியில் அடுத்த 250,000 ரூபாமீது | 25 வீதம் |
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளின் பெறுமதியில் அடுத்த 500,000 ரூபாமீது | 30 வீதம் |
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளின் பெறுமதியில் அடுத்த 500,000 ரூபாமீது | 35 வீதம் |
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளின் பெறுமதியில் அடுத்த 500,000 ரூபாமீது | 40 வீதம் |
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளின் பெறுமதியில் அடுத்த 500,000 ரூபாமீது | 45 வீதம் |
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளின் பெறுமதியில் மிகுதிகள்மீது | 50 வீதம் |

(2) கம்பெனிகளுக்கு:

| | |
|---|---|
| எல்லா வரிவிதிக்கற்பாலதான கொடைகளினது பெறுமதியின் மீதும் | 50 வீதம்'' |

36. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுவுக்கு விலக்களிக்கின்றதான இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தில் செய்யப்பட்ட திருத்தமானது, எல்லா நோக்கங்களுக்காகவும், முதன்மைச் சட்டவாக்கம் தொடங்கிய தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

## 1985 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, மரணச்சொத்து வரி (திருத்த)ச் சட்டம்

*[1985, ஒத்தோபர் மாதம் 22 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

### 1980 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, மரணச்சொத்து வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

*1.* இச்சட்டமானது *1985* ஆம் ஆண்டின் *41* ஆம் இலக்க, மரணச் சொத்து வரி (திருத்த)ச் சட்டமென எடுத்துக் காட்டப்படலாம்.

*2.* இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும், *1980* ஆம் ஆண்டின் *13* ஆம் இலக்க, மரணச் சொத்து வரிச் சட்டத்தின் *3* ஆம் பிரிவானது, அப்பிரிவின் *(1)* ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது:—

''*(1)* எவரேனும் ஆளினது மரணச் சொத்தினது பெறுமதியின்மீது செலுத்தப்படற்பாலதான மரணச் சொத்து வரித் தொகையானது—

*(அ)* அவ்வாள், *1978* ஆம் ஆண்டு நவம்பர் *15* ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னரும், *1984* நவம்பர் *15* க்கு முன்னரும் மரணமெய்துகின்றபோது, இச்சட்டத்திற்கான அட்டவணையின் பாகம் I இல் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில் கணிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

*(ஆ)* அவ்வாள் *1984* ஆம் ஆண்டு நவம்பர் *15* ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் மரணமெய்துகின்றபோது, இச் சட்டத்திற்கான அட்டவணையின் பாகம் II இல் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில் கணிக்கப்படுதல் வேண்டும்.''.

*3.* முதன்மைச் சட்டவாக்கத்தின் II ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டுப் பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது:—

'வதிவிடவளவு ஒன்றுக்கு விலக்களிப்பு

*11.* *(1) 1984* ஆம் ஆண்டு நவம்பர் மாதம் *15* ஆந் தேதிக்கு முன்னர் மரணமெய்துகின்ற எவரேனும் ஆளினது, மரணத்தின்மேல் கைமாறும் ஆதனம் எவையேனும் வதிவிட வளவுகளையும் உள்ளடக்குமிடத்து அத்தகைய வளவுகளில் ஒன்றின் பெறுமதி மூன்று இலட்சம் ரூபாவுக்குச் சமமாயின் அல்லது மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சுமெனின் அத்தகைய வளவின் பெறுமதியில் மூன்று இலட்சம் ரூபாத் தொகை அல்லது அத்தகைய வளவின் பெறுமதி மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாததெனின், அத்தகைய வளவின் பெறுமதி, மரணச்சொத்து வரிக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) 1984 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் மரணமெய்துகின்ற எவரேனும் ஆளினது மரணத்தின்மேல் கைமாறும் ஆதனம் எவையேனும் வதிவிட வளவுகளேயும் உள்ளடக்குமிடத்து, அத்தகைய வளவுகளில் ஒன்றின் பெறுமதி மரணச்சொத்து வரிக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.''.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டுப் பின்வரும் பிரிவானது அதற்குப் பதிலாக இடப்படுகின்றது:—

'வெளிநாட்டு மரணச் சொத்துவரி தொடர்பான நிவாரணம்

19. மரணமெய்தியவரினது மரணச் சொத்தின் பாகமாக அமையும் ஆதனமானது வெளிநாட்டொன்றில் அமைந்திருக்குமிடத்தும், அந்த ஆதனம் தொடர்பாக அந்த நாட்டில் மரணமெய்தியவரின் மரணத்தின்மேல் ஏதேனும் வரி செலுத்தப்பட வேண்டியதாகவுள்ளதென ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியடையுமிடத்தும், அவர்—

(1) 1984 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆந் தேதிக்கு முன்னர் மரணமெய்துகின்ற எவரேனும் ஆளின் விடயத்தில், அத்தகைய ஆதனத்தின் பெறுமதியைத் தீர்மானிப்பதில்,

(அ) அந்த நாட்டில் செலுத்தப்படவேண்டிய வரித் தொகை, அல்லது

(ஆ) அந்த நாட்டில் அமைந்துள்ள ஆதனத்தின் பெறுமதி மரணச்சொத்தின் பெறுமதிக்கு எந்த விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அந்த விகிதாசாரத்துக்குச் சமமான அந்த மரணச் சொத்தினது பெறுமதியின்மீது இச்சட்டத்தின் கீழ்ச் செலுத்தப்பட வேண்டிய மரணச் சொத்து வரியின் அத்தகைய விகிதாசாரத் தொகை,

இவற்றுள் எத்தொகை குறைவானதோ, அதற்குச் சமமான தொகையினைக் கழிக்க அனுமதித்தல் வேண்டும்;

(2) 1984, நவம்பர் 15 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் மரணமெய்துகின்ற எவரேனும் ஆளின் விடயத்தில்,

(அ) அந்த வெளிநாட்டில் செலுத்தப்பட வேண்டிய வரித்தொகை; அல்லது

(ஆ) 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் கண்டறியப்பட்ட, அத்தகைய ஆதனம் தொடர்பில் இலங்கையில் செலுத்தப்பட வேண்டிய வரித்தொகை;

இவற்றுள் எத்தொகை குறைவானதோ, அதற்குச் சமமான தொகையினை இச்சட்டத்தின் கீழ்ச் செலுத்தப்பட வேண்டிய மரணச்சொத்து வரித்தொகையிலிருந்து கழித்தல் வேண்டும்.''.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவானது, அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(3) எவரேனும் ஆளுக்கு எழுத்திலான அறிவித்தல் மூலம், அவரது அறிவுக்குட்பட்டதும், இப்பிரிவின் மேற்போந்த ஏற்பாடுகளின்கீழ்ச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டதுமான மரணமெய்திய ஆளினது மரணச்சொத்துத் தொடர்பான அத்தகைய விவரங்களைக்கொண்ட விவரத்திரட்டு ஒன்றை அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள், சமர்ப்பிக்குமாறு அவரைத் தேவைப்படுத்தும் அத்தகைய அறிவித்தலை, வரிமதிப்பீட்டாளர் கொடுக்கலாம்.''.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், ''பெற்றுக்கொள்ளப்பட்ட'' என்ற சொல்லுக்குப் பதிலாக, ''பெற்றுக்கொள்ளப்படவேண்டிய'' என்ற சொல்லை இடுவதன் மூலமும், அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (II) ஆம் உட்பந்தியில், ''ஒரு பாதிக்கு' என்ற சொற்களுக்குப் பதிலாக ''இருபதினாயிரம் ரூபாவுக்கு'' என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(4) ஓராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தலொன்று எவ்வாளுக்கு அனுப்பப்பட்டதோ அவ்வாள், மரணச்சொத்தின் கணக்கில் ஏதேனும் பணத்தைக் கொண்டிருக்கவில்லையென்ற அல்லது மரணச்சொத்துக்கு எவையேனும் கடன்களைக் கொடுக்கவேண்டியவராக இருக்கவில்லையென்ற அல்லது மரணச்சொத்துக்கு அவர் கொடுக்க வேண்டியதாகவுள்ள ஏதேனும் கடன் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் வருமதியாக இருக்கவில்லையென்ற; நிகழ்வு காரணமாக அதற்கு இணங்கியொழுக இயலாதவராக இருந்தால், அத்தகைய ஆள் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள்ளாக ஆணையாளர் தலைமையதிபதிக்கு அந்நிகழ்வுகள் பற்றித் தெரியப்படுத்தும் வெளிப்படுத்துகையொன்றைச் செய்தல் வேண்டும்.

*(5)* ஒராம் உட்பிரிவின்கீழ்க் கொடுக்கப்பட்ட அறிவித்தல் மூலம் செலுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் பணத் தொகை, அத்தகைய அறிவித்தலுக்கிணங்கச் செலுத்தப்பட்டிருக்காதவிடத் தும், *(4)* ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய அறிவித்தல் தொடர்பான வெளிப்படுத்துகை எதுவும் ஆக்கப்பட்டிருக்காதவிடத்தும், அத்தகைய பணத்தொகை அத்தகைய ஆளிடமிருந்து வருமதியாகவுள்ள மரணச் சொத்துவரி என்றுற்போன்றும், அத்தகைய மரணச் சொத்துவரி தவறுகைக்குட்பட்டிருந்தது என்றுற்போன்றும், அத்தகைய அறிவித்தல் எவ் வாளுக்குக் கொடுக்கப்பட்டதோ அவ்வாளிடமிருந்து அறவிடப்படுதல் வேண் டும்.''.

*8.* முதன்மைச் சட்டவாக்கத்தின் *58* ஆம் பிரிவானது, அப்பிரிவில், ''நம்பிக்கைப் பொறுப்பாளர்'' என்ற சொல் காணப்படும் இடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக ''நம்பிக்கைப் பொறுப்பாளர், அல்லது வேறு வகையில்'' என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*9.* முதன்மைச் சட்டவாக்கத்தின் *63* ஆம் பிரிவானது ''*26* ஆம் பிரிவின் கீழ் அல்லது *49* ஆம் பிரிவின்கீழ்'' என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''*24*ஆம் பிரிவின்கீழ் அல்லது *26*ஆம் பிரிவின்கீழ் அல்லது *49* ஆம் பிரிவின்கீழ்'' என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*10.* முதன்மைச் சட்டவாக்கத்தின் *78* ஆம் பிரிவானது, அப்பிரிவின் *(1)* ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

*(1)* ''அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி'' என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:—

' ''அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி'' என்பது—

மரணச்சொத்து வரி செலுத்துவதற்குப் பொறுப்பான ஆளொரு வர் தொடர்பாகப் பயன்படுத்தப்படும்பொழுது—

*(அ)* இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அத்தகைய ஆளின் சார் பில் செயலாற்றுவதற்கென, எழுத்தில் அதிகாரமளிக்கப் பட்ட எவரேனும் தனி நபர் எனப் பொருள்படுவதுடன்,

அவ்வாள்—

எச்சந்தர்ப்பத்திலும்,

*(1)* இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப் பினர் ஒருவர்; அல்லது

*(2)* ஆணையாளர் தலைமை அதிபதியால் அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் ஒருவர், அல்லது

*(3)* சட்டத்தரணி ஒருவர், அல்லது

*(4)* அத்தகைய ஆளினால் கிரமமான ஊழியத்துக்கமர்த்தப் பட்ட ஊழியரொருவர், அல்லது

*(5)* அத்தகைய ஆளின் உறவினர் ஒருவர் என்றும் பொருள் படும்.

(ஆ) அதிகாரவளிப்பில் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அவரது சார்பில் செயலாற்றுவதற்கென அத்தகைய ஆளினுல் காலத்துக்குக்காலம் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டவரும், அதன் சார்பாக ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியால் அங்கீகரிக்கப்பட்டவருமான தனிநபர் ஒருவர் என்றும் பொருள்படும்;'';

(2) ''ஆணையாளர் தலைமையதிபதி'' என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:—

' ''ஆணையாளர் தலைமையதிபதி'' என்பது 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணுட்டரசிறைச் சட்டத்தின்கீழ், நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட, உண்ணுட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி என்று பொருள்படுவதுடன், ஆணையாளர் தலைமையதிபதியின் சார்பில் செயலாற்றுவதற்கென ஆணையாளர் தலைமை அதிபதியால், பொதுவாக அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்துக்கு விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஆணையாளரொருவரையும் பிரதி ஆணையாளரொருவரையும் உள்ளடக்கும்;''.

11. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது:—

''அட்டவணை

பாகம் I

| பந்தி I<br>(மரணச்சொத்தின் பெறுமதி) | பந்தி II<br>(வரி வீதம்) |
|---|---|
| மரணச்சொத்துப் பெறுமதியில் முதல் 100,000 ரூபாவுக்கு | இல்லை |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 100,000 ரூபாவுக்கு— | 5 நூற்று வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 100,000 ரூபாவுக்கு— | 10 நூற்று வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 100,000 ரூபாவுக்கு— | 15 நூற்று வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 100,000 ரூபாவுக்கு— | 20 நூற்று வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 100,000 ரூபாவுக்கு— | 25 நூற்று வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 200,000 ரூபாவுக்கு— | 30 நூற்று வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 200,000 ரூபாவுக்கு— | 35 நூற்று வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 200,000 ரூபாவுக்கு— | 40 நூற்று வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 200,000 ரூபாவுக்கு— | 45 நூற்று வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 200,000 ரூபாவுக்கு— | 50 நூற்று வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 300,000 ரூபாவுக்கு— | 55 நூற்று வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 500,000 ரூபாவுக்கு— | 60 நூற்று வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 500,000 ரூபாவுக்கு— | 65 நூற்று வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் மீதிக்கு | 70 நூற்று வீதம் |

பாகம் II

| பந்தி I | பந்தி II |
|---|---|
| (மரணச்சொத்தின் பெறுமதி) | (வரி வீதம்) |
| மரணச்சொத்துப் பெறுமதியில் முதல் 250,000 ரூபாவுக்கு | இல்லை |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 250,000 ரூபாவுக்கு— | 5 நூற்று வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 250,000 ரூபாவுக்கு— | 10 நூற்று வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 250,000 ரூபாவுக்கு— | 15 நூற்று வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 250,000 ரூபாவுக்கு— | 20 நூற்று வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 250,000 ரூபாவுக்கு— | 25 நூற்று வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 500,000 ரூபாவுக்கு— | 30 நூற்று வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 500,000 ரூபாவுக்கு— | 35 நூற்று வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 500,000 ரூபாவுக்கு— | 40 நூற்று வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் அடுத்த 500,000 ரூபாவுக்கு— | 45 நூற்று வீதம் |
| மரணச்சொத்துப் பெறுமதியில் மீதிக்கு | 50 நூற்று வீதம் |

## 1985 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

*[1985, திசெம்பர் மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1986 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், அந்நிதியாண்டின்போது அரசாங்கத்தின் குறித்த சில முயற்சிகள் தொடர்பில் நிதி ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய முயற்சிகளின் செலவினத்திற்குக் குறித்த நிதியாண்டின்போது தேவைப்படும் பணங்களைத் திரட்டுநிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணமாகக் கொடுப்பதை இயலச்செய்வதற்கும், திரட்டு நிதியத்திற்கு அப்பணங்களைத் திருப்பிக்கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், முற்கூறிய கருமங்களுடன் தொடர்பான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டம்.**

1. இச்சட்டம் 1985 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (1) இச்சட்டத்தில், ''நிதியாண்டான 1986 ஆம் ஆண்டு'' எனக் குறிப்பீடு செய்யப்படுவதும் 1986 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் தேதி தொடங்கி 1986 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் தேதியன்று முடிவடைவதுமான காலத்துக்கான சேவைக்காக ஐயாயிரத்து அறுபத்தெட்டுக் கோடி ஐந்து இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபாவென மதிப்பிடப்படும் அரசாங்கத்தின் செலவினத் தொகையானது, செலவினம் எதற்கும் அதிகாரமளிக்கும் வேறு சட்டமெதற்கும் பங்கமின்றி—

(அ) திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்தின் அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து வழங்கப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளிலிருந்தும், அத்துடன்

(ஆ) அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் இலங்கையிலோ, வெளிநாட்டிலோ திரட்டப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடன்களின் வரும்படியிலிருந்தும்

பெறப்படல் வேண்டும்.

எவ்வாறாயினும் அத்தகைய வரும்படியின் கூட்டு மொத்தத் தொகையானது இரண்டாயிரத்து எண்ணூற்றிமூன்று கோடி அறுபது இலட்சம் ரூபாவினை விஞ்சுதலாகாது. இதன்கண், முன்னர் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஐயாயிரத்து அறுபத்தெட்டுக் கோடி ஐந்து இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா கொண்ட பணத் தொகை இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அரசாங்கத்துக்காகவும், அதன் சார்பிலும் கடன் திரட்டுவதற்கு அதிகாரமளிக்கும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றிப் பயனுடையனவாதல் வேண்டும்.

3. (1) நிதியாண்டான 1986 ஆம் ஆண்டின்போது, இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1 ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியிலிருந்தும் அரசாங்கம் பெறும் பெறுகைகள் அத்தகைய முயற்சிகளின் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு வரவு வைக்கப் படும் பெறுகைகளின் கூட்டு மொத்தத் தொகையானது, அந்த அட்டவணையின் III ஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லையிலும் பார்க்கக் குறைந்ததாக இருத்தலுமாகாது. அத்தகைய முயற்சியின் தேறிய மேன்மிகை ஏதேனுமிருப்பின் அத்தேறிய மேன்மிகையானது நிதியாண்டான 1986 ஆம் ஆண்டு முடிவுற்ற பின்னர் ஆறு மாதங்கள் முடிவடை வதற்கு முன்னர், திரட்டு நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான தேறிய மேன்மிகையைக் கணக்கெடுக்கு முகமாகப் பின்வரும் கட்டணங்கள், அவையாவன:—

(அ) முயற்சியினது வருமானத்திற்கு முறைப்படி சாட்டுதல் செய்யப்படற் பாலனவான, கொடுக்கப்பட்டனவாயினுஞ்சரி அல்லது சேர்மானமான வையாயினுஞ்சரி முயற்சியினது தொழிற்பாட்டு, தாபன, மற்றும் ஏனைய செலவுகள், அத்துடன்

(ஆ) முயற்சியினது அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான சொத்தினது தேய்மானத்தை மேவுவதற்கான ஏற்பாடு,

என்பன அத்தகைய ஒவ்வொரு முயற்சியின் வருமானத்திலும் எதிரீடு செய்யப் படல் வேண்டும்.

(3) நிதியாண்டான 1986 ஆம் ஆண்டின்போது, இச்சட்டத்திற்கான இரண் டாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியின் பேரிலும், அரசாங்கத்தால் உறப்படும் செலவினம், அந்த நிதி ஆண்டின்போது அத்தகைய முயற்சியிலிருந்து அரசாங்கம் பெறும் வரவுகளி லிருந்து கொடுபடுதல் வேண்டும். ஆனல், அத்தகைய செலவினம் அந்த அட்ட வணையின் II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லேக்கு மேற்படலாகாது.

(4) நிதியாண்டான 1986 ஆம் ஆண்டின் முடிவில், இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியிலிருந்தும் நிலுவையாகவுள்ள பற்றுமீதி, அந்த அட்டவணையின் IV ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய எல்லே க்கு மேற்படலாகாது. அத்துடன் அந்த நிதியாண்டின் முடிவில் அந்த முயற்சியின் மொத்தப் பொறுப்புகள், அந்த அட்டவணையின் V ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய எல்லேக்கு மேற்படலாகாது.

4. நிதியாண்டான 1986 ஆம் ஆண்டின்போது எப்போதேனும் இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித்துரைக்கப் பட்டுள்ள எவையேனும் முயற்சிகளிலிருந்து அரசாங்கம் பெறும் வரவுகள், அத் தகைய முயற்சியின் மீது அரசாங்கத்தினல் உறப்பட்ட செலவினங்களுக்குப் போதியனவாயிராவிடின், அமைச்சர், அத்தகைய செலவினத்திற்கு அவசியமென அவர் கருதும் அத்தகைய தொகைகள் முற்பணங்களாகத் திரட்டு நிதியத்தி

லிருந்து அல்லது அரசாங்கத்துக்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறே தேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து கொடுபடுதல் வேண்டுமெனக் காலத்துக்குக் காலம் கட்டளை மூலம் பணிக்கலாம். எவ்வாறுயினும், அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்படும் பணத்தொகைகளின் கூட்டு மொத்தத் தொகை, அந்த அட்டவணையின் II ஆம் நிரையிலுள்ள அதன் நேரொத்த பதிவில் குறித் துரைக்கப்பட்டுள்ள செலவினங்களின் ஆகக் கூடிய எல்லைக்கு மேற்படாமலிருத் தல் வேண்டும். அத்தகைய முயற்சி சம்பந்தமாக அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை அமைச்சராற் கட்டளை மூலம் பணிக் கப்படக்கூடிய அத்தகைய முறையில் திரட்டு நிதியத்துக்கு மீண்டும் கொடுபடுதல் வேண்டும்.

5. (1) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் ஏற்பாடுகளின் பய னுக, அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள எந்தத் தலைப்பின் கீழும் தோன் றும் எந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழும், மீண்டுவரும் செலவினத்திற்குப் பகிர்ந் தளிக்கப்பட்டிருந்து, ஆனல் செலவு செய்யப்படாமலும் அல்லது செலவு செய்யப் படுதல் சாத்தியமில்லாமலும் இருக்கும் எவையேனும் பணங்கள், திறைசேரிச் செயலாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலு வலரின் கட்டளை மூலம் அந்நிகழ்ச்சித் திட்டத்திற்குட்பட்ட ஆக்கப்பொருட் செலவினத்திற்கெனச் செய்யும் பகிர்வுக்கு அல்லது அத்தலைப்பிற்குட்பட்ட வேறே தேனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீண்டுவருஞ் செலவினம் அல்லது ஆக்கப் பொருட் செலவினம் என்ற பகிர்வுக்கு மாற்றப்படலாம்.

(2) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தலைப்பின் கீழுள்ள நிகழ்ச்சித் திட்டமெதன் கீழும் ஆக்கப்பொருட் செலவுக்குப் பகிரப்பட்டுள்ள பணங்களெவையும் அப்பகிர்விலிருந்து வேறெதற்கும் மாற்றப்படல் ஆகாது.

6. (1) வரிகளிலிருந்தும் வேறு மூலங்களிலிருந்தும் பெறப்படும் வரவுகள், அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களுக்கு நிதி வசதியளிப்பதற் கென எதிர்பார்க்கப்பட்ட பணத் தொகைகளையும் விடக் குறை வாயிருக்குமென, அல்லது

(2) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு அல்லது நோக்கங்களுக்கு முதலில் ஒதுக்கப்பட்ட பணத் தொகைகள் மேலும் தேவைப்படமாட்டா வென,

அமைச்சர் திருப்திப்படுமிடத்து, திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத் திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து அவரால் வழங்கப்பட்ட ஆணைப் பத்திரத்தின் அதிகாரத்தின் கீழான செலவினத்திற்காக முன்னர் வழங்கப்பட்ட எவையேனும் பணத் தொகைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் முழுமையாக அல்லது பகுதி யளவில் அவர் மீளப்பெறலாம்.

7. (அ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் II ஆம் நிரையிலும் iv ஆம் நிரையிலும் ஆம் V நிரையிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய எல்லைகளுள் எதனையும்,

(ஆ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் III ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லைகளுள் எதனையும்,

அமைச்சர் அரசாங்கத்தின் அங்கீகாரத்தோடு 1987 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கட்டளை மூலம் வேறுபடுத்தலாம் அல்லது மாற்றலாம்.

இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளை எதுவும் பாராளுமன்றத்தால் தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றிப் பயனுடையதாதலாகாது.

அத்தகைய கட்டளை எதுவும் அதன்கண் அவ்விதம் கூறப்பட்டிருந்தால், அதன்கண் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடியதும் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட தேதிக்கு முந்தியதுமான அத்தகைய தேதியிலிருந்து பயனுடையதாயிருந்ததாகக் கருதப்படல் வேண்டும்.

8. பாராளுமன்றமானது, தீர்மானத்தின் மூலம் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையை, அட்டவணையின் தோதான நிரைகளுக்கு ஏதேனும் முயற்சியையும்,

(அ) அத்தகைய முயற்சி தொடர்பிலான எல்லா ஆகக் கூடிய எல்லைகளையும் அல்லது அவற்றுள் எவற்றையும்;

(ஆ) அத்தகைய முயற்சி தொடர்பிலான ஆகக் குறைந்த எல்லையையும்,

சேர்ப்பதன் மூலம் திருத்தலாம்.

## 1985 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, பணச் சட்ட (திருத்த)ச் சட்டம்

*[1985, திசெம்பர் மாதம் 31 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**பணச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

*1.* இச்சட்டம் 1985 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, பணச் சட்ட (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும் பணச் சட்டத்திலும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்திலும் ''சிலோன் மத்திய வங்கி'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இலங்கை மத்திய வங்கி'' என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க, முதன்மைச் சட்டவாக்கத்தினுல் அல்லது அதன் கீழ் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினுல் அல்லது அதன் கீழ் வழங்கப்படும், ஆக்கப்படும், தேவைப்படுத்தப்படும் அல்லது அதிகாரமளிக்கப்படும் ஏதேனும் அறிவித்தலில், செய்தித் தொடர்பில், படிவத்தில் அல்லது வேறு ஆவணத்தில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குறிப்பிடப்படும்போது ''சிலோன் மத்திய வங்கி'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''இலங்கை மத்திய வங்கி'' என்னும் சொற்கள் இடப் படுதலும் வேண்டும்.

*3.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட் பிரிவில், அதன் (ஆ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது:—

''(ஆ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளராக அப்போதைக்குப் பதவி வகிக்கும் ஆள்; அத்துடன்''.

*4.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

'நாணயச் சபையின் ஆளுநராக அல்லது உறுப்பினர் ஒருவராக நியமிக் கப்படுவதற்கான தகைமையீனம்

*(1)* ஆளொருவர்—

*(அ)* பாராளுமன்ற உறுப்பினரொருவராக அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருந்தால்; அல்லது

*(ஆ)* இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினது அரசியலமைப்பின் கருத்தெல்லைக்குட்படப் பகிரங்க அலுவலர் ஒருவராக, அல்லது நீதித்துறை அலுவலர் ஒருவராக, அல்லது எந்தப் பதவிக்கென அல்லது நிலைக்கெனப் பகிரங்க நிதியங்களிலிருந்து அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் நிதியங்களிலிருந்து, சம்பளத்தை அல்லது வேறு ஊதியத்தைப் பெறுகின்றாரோ (கல்வி சார்ந்த நிலை தவிர்ந்த) அந்தப் பதவியை அல்லது நிலையைத் தெரிவு மூலம் அல்லது நியமனம் மூலம் வகிப்பவராக இருந்தால்; அல்லது

(இ) (மத்திய வங்கி தவிர்ந்த) வங்கித்தொழில் நிறுவனம் எதனதும் பணிப்பாளராக, அலுவலராக, ஊழியராக அல்லது பங்குதாரராக இருந்தால்,

மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்படுவதற்குத் தகைமை யற்றவராதல் வேண்டும்.

(2) ஆளொருவர்—

(அ) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவராக இருந்தால்; அல்லது

(ஆ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினது அரசியலமைப்பின் கருத்தெல்லைக்குட்படப் பகிரங்க அலுவலர் ஒருவராக அல்லது நீதித்துறை அலுவலரொருவராக அல்லது எந்தப் பதவிக்கென அல்லது நிலைக்கென பகிரங்க நிதியங்களிலிருந்து அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் நிதியங்களிலிருந்து சம்பளத்தை அல்லது வேறு ஊதியத்தைப் பெறுகின்றாரோ (கல்வி சார்ந்த நிலை தவிர்ந்த) அந்தப் பதவியை அல்லது நிலையைத் தெரிவு மூலம் அல்லது நியமனம் மூலம் வகிப்பவராக இருந்தால்; அல்லது

(இ) (மத்திய வங்கி தவிர்ந்த) வங்கித் தொழில் நிறுவனம் எதனதும் பணிப்பாளராக, அலுவலராக, ஊழியராக அல்லது பங்குதாரராக இருந்தால்,

8 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் நாணயச் சபை உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.''

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

''(1) மத்திய வங்கியின் ஆளுநர், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது விதப்புரையின் மேல் சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டும்.''; அத்துடன்

(2) அதன் (2) ஆம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத்தில் ''ஏதேனும் கல்விசார் பதவியை அல்லது நிலையை ஏற்பதிலிருந்து அல்லது வகிப்பதிலிருந்து'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஏதேனும் கல்விசார் பதவியை அல்லது நிலையை அல்லது பொருளியல், பணம், வங்கித் தொழில், புள்ளி விவரவியல், நிதி ஆகிய விடயங்களில் ஆராய்ச்சியை மேற்கொள்ளும் நோக்கத்திற்கெனத் தாபிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் அல்லது ஒழுங்கமைப்பில் ஏதேனும் பதவியை அல்லது நிலையை ஏற்பதிலிருந்து அல்லது வகிப்பதிலிருந்து'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்''; அத்துடன்

(3) அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

''(3) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரது விதப்புரையின் மேல் சனதிபதியால் நிர்ணயிக்கப்படக் கூடியவாறான அத்தகைய சம்பளத்தை ஆளுநர் பெறுதல் வேண்டும்.''.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 24அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

'தகவல் பெறுவதற்குப் பிரதி ஆளுநருக்குள்ள அதிகாரம்.

24அ. (1) ஒரு பிரதி ஆளுநர், ஆளெவரையும்—

(அ) மத்திய வங்கியின் பணிகளையும் பொறுப்புக்களையும் தகுந்தவாறு நிறைவேற்றும் நோக்கத்திற்கெனப் பெற்றுக்கொள்வது அவசியம் என அவர் கருதக்கூடியவாறான அத்தகைய தகவலை அவர் குறித்துரைக்கக் கூடியவாறான அத்தகைய காலத்துக்குள்ளும் அத்தகைய முறையிலும், அவருக்கு அல்லது அவரால் பதவிப் பெயர் குறிப்பிடப்பட்டவரான மத்திய வங்கியின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்குக் கொடுத்துதவுமாறு; அல்லது

(ஆ) இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான ஏதேனும் அத்தகைய தகவலை உள்ளடக்கியிருக்கும் அல்லது உள்ளடக்கியிருக்கக் கூடிய சாத்தியம் கொண்ட அத்தகைய ஆளின் உடைமையிலுள்ள எவையேனும் புத்தகங்களை அல்லது பதிவேடுகளைப் பரிசோதனைக்கென அவருக்கு அல்லது அவரால் பதவிப் பெயர் குறிப்பிடப்பட்டவரான, மத்திய வங்கியின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு அவர் குறித்துரைக்கக் கூடியவாறான அத்தகைய காலத்துக்குள்ளாகவும் அத்தகைய முறையிலும் காண்பிக்குமாறு

தேவைப்படுத்தலாம்.

(2) நியாயமான காரணமில்லாமல் (1) ஆம் உட்பிரிவின் கீழான ஏதேனும் தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) இப்பிரிவில் ''ஆள்'' என்பது, அரசாங்கத்தின் ஏதேனும் திணைக்களத்தினது எவரேனும் அலுவலரையும் அத்துடன் எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழ் அல்லது வேறு வகையில் தாபிக்கப்பட்டதாயினுஞ்சரி அமைக்கப்பட்டதாயினுஞ் சரி, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் குழுவினையும் உள்ளடக்கும்.''.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை அச்சட்டவாக்கத்தின் 29அ, 29ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"வங்கித்தொழில் நிறுவனங்களின் தொடர்ச்சியான மேற்பார்வை"

29அ. வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், வங்கித் தொழில் நிறுவனங்களின் தொடர்ச்சியான மேற்பார்வையின் நோக்கத்திற்கென—

(அ) விடயத்திற்கேற்றவாறு, ஏதேனும் வர்த்தக வங்கியின் அல்லது ஏதேனும் வங்கித் தொழில் நிறுவனத்தின் தொழில் அல்லது அலுவல்கள் தொடர்பாக அத்தகைய வர்த்தக வங்கியின் அல்லது வங்கித் தொழில் நிறுவனத்தின் அலுவல்களின் உண்மையான நிலைமையை நிச்சயப்படுத்தும் நோக்கத்திற்காகப் பெற்றுக்கொள்வது அவசியமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய கூற்றை அல்லது தகவலைக் காலத்துக்குக் காலமும் அத்துடன் அவரால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள்ளும் கொடுத்துதவுமாறு வர்த்தக வங்கியொன்றையும் அத்துடன் நாணயச் சபையால் அவ்வாறு அதிகாரமளிக்கப்படின், வர்த்தக வங்கியொன்று தவிர்ந்த ஒரு வங்கித் தொழில் நிறுவனத்தையும் தேவைப்படுத்தலாம்;

(ஆ) விடயத்திற்கேற்றவாறு வர்த்தக வங்கியின் அல்லது வங்கித் தொழில் நிறுவனத்தின் அத்தகைய கணக்காய்வாளரினால் கொண்டு நடாத்தப்பட்ட கணக்காய்வு ஒன்று தொடர்பாக (அ) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கத்திற்காகப் பெற்றுக்கொள்வது அவசியமானதென அவர் கருதக்கூடியவாறான ஏதேனும் தகவலை, அவரால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்குள்ளாகக் கொடுத்துதவுமாறு ஏதேனும் வர்த்தக வங்கியின் கணக்காய்வாளரையும் அத்துடன் நாணயச் சபையால் அவ்வாறு அதிகாரமளிக்கப்படின், வர்த்தக வங்கி ஒன்று தவிர்ந்த ஒரு வங்கித் தொழில் நிறுவனத்தையும் தேவைப்படுத்தலாம்; அத்துடன்

(இ) அவ்வாறு கொடுத்துதவப்பட்ட ஏதேனும் கூற்றின் அல்லது தகவலின் செம்மையை உறுதி செய்யும், நோக்கத்திற்காக அவசியமானதென அவர் கருதக்கூடியவாறு, ஏதேனும் வர்த்தக வங்கியால் அல்லது வேறு வங்கித் தொழில் நிறுவனத்தால் வைத்திருக்கப்படும் புத்தகங்களையும் அத்துடன் கணக்குகளையும், சோதனை செய்யலாம் அல்லது அவரது திணைக்களத்தின் சோதனையாளர் ஒருவரைக் கொண்டு சோதனை செய்விக்கலாம்.

29ஆ. (1) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு வர்த்தக வங்கியொன்றைத் தவிர்ந்த வேறு ஏதேனும் வங்கித்தொழில் நிறுவனத்தினது ஏதேனும் துணைநிலைக் கம்பெனியின் அல்லது முகவர் நிலையத்தின் புத்தகங்களையும் கணக்குகளையும் சோதனை செய்வது சார்பாக நாணயச் சபையால் பணிப்புகள் வழங்கப்பட்டால் ஏதேனும் வர்த்தக வங்கியினது ஏதேனும் துணைநிலைக் கம்பெனியின் அல்லது முகவர் நிலையத்தின் புத்தகங்களையும், கணக்குகளையும், அல்லது வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றதும் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டதுமான ஏதேனும் சங்கத்தின் புத்தகங்களையும் கணக்குகளையும் அவை தொடர்பாக ஆளுநரால் பணிப்புகள் வழங்கப்பட்டால், அவர் சோதனை செய்தல் வேண்டும் அல்லது அவரது திணைக்களத்தின் சோதனையாளர் ஒருவரைக் கொண்டு சோதனை செய்வித்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 29 ஆம் பிரிவின் (3) ஆம், (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளினதும், 30 ஆம், 31 ஆம், 32 ஆம் பிரிவுகளினதும் ஏற்பாடுகள், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் எல்லா நிறுவனங்களுக்கும் அல்லது அவற்றுள் எவற்றிற்கும் அத்துடன் எல்லாம் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.''.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அதன் (3) ஆம் உட்பிரிவில்—

(அ) ''முப்பது நாட்களைக் கொண்ட காலப் பகுதி முடிவுற்றதன் மேல்'' எனும் சொற்களுக்குப் பதிலாக ''ஆறு மாதங்களைக் கொண்ட காலப் பகுதி முடிவுற்றதன் மேல்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (ஆ) எனும் பந்தியில் ''பணிப்பாளரைக் கொண்டு செய்வித்தல்'' எனும் சொற்களுக்குப் பதிலாக ''பணிப்பாளரைக் கொண்டு செய்வித்தல்; அல்லது'' எனும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அதன் (ஆ) எனும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(இ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமொன்றின் கிளையொன்றினது அலுவல்களை ஒடுக்குவதற்கு, தகுதிவாய்ந்த நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றை வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரைக் கொண்டு செய்வித்தல்; அத்துடன்''.

(2) அதன் (9) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும்:—

(9) வங்கித் தொழில் நிறுவனமொன்றின் தொழிலானது (1) ஆம் உட்பிரிவின் கீழ் இடைநிறுத்தப்பட்டுள்ளவிடத்து, வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்—

(அ) அத்தகைய வங்கித் தொழில் நிறுவனத்தை, அத்தகைய வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு அவசியமானதென நாணயச் சபையானது கருதக்கூடியவாறான ஏதேனும் நடவடிக்கையை உடனடியாக எடுக்கும்படி அல்லது ஏதேனும் செயலை அல்லது விடயத்தைச் செய்யும்படி தேவைப்படுத்தலாம்;

(ஆ) அத்தகைய வங்கித் தொழில் நிறுவனத்துக்கு, அத்தகைய வங்கித் தொழில் நிறுவனத்தின் தொழிலை முறைமையாகக் கொண்டு நடாத்துவது தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்கு, பொருத்தமானவரும் தகுந்தவருமான ஆளொருவரை நியமிக்கலாம்;

(இ) அத்தகைய வங்கித் தொழில் நிறுவனத்தின் கட்டுப்பாட்டினை மேற்கொள்ளலாம் என்பதுடன் அதன் தொழிலைக் கொண்டு நடாத்தலாம் அல்லது வங்கித் தொழில் நிறுவனத்தின் தொழிலைக் கொண்டு நடாத்துவதனை வேறோர் ஆளுக்குக் கையளிக்கலாம்;

(ஈ) அத்தகைய வங்கித் தொழில் நிறுவனத்தின் மூலதனத்தை அதிகரிப்பதன் மூலமும் புதிய பங்குதாரர்களுக்கு ஏற்பாடு செய்வதன் மூலமும் அத்துடன் அதன் பணிப்பாளர்கள் சபையினை அமைப்பதன் மூலமும் அதனை மீள ஒழுங்கமைக்கலாம்; அத்துடன்

(உ) அத்தகைய ஒருங்கிணைப்புக்கு உடன்படுகின்ற ஏதேனும் பிற வங்கித் தொழில் நிறுவனங்களுடன் அத்தகைய வங்கித் தொழில் நிறுவனத்தினை ஒருங்கிணைப்பதற்கு அவசியமானவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்யலாம்;

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32ஈ எனும் பிரிவானது ''29 ஆம் பிரிவு, 30 ஆம் பிரிவு'' எனும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''29 ஆம் பிரிவு, 29அ எனும் பிரிவின் (ஆ) எனும் பந்தி, 30 ஆம் பிரிவு'' எனும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(1) மத்திய வங்கியின் ஒவ்வோர் அலுவலரும், அத்துடன் சேவையாளரும் இச்சட்டத்தின் கீழ், 1979 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, நிதிக் கம்பனிகளைக் கட்டுப்படுத்துதற் சட்டத்தின் கீழ் அல்லது அப்போதைக்கு வலுவிலிருக்கும் வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் அவரது கடமைகளைப் புரிவதில் அவரது அறிவுக்கு வந்ததையக் கூடியவையான, ஏதேனும் வங்கித் தொழில் நிறுவனத்தினது அல்லது அத்தகைய ஏதேனும் நிறுவனத்தின் எவரேனும் வாடிக்கையாளரினது அலுவல்கள் பற்றிய எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தின், கூட்டுத்

தாபனத்தின், கம்பெனியின், பங்காண்மையின் அல்லது ஆளின் அலுவல்கள் பற்றிய ஏதேனும் கருமம் தொடர்பிலும் இச்சட்டத்தின் கீழ் அவரது கடமைகளைப் புரிவதில் தவிர, இரகசியத்தைப் பேணுதலும் இரகசியத்தைப் பேணுதலில் உதவிபுரிதலும் வேண்டும்; அத்துடன் நாணயச் சபை தவிர்ந்த வேறு எவரேனும் ஆளுக்கு அல்லது ஆளுநரால் அதற்கென அதிகாரமளிக்கப் பட்ட மத்திய வங்கியின் அலுவலரொருவர் தவிர்ந்த எவரேனும் ஆளுக்கு அத்தகைய ஏதேனும் கருமத்தைத் தெரியப்படுத்தும் அல்லது அதிகார மளிக்கப்படாத ஆளெவரையும் ஏதேனும் வங்கித் தொழில் நிறுவனம், அரசாங்கத் திணைக்களம், கூட்டுத்தாபனம், கம்பெனி, பங்காண்மை அல்லது ஆட்கள் தொடர்பிலான எவையேனும் புத்தகங்களை, பத்திரங்களை அல்லது வேறு பதிவேடுகளை அணுகிப் பார்வையிட விடுகின்ற அல்லது அனுமதிக் கின்ற அத்தகைய எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் தவறொன் றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.''.

*11.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

'நாணயம் என்பதன் வரைவிலக்கணம்

*48.* இச்சட்டத்தின் நோக்கத்திற்காக சந்தருப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினாலொழிய ''நாணயம்'' என்பது இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்பட்ட அல்லது புழக்கத்திலிருக்கும் எல்லா நாணயத் தாள்களும் அத்துடன் குற்றி நாணயங்களும் என்று பொருள்படும்.''.

*12.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(i) அதன் (ஆ) என்னும் பந்தியில் ''ஏதேனும் இலச்சினையை அல்லது முத்திரையைப் பொறிக்கின்ற அல்லது ஒட்டுகின்ற; அல்லது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஏதேனும் இலச்சினையை அல்லது முத்திரை யைப் பொறிக்கின்ற அல்லது ஒட்டுகின்ற;'' எனுஞ் சொற்களை இடு வதன் மூலமும்;

(ii) அதன் (இ) என்னும் பந்தியில் ''இணைக்கின்ற அல்லது பொறிக்கின்ற;'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''இணைக்கின்ற அல்லது பொறிக் கின்ற; அல்லது'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(iii) அதன் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும்:—

''(ஈ) எத்தகையதுமான ஏதேனும் வடிவத்தில் ஏதேனும் நாணயத் தாளை உருவாக்குகின்ற அல்லது அதன் உருவ நேர் படியை ஆக்குகின்ற,''.

*13.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவில், ''பின்வரும் படிவத்தில் இருத்தல் வேண்டும்;'' என்னும் சொற்களுக் குப் பதிலாக, ''பொருளளவில் பின்வரும் படிவத்தில் இருத்தல் வேண்டும்:—'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*14.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 59அ என்னும் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவில், ''பின்வரும் படிவத்தில் இருத்தல் வேண்டும்;'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பொருளளவில் பின்வரும் படிவத்தில் இருத்தல் வேண்டும்:–'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*15.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 97 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வருவது இடப்படுகின்றது:—

'பற்றுக்குறையின் மீதான வட்டியை வர்த்தக வங்கிகளின் ஒதுக்குகளுக்குச் செலுத்துதல்

97. (1) ஏதேனும் வர்த்தக வங்கியின் ஒதுக்குகள், 96 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் கணிக்கப்பட்டதான தேவைப்பட்ட ஒதுக்குகளுக்குக் குறைவாக இருக்கும்போதிலெல்லாம், வங்கியானது, நாணயச் சபையால் விதித்துரைக்கப்படக் கூடியவாறுன அத்தகைய காலத்திற்குள்ளாக நாணயச் சபையால் விதித்துரைக்கப்படக் கூடியவாறுன நாளொன்றுக்கு ஒரு நூற்றுவீதத்தின் மூன்றிலொரு பங்கை விஞ்சாத அத்தகைய வீதத்தின் பற்றுக்குறையினது தொகையின் மீதான வட்டியை மத்திய வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறுயினும், ஒரு வாரத்தில் சொல்லப்பட்ட நாட்கள் ஒவ்வொன்றிலும் அத்தகைய வர்த்தக வங்கியால் பேணப்படும் ஒதுக்குகளின் கூட்டு மொத்தம் இப்பிரிவுக்கு இணங்கியொழுகுவதற்குக் குறைந்தபட்சமாக அதே வாரத்தின் ஏழு நாட்களுக்குள் ஒவ்வொரு நாளிலும் வர்த்தக வங்கி பேணியிருக்க வேண்டியதான ஒதுக்குகளின் கூட்டு மொத்தத்திலும் குறைவாக இல்லாதிருக்குமானுல் ஒரு வாரத்தின் ஒரு நாளில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நாட்களில் ஏற்படும் ஒதுக்கிலான ஏதேனும் பற்றுக்குறை தொடர்பில் வர்த்தக வங்கியொன்று வட்டியைச் செலுத்தும்படி தேவைப்படுத்தப்படுதலாகாது. எனினும் முந்திய கூட்டு மொத்தம், பிந்திய கூட்டு மொத்தத்திலும் பார்க்கக் குறைவாக இருக்குமிடத்து, அத்தகைய கூட்டு மொத்தங்களினதும் வித்தியாசத்தின் ஏழிலொரு பங்குக்குச் சமனுனதான பற்றுக்குறை மீது (ஒரு சதத்தின் பின்னமெதுவும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுதலாகாது) நாணயச் சபையால் விதித்துரைக்கப்பட்ட வீதத்திலான வட்டி செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு கணிக்கப்பட்ட பற்றுக்குறை மீதான வட்டியானது அத்தகைய பற்றுக்குறை வாரத்தில் ஏழு நாட்களுள் ஒவ்வொன்றிலும் ஏற்பட்டது என்ற அடிப்படையில், செலுத்தப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய கொடுப்பனவு இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளுடன் போதியளவில் இணங்கியொழுகுவனவாதலும் வேண்டும்.

(2) ஏதேனும் வங்கி தேவைப்படும் ஒதுக்குகளைத் தொடர்பாகப் பேணத் தவறுகின்றவிடத்து, நாணயச் சபையானது––

(அ) ஓராம் உட்பிரிவிற்கான காப்பு வாசகம் அந்த வங்கிக்கு ஏற்புடைத்தாதலாகாது எனவும்

(ஆ) (i) அந்த வங்கியினுல் செய்யப்படும் புதிய கடன்கள், முதலீடுகள் என்பவற்றைத் தடைசெய்து அல்லது மட்டுப்படுத்தி அத்துடன்

(ii) பங்கிலாபமொன்றை அதன் பங்குதாரர்களுக்குக் கொடுபனவு செய்யும் நோக்கத்திற்காக, அந்த வங்கியின் தேறிய இலாபங்களின் முழுவதினதும் அல்லது அதன் குறித்துரைக்கப்பட்ட பாக மெதனையும் பிரயோகத்தைத் தடைசெய்து

கட்டளை ஆக்கலாம்.

'(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக ''வாரம்'' என்பது நாணயச் சபையால் விதித்துரைக்கப்படக் கூடியவாறு தொடர்ச்சியான எவையேனும் ஏழு நாட்கள் என்று பொருள்படும்.''.

# 1985 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, மரணச் சொத்து வரி (நீக்க)ச் சட்டம்

*[1985 திசெம்பர் மாதம் 31 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1985, நவம்பர் 13 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் மரணமெய்துகின்ற ஆட்களின் மரணச்சொத்துக்கள்மீது, 1980 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, மரணச் சொத்துவரிச் சட்டத்தின் கீழான மரணச்சொத்து வரி அறவீட்டையும் கொடுப்பனவையும் நீக்குவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம், 1985 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க மரணச்சொத்து வரி (நீக்க)ச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டு நவெம்பர் 13 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் மரணமெய்துகின்ற ஆளெவரினதும் மரணச்சொத்தின் பெறுமதிமீது, 1980 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, மரணச்சொத்து வரிச் சட்டத்தின் கீழான மரணச்சொத்துவரி எதுவும் அறவிடப்படுதலோ அல்லது செலுத்தப்படுதலோ ஆகாது.

# 1985 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம்

*[1985 திசெம்பர் மாதம் 31 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

## 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 1985 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச்சட்டத்தின் 21 ஆம் பிரிவு, ''அந்த ஆள் தமது விவரத்திரட்டில்'' என்பதிலிருந்து அப்பிரிவு முடியவுள்ள எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''அந்த ஆள் தமது விவரத்திரட்டில் மொத்த விற்பனை வரவினைத் தாம் வெளிவிட்டதில் அல்லது அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர்பாக மொத்த விற்பனை வரவு வரி வீதங்களைப் பிரயோகிப்பதில் மோசடி அல்லது வேண்டுமென்ற அசட்டை எதுவும் இருக்கவில்லை என ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படுமாறு எண்பித்தாலன்றி, ஆணையாளர் தலைமையதிபதியானவர், செம்மையற்ற விவரத்திரட்டைத் தயாரித்தமைக்கான அல்லது அவரது விவரத்திரட்டில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள மொத்த விற்பனை வரவுக்காகச் செம்மையற்ற மொத்த விற்பனை வரவு வரிவீதத்தைப் பிரயோகித்தமைக்கான தண்டமொன்றாக இரண்டாயிரம் ரூபாவிற்கு'' மேற்படாத ஒரு தொகையையும் வரிமதிப்பீட்டில் கோரப்பட்ட மொத்த விற்பனை வரவு வரியின் முழுத் தொகைக்கும் விபரத்திரட்டின்மீது செலுத்தப்பட்ட மொத்த விற்பனை வரவு வரிக்கும் இடையேயுள்ள வித்தியாசத் தொகையின் இரு மடங்குக்குச் சமமான ஒரு பணத்தொகையையும்,

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவு, அப்பிரிவின் இறுதியில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(6) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுள் எது எப்படியிருப்பினும், ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அதன் சார்பில் ஆணையாளர் தலைமையதிபதியால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், இச்சட்டத்தின் ஒப்புரவான நிருவாகத்தை உறுதிப்படுத்துவதற்கான தேவையைக் கருத்தில் கொண்டு ஏதேனும் இடப்பரப்பு தொடர்பில், ஆணையாளர் தலைமையதிபதி உசிதமெனக் கருதுகின்ற அத்தகைய விதத்தில், பின்வருவனவற்றைக் கொண்ட நிரலொன்றை வெளியிடச் செய்தல் வேண்டும்:—

(அ) அந்த இடப்பரப்பிலுள்ள மொத்த விற்பனை வரவு வரி செலுத்துநர்களின் பெயர்களும் முகவரிகளும்;

(ஆ) அத்தகைய வரி செலுத்துநர் ஒவ்வொருவரினாலும் கொண்டு நடாத்தப்படும் தொழில்கள் பற்றிய விவரணம்; அத்துடன்

(இ) ஒரு காலாண்டுக்கு அத்தகைய மொத்த விற்பனை வரி செலுத்துநர் ஒவ்வொருவரினாலும் வெளிப்படுத்தப்பட்ட மொத்த விற்பனை வரவு''.

# 1985 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம்

*[1985 திசெம்பர் மாதம் 31 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1984 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தை திருத்துவதற்கான ஒரு சட்டம்.**

1. இச்சட்டமானது, 1985 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. 1984 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''இரண்டாயிரத்து இருநூற்றி ஐம்பத்திமூன்று கோடி தொண்ணூறு இலட்சம் ரூபாவினை'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''இரண்டாயிரத்து எண்ணூறு கோடி ரூபாவினை'' என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

# 1985 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, உண்ணுட்டரசிறை (திருத்தச்) சட்டம்

*[1985 திசெம்பர் மாதம் 31 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணுட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 1985 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, உண்ணுட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணுட்டரசிறைச் சட்டத்தின் (இது இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ''அலுவலக முறையான வேதனுதிகளும்'' என்பது தொடங்கி அப்பந்தி முடியவுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:—

''(viii) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கியின் ஊழியர் ஒருவரின்;

அலுவலக முறையான வேதனுதிகளும், இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னராயினுஞ்சரி தொடங்கியதன் பின்னராயினுஞ்சரி, விடயங்கள் (i), ( ii ), ( iii ), ( iv ), ( v ), ( vi ) அல்லது ( viii ) என்பவற்றில் குறிப்பிடப்பட்டவரான அலுவலர் ஒருவர் அல்லது ஊழியர் ஒருவர் என்ற வகையில் அத்தகைய ஆளினுல் அல்லது எவரேனும் வேறு ஆளினுல் புரியப்பட்டதான பழைய சேவைகள் தொடர்பாக எவரேனும் ஆளினுல் பெற்றுக்கொள்ளப்பட்டவையான 4 ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஊழியத்திலிருந்து வரும் அத்தகைய ஏதேனும் ஒய்வூதியம் அல்லது அத்தகைய எவையேனும் இலாபங்களும்;''

(2) அவ்வுட்பிரிவின் (ஔ) என்னும் பந்தியில், அப்பந்தியின் ஓரம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:—

''(1) (அ) 1979 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனுல் 1986 மார்ச்சு 31 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில், முப்பதினுயிரம் ரூபாவுக்கு; அத்துடன்

(ஆ) 1986 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் நாற்பத்தி ரண்டாயிரம் ரூபாவுக்கு

மேற்படாதவாறான ஊழியத்திலிருந்து கிடைக்கும், இலாபங்களும் வருமானங்களும்''.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(i) அவ்வுட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(ஏஏ) (i) (165 ஆம் அத்தியாயமான) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தால்; அல்லது

(ii) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கியால்,

வாராக்கடன்களின் அல்லது ஐயுறவுக் கடன்களின் கொடுப்பனவுக்கெனச் சிறப்பான ஒதுக்கொன்றிற்குக் கைமாற்றப்பட்ட, 1986 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலான, அதன் இலாபங்களினதும் வருமானத்தினதும் நாற்பது வீதத்தை விஞ்சாததான ஏதேனும் பணத் தொகை'';

(2) அவ்வுட்பிரிவின் (ட) என்னும் பந்தியில் ''கொடுப்பனவில் உறப்பட்ட செலவினம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''கொடுப்பனவில் உறப்பட்ட செலவினம்''; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:—

(ண) இப்பந்தியின் நோக்கங்களுக்காக ஆணையாளர் தலைமை அதிபதியால் அங்கீகரிக்கப்பட்டு, அத்துடன் 1983, 1985 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ், ஊழியர்களுக்கு, அவர்களது சேவை முடிவுற்றதன்மேல் பணிக்கொடை கொடுப்பனவு செய்யும் நோக்கத்திற்காகப் பேணப்படுவதுமான ஏதேனும் நிதியத்திற்கு, அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட ஏதேனும் ஆண்டுக் கொடுப்பனவு''.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அக்காப்பு வாசகத்தின் ( ii ) ஆம் உட்பந்தியில் ''தொடர்ந்தும் அக் கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்'', என்னும் சொற்களுக்குப் பதிலாக ''தொடர்ந்தும் அக்கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அக்காப்பு வாசகத்தின் இறுதியில் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:—

( iii ) எந்தக் கம்பனியில், 1985, நவெம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் சொத்தாண்மையில் மாற்றமொன்று ஏற்பட்டுள்ளதோ, அந்தக் கம்பனியால் உறப்பட்ட நட்ட மொன்று தொடர்பாக, இப்பந்தியின் கீழ், அல்லது 3 (ஆ) என்னும் பந்தியின் கீழ், அல்லது 4 (ஆ) என்னும் பந்தியின் கீழ், எந்தக் கம்பனியில் நட்டம் உறப்பட்டதோ அந்தக் கம்பனியின் அத்தகைய வியாபாரத்தின் அல்லது தொழிலின் நியதிச் சட்ட வருமானத்திற்கெதிராகத் தவிரக் கழிப்பனவு எதுவும் செய்யப் படுதலாகாது.

இப்பந்தியின் நோக்கங்களுக்காக, கம்பனியொன்றின் சொத்தாண்மை மாற்றமானது, கழிப்பனவுக்கான கோரிக்கை எவ்வாண்டில் செய்யப்பட்டதோ அவ்வரி மதிப்பீட்டாண்டில் எந்த நேரத்திலும் நேரடியாகவோ அல்லது நியமத்தர் மூல மாகவோ அக்கம்பனியினது வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் மூன்றிலொன்றுக்கு மேற்பட்ட பங்குகள் எவ்வரி மதிப்பீட் டாண்டில் நட்டங்கள் உறப்பட்டனவோ அவ்வரிமதிப்பீட்டாண் டில் எந்த நேரத்திலும் அத்தகைய பங்கு மூலதனத்தைக் கொண் டிராத ஆட்களால் வைத்திருக்கப்படுமிடத்து, நிகழ்ந்துள்ளதா கக் கருதப்படுதல் வேண்டும்.''

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவில் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (அஅஅ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூல மும்:—

''(அஅஅ) 1985, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இருபத்து நாலாயிரம் ரூபா விடு தொகையொன்று,''; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் பந்தி (அஅஅ) என்பதனை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(அஅஅ) 1986, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டு தொடர்பில் இருபத்தேழாயிரம் ரூபா விடுதொகையொன்று அத்துடன்''; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற்கான காப்பு வாசகத்தில்:—

(அ) பந்தி (ஈ) என்பதனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:—

''(ஈ) 1985 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இருபத்து நாலாயிரம் ரூபா விடுதொகையொன்று;'' அத்துடன்

(ஆ) பந்தி (ஈ) என்பதனை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(உ) 1986, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இருபத்தேழாயிரம் ரூபா விடுதொகையொன்று.''.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் (1) ஆம் உட்பந்தியில், ''சொந்தக்காரராக இருக்கும்போது செய்யப்படுதல் வேண்டும்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''சொந்தக்காரராக இருக்கும்போது செய்யப்படுதல் வேண்டும் அல்லது அத்தகைய தனியாளின் பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட வயதுடையவரான—

(அ) எந்தப் பிள்ளை அத்தகைய தனியரளிடமிருந்து கொடை வகையாக அத்தகைய வீட்டின் அல்லது அமைவிடத்தின் சொத்தாண்மையைப் பெற்றுள்ளாரோ அந்தப் பிள்ளை; அத்துடன்

(ஆ) எந்தப் பிள்ளையின் வருமானமானது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அந்த வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய தனியாளின் வருமானத்துடன் கூட்டு மொத்தமாக்கப்பட்டதோ அந்தப் பிள்ளை

அவ்வீட்டின் அல்லது அமைவிடத்தின் சொந்தக்காரராக இருக்கும் போது செய்யப்படுதல் வேண்டும்.'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத்தில்—

(ஆ) அக்காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியில், ''கழிப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''கழிப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது ; அத்துடன்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அக் காப்புவாசகத்தின் இறுதியில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(இ) அத்தகைய தனியாள், அந்த வரிமதிப்பீட்டாண்டின் போது, அத்தகைய வீட்டின் அல்லது அமைவிடத்தின் சொந்தக்காரரல்லரென்ற நிகழ்வு எப்படியிருப்பினும் அந்த வரிமதிப்பீட்டாண்டின்போது, அத்தகைய தனியாளின் பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட வயதுடையவரான—

(1) எந்தப் பிள்ளை அத்தகைய தனியாளிடமிருந்து, கொடை வகையாக அத்தகைய வீட்டின் அல்லது அமைவிடத்தின் சொத்தாண்மையைப் பெற்றுள்ளாரோ அந்தப் பிள்ளை; அத்துடன்

(2) எந்தப் பிள்ளையின் வருமானமாவது, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அந்த வரி மதிப்பீட்டாண்டின் அத்தகைய தனியாளின் வருமானத்துடன் கூட்டு மொத்தமாக்கப்பட்டதோ அந்தப் பிள்ளை; அந்த வீட்டின் அல்லது அமைவிடத்தின் சொந்தக்காரராக இருந்தால், அத்தகைய தகைமை பெறும் கொடுப்பனவு தொடர்பாக வரிமதிப்பீட்டாண்டொன்றிற்கு (1) ஆம் உட்பிரிவின் கீழான கழிப்பனவொன்று செய்யப்படுதல் வேண்டும்.''.

(3) அந்தப் பிரிவின் (5அ) என்னும் உட்பிரிவின், ''1985 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்காக'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''1985, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டிற்காக'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அப்பிரிவின் (5அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(5ஆ) 1986, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டு எதற்கும் கம்பனியொன்று தவிர்ந்த ஆளெவரினதும் வரிமதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து, செய்யப்படும் கழிப்பனவானது—

(i) அவரால் அவ்வரிமதிப்பீட்டாண்டில் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட (2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (க), (ங) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டவையல்லாதனவான எல்லாத் தகைமை பெறும் கொடுப்பனவுகள் தொடர்பாகவும், அத்தகைய வரிமதிப்பிடற்குரிய வருமானத்தின் மூன்றிலொரு பங்கை அல்லது ஓரிலட்சத்து ஐம்பதினுயிரம் ரூபாவை, இவற்றுள் எது குறைந்ததோ அதனை, விஞ்சுதலாகாது;

(ii) இரண்டாம் உட்பிரிவின் பந்திகள் (ஆ), (இ), (க), (ங) என்பவற்றில் குறிப்பிடப்பட்டனவான எல்லாத் தகைமை பெறும் கொடுப்பனவுகள் தொடர்பிலும், ஓரிலட்சத்து ஐம்பதினுயிரம் ரூபாவை விஞ்சுதலாகாது; அத்துடன்

(iii) பந்திகள் ( i ), ( ii ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டனவான எல்லாத் தகைமை பெறும் கொடுப்பனவுகளினதும் கூட்டு மொத்தம் தொடர்பிலும் ஓரிலட்சத்து ஐம்பதினுயிரம் ரூபாவை விஞ்சுதலாகாது''.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவில் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ( iv ) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:—

''( iv ) 1985 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில், இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் பாகம் II ஆ என்பதில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில்;'';

(ஆ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ( iv ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:—

''(v) 1986 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில், இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் பாகம் II இ என்பதில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில்''; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவிற்கான காப்பு வாசகத்தின் ( iii ) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும்:—

''( iii ) 1985, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு இருபத்து நாலாயிரம் ரூபாவும்; அத்துடன்

( iv ) 1986, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டிற்கு இருபத்தேழாயிரம் ரூபாவும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அதற்கான காப்பு வாசகத்தின் (iv) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:—

''( iv ) 1985, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப் பீட்டாண்டு தொடர்பில் பாகம் IIஆ; அத்துடன்

( v ) 1986, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் பாகம் II இ;

ஆயின், எவ்வாருயினும், 1986 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான தனியாள் ஒருவரின் வரிவிதிக்கற்பாலதான வருமானமானது, ஆணையாளர் தலைமை அதிபதியின் கருத் துப்படி அந்தத் தனியாளின் தொழில்தருநரினல் வேலைக்கமர்த்தப்பட்ட எல்லாத் தனியாட்களுக்கும் ஒரே சீராக ஏற்புடைத்தாகாததான ஒரு திட்டத்திற்கிணங்க அத்தகைய தனியாளுக்குச் செலுத்தப்பட்டதான, (இ) என்னும் பந்தியில் குறிப் பீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத் தொகையை உள்ளடக்குகின்றவிடத்து, அத்தகைய பணத் தொகையானது, இச்சட்டத்தின் கருத்திற்குள்ளாக மூலதன வருமான மிகைத் தொகையொன்ருகக் கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தனியாள் (3) ஆம் உட்பிரிவிற்கிணங்க அவ்வரிமதிப்பீட்டாண்டிற்கு வரி விதிக்கப்படுதலும் வேண்டும்.''

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''வரி செலுத்துவதற்குப் பொறுப்புடையதாதல் ஆகாது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக '' வரி செலுத்துவதற்குப் பொறுப்புடையதாதல் ஆகாது; அல்லது'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:–

''(இ) பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் விடயத்தில், 1986, ஏப் பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கு கின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில், (அ) என்னும் பந்தி யின் கீழ் கொடுபடற்பாலதான வரியை அதிலிருந்து கழித்த பின்னர், அதன் இலாபங்களினது மீதியின் இருபத்தைந்து வீதத் திற்குச் சமமான தொகையொன்று.''

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

செலுத்தற்பாலதான செல்வவரி குறித்தவொரு தொகையினை விஞ்சுதலாகாது

50. எவரேனும் ஆளினல் செலுத்தப்படற்பாலதான செல்வ வரி, அவ்வரிமதிப்பீட்டாண்டிற்கான அவ்வாளின் வரி மதிப்பிடற்பாலதான வருமானத்தினது கூட்டு மொத்தத் தொகையினதும், இச்சட்டத்தின் கீழ் அல்லது வேறேதேனும் சட்டவாக்கத்தின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப் பட்டுள்ளவையும் இவை அவ்வாறு விலக்களிக்கப்பட்டிராவிடில், அந்த வரி மதின்பீட்டாண்டிற்கான அந்த ஆளின் வரிமதிப்பிடற் பாலதான வருமானத்தைக் கணிப்பதில் கணக்கில் எடுக்கப்பட் டிருக்கக்கூடியவையுமான எவையேனும் இலாபங்களாகவும் வரு மானமாகவுமிருக்கின்ற (வதிவிடமொன்றின் தேறிய ஆண்டுப் பெறுமதியையும் இச்சட்டத்தின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஏதேனும் மானியத்தையும், தவிர) எவை யேனும் இலாபங்களினதும் கூட்டு மொத்தத் தொகையின்,

(அ) 1979 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு அல்லது அந்த வரி மதிப் பீட்டாண்டை உடனடுத்துவரும் ஆறு வரிமதிப்பீட் டாண்டுகளுள் எதற்கும், எண்பது சதவீதத்தையும்; அத்துடன்

(ஆ) 1986 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட் டாண்டிற்கு, அறுபது சதவீதத்தையும்,

விஞ்சுதலாகாது.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவு, இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

''கொடைவரி அறவிடுதல்.

51. இவ்வத்தியாயத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கு அமை வாக, 42 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தனியான ஒருவர் தவிர்ந்த ஒவ்வொரு தனியாளிடமிருந்தும் ஒவ்வொரு கம்பனியிடமிருந்தும் 1979, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனல் 1986, ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றிற் கும், அத்தகைய தனியாளினல் அல்லது, கம்பனியால் அவ் வரிமதிப்பீட்டாண்டில் அல்லது 1985 ஏப்பிறில் 1 ஆம் தேதி யன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டின் விடயத்தில் 1985 நவெம்பர் 13 ஆம் தேதிக்கு முன்னர் கொடுக்கப்பட்ட வரி விதிக்கற்பாலதான கொடைகள் தொடர்பாக, இச்சட்டத்திற் கான ஐந்தாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில், இச்சட்டத்தில் இதனகத்துப் பின்னர் ''கொடை வரி'' எனக் குறிப்பீடு செய்யப்படும், கொடை வரியொன்று, அறவிடப்படுதல் வேண்டும்.''

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் ''ஆனால் அந்த வரிமதிப் பீட்டாண்டு முடிவடைவதன் முன்னர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஆனால் அந்த வரிமதிப்பீட்டாண்டு முடிவடைவதன் முன்னர், அல்லது 1985 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டின் விடயத்தில், 1985 நவெம்பர் 13 ஆம் தேதிக்கு முன்னர்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (iii) ஆம் பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(iii) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கு இருபத்து நாலாயிரம் ரூபாவையும்; அத்துடன்

(iv) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தாறும் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டு எதற்கும் இருபத்தேழாயிரம் ரூபாவையும்''.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவென மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பிட்ட (1) ஆம் உட்பிரிவில், ''1979 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''1979 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனால் 1986 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதிக்கு முன்னர்'' தொடங்கும் என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் அத்துடன்

(3) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்து, பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(2) (அ) 1986 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு எந்தச் செல்வ வரியைக் கொடுப் பதற்கு ஆளொருவர் ஆளாகின்றாரோ அந்தச் செல்வ வரியினதும்; அத்துடன்

(ஆ) அந்த வரி மதிப்பீட்டாண்டிற்கு எந்த வருமான வரியைக் கொடுப்பதற்கு அத்தகைய ஆள் ஆளாகின்றாரோ அந்த வருமான வரியினதும்,

கூட்டு மொத்தமானது, அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அவ்வாளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானத்தினதும், இச்சட்டத்தின் கீழ் அல்லது வேறேதேனும் சட்டவாக்கத்தின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டவையும், அவ் விலக்கு அளிக்கப்பட்டிராவிடில் அத்தகைய வரிமதிப்பீட்டாண்டிற்கு அவ்வாளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானத்தைக் கணிக்கையில் கணக்கிலெடுக்கப்பட்டிருக்கக் கூடியவையுமான இலாபங்களாகவும் வருமானமாகவுமுள்ள ஒரு வதிவிடத்தின் தேறிய ஆண்டுப் பெறுமதியும் இச்சட்டத்தின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஏதேனும் மானியமும் நீங்கலாக) எவையேனும் இலாபங்கள் வருமானம் ஆகியவற்றினதும் கூட்டு மொத்தத்தின் அறுபது சதவீதத்தை விஞ்சுமிடத்து, அத்தகைய விஞ்சு தொகையானது அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அவர் எந்தச் செல்வ வரியைக் கொடுப்பதற்கு ஆளாகின்றாரோ, அந்தச் செல்வ வரிக்காக எதிரீடு செய்யப்படுதல் வேண்டும்.''.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 92அஅ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவு என மீள இலக்கமிடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் இறுதியில், பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்—

''(2) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தாறும் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு இச் சட்டத்தின் கீழ், வருமான வரி அறவிடற்பாலதானதாகவுள்ள ஒவ்வொரு கம்பனியும் அல்லது பங்குடைமையும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக—

(அ) அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கான அதனது வருமானம் பற்றிய விபரத்திரட்டிலும்; அத்துடன்

(ஆ) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் அமைச்சரால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான அத்தகைய எல்லா ஆவணங்களிலும்,

விடயத்துக்கேற்றாற்போல வியாபாரப் பெயர்கள் கட்டளைச் சட்டத்தின் அல்லது 1983 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழான அதனது பதிவிலக்கத்தைச் சுட்டிக் காட்டுதல் வேண்டும்.''.

15. பின்வரும் புதிய அத்தியாயமானது XV ஆம் அத்தியாயத்தை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் XVஅ என்னும் அத்தியாயமாகப் பயனுறுதலும் வேண்டும்.

''அத்தியாயம் XVஅ

வங்கிகளினாலும் நிதி நிறுவகங்களினாலும் கொடுக்கப்படும்

வட்டியிலிருந்து வருமானவரி கழிக்கப்படுதல்

*113அ.* *(1)* ஒவ்வொரு வங்கியும் நிதி நிறுவனமும், இவ்வத்தியாயத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கு அமைவாக, இச்சட்டத்தின் கீழ் வருமானவரி விதிக்கப் படுதற்குரியவராயிருந்து கொண்டு, அவரது சொந்தப் பெயரில் அல்லது வேறெவரேனும் ஆளின் பெயரில் அதில் வைப்பிலிட்ட ஏதேனும் பணத்தொகை மீது 1982 ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில், அதனால் கொடுபடற்பாலதான வட்டியிலிருந்து அவ்வாறு கொடுபடற்பாலதான வட்டியின் இருபது சதவீதம் என்ற வீதப்படி, வருமான வரியைக் கழித்தல் வேண்டும்.

இப்பிரிவின் கீழ் கழிப்பனவு ஒன்றைச் செய்யும் நோக்கங்களுக்காக ''வட்டி'' என்பது, ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப் படாததான அல்லது 81 ஆம் பிரிவின் கீழ் கழிப்பனவு எதுவும் செய்யப்பட் டிராததான, வங்கி ஒன்றிலிருந்து அல்லது நிதி நிறுவனம் ஒன்றிலிருந்து, வருமான வரி விதிக்கப்படுதற்குரியதான ஆளொருவரினால் பெறப்பட்ட வட்டியின் அத் தகைய பாகம் என்று பொருளாகும்.

*(2)* ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில், எந்த வங்கி அல்லது நிதிசார் நிறுவனம் *(1)* ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, இச்சட்டத்தின் கீழ் வருமானவரி விதிக்கப்படுதற்குரிய ஆளொருவருக்கு அதனால் கொடுக்கப்பட்ட எதேனும் வட்டியிலிருந்து வருமான வரியைக் கழிக்கின்றதோ அந்த வங்கி அல்லது நிதிசார் நிறுவனம் ஒவ்வொன்றும், பின்வரும் விபரங்களை எடுத்துக் காட்டும் கூற்றொன்றை அத்தகைய ஆளுக்கு வழங்குதல் வேண்டும்—

(அ) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டில் போமதியாகவுள்ள மொத்த வட்டித் தொகை;

(ஆ) கழிக்கப்பட்ட வரியின் வீதமும் தொகையும், எக்காலப் பகுதிக்கு அது கழிக்கப்பட்டதோ அக்காலப்பகுதியும்; அத்துடன்

(இ) உண்மையாகச் செலுத்தப்பட்ட தேறிய வட்டித் தொகை.

*113ஆ.* ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கான ஆளொருவரின், வரிமதிப் பிடற்குரிய வருமானம், 113அ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கொடுப்பனவொன்றை உள்ளடக்குகின்றவிடத்து, அப்போது—

(அ) அந்த வரிமதிப்பீட்டாண்டில் அவரால் செலுத்தப்படற்பாலதானவரு மான வரியானது, 113அ என்னும் பிரிவின் கீழ் செய்யப்பட்ட மொத்தக் கழிப்பனவுகளை விஞ்சுமாயின், அந்தப் பிரிவிற் கிணங்கச் செய்யப்பட்ட அத்தகைய கொடுப்பனவு தொடர்பான கூற்றொன்றைக் காண்பிப்பதன் மேல், அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரால் கொடு படற்பாலதான வருமான வரியிலிருந்து, அத்தகைய கூற்றில் எடுத்துக் காட்டப்பட்ட மொத்த வரியைக் கழிப்பதற்கு அவர் உரித்துடைய வராதல் வேண்டும்;

(ஆ) அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரால் கொடுபடற்பாலதான வருமான வரியானது 113அ என்னும் பிரிவின் கீழ்ச் செய்யப்பட்ட மொத்தக் கழிப்பனவுகளிலும் பார்க்கக் குறைவாக இருந்தால், 113அ என்னும் பிரிவிற்கிணங்கவும், xxii ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கமைவாகவும் செய்யப்பட்ட அத்தகைய கொடுப்பனவு தொடர்பான கூற்றென்றைக் காண்பிப்பதன் மேல், அந்த வரிமதிப்பீட்டாண்டிற்காக, அவராற் கொடுபடற்பாலதான வருமானவரிக்கும் அத்தகைய கசற்றில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள மொத்தத் தொகைக்குமிடையிலான வித்தியாசத் தொகையை, அவர் மீளப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

113இ. (1) எந்த ஆளுடைய வட்டியிலிருந்து, ஒரு வங்கியால் அல்லது நிதி நிறுவனத்தினல் 113அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வருமானவரி கழிக்கப்படற்பாலதாகவுள்ளதோ, அந்த ஆளெவரும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காக அவரால் கொடுபடற்பாலதான மொத்த வருமானவரியானது, 113 அ என்னும் பிரிவின்கீழ் அந்த வரிமதிப்பீட்டான்டிற்காகக் கழிபடற்பாலதான வருமானவரியை விடக் குறைவானதாக இருந்தால், ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்படக் கூடியவாறுன அத்தகைய படிவத்திலும், அத்தகைய விபரங்களைக் கொண்டதாகவும், அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கான வருமானவரிக் கழிப்பனவில் அவசியமான சீராக்கல்களைச் செய்யும்படி அந்த வங்கிக்கு அல்லது நிதி நிறுவனத்திற்குப் பணிப்பொன்று வழங்கப்பட வேண்டுமென ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி அல்லது ஆணையாளர் தலைமையதிபதியால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆளெவரினுலும் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல் அத்தகைய விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட வங்கிக்கு அல்லது நிதி நிறுவனத்திற்கு, அவசியமான பணிப்புக்களை எழுத்தில் வழங்கலாமென்பதுடன் (அதன் பிரதியொன்று விண்ணப்பகாரருக்கு வழங்கப்படுதல் வேண்டும்). அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனம் அத்தகைய பணிப்புக்கிணங்க அத்தகைய ஆளுக்குக் கொடுபடற்பாலதான வட்டியிலிருந்து வருமானவரியைக் கழித்தல் வேண்டும்:

ஆயின், வழங்கப்பட்டதான அத்தகைய பணிப்பு எதுவும் எந்த நேரத்திலும் வேறுபடுத்தப்படலாம்.

(3) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில், இப்பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட ஒரு பணிப்பில் அதிருப்தியடையும் ஆளெவரும், அத்தகைய பணிப்பு விடுக்கப்பட்ட தேதியின் பின்னர் முப்பது நாட் காலப் பகுதிக்குள்ளாக மேன்முறையீட்டுக்கான ஏதுக்களைச் சுருக்கமாக எடுத்துக்காட்டி எழுத்து மூலமாக ஆணையாளர் தலைமையதிபதிக்கு மேன்முறையீடு செய்யலாம். அத்தகைய ஏதேனும் மேன்முறையீடு மீதான ஆணையாளர் தலைமையதிபதியின் தீர்மானம் முற்றுனதும் முடிவானதுமாதல் வேண்டும்.

ஆயின், ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய ஆளினுல் எழுத்தில் விடுக்கப்படும் வேண்டுகோளின் பேரில், 117 ஆம் பிரிவின் கீழ் மேன்முறையீடு செய்வதற்கு அத்தகைய ஆளை இயலச் செய்யும் நோக்கத்திற்காக, அந்த வரி மதிப்பீட்டாண்டுக்கு, அத்தகைய ஆள் தொடர்பில் 115 ஆம் பிரிவின் கீழான வரி மதிப்பீடொன்றை ஆணையாளர் தலைமையதிபதி செய்வித்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு வங்கியும் நிதி நிறுவனமும்—

(அ) வரி மதிப்பீட்டாண்டொன்றில், இச்சட்டத்தின் கீழ் வருமான வரி விதிக்கப்படுதற்குரிய ஆட்களுக்கு அதனுல் கொடுக்கப்படும் வட்டி பற்றிய தகுந்த பதிவேடொன்றை வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன்,

(ஆ) அதனுல் பேணப்படுவதும், (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டதுமான பதிவேடு எதனையும் பார்வையிடுவதற்கு ஆணையாளர் தலைமையதிபதியினுல் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரெவரையும் அனுமதித்தல் வேண்டும்.

113ஈ. இச்சட்டத்தின் கீழ், எந்த வங்கி அல்லது நிதி நிறுவனம் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில், வருமானவரி விதிக்கப்படுதற்குரிய ஆட்களுக்கு, அதனுல் கொடுக்கப்படும் வட்டியிலிருந்து வருமானவரி கழிக்கும்படி தேவைப்படுத்தப் பட்டுள்ளதோ அந்த வங்கி அல்லது நிதி நிறுவனம் ஒவ்வொன்றும் வட்டிக் கொடுப்பனவு தொடர்பாக அதற்கும் அத்தகைய ஆளுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கைக்கிணங்க அத்தகைய ஆளுக்கு வட்டி கொடுக்கப்படும் நேரத்தில் அத்தகைய வருமானவரியைக் கழித்தல் வேண்டும் என்பதுடன், அக்கழிப்பனவு செய்யப்பட்ட மாதத்தை அடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளுக்கு முன்னர் அவ்வாறு கழிக்கப்பட்ட தொகைகளை ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்தலும் வேண்டும். அத்துடன், அதே வேளை, ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்படக்கூடியவாறுன அத்தகைய படிவத்திலும் அத்தகைய விதத்திலும் வெளிப்படுத்துகையொன்றை அவருக்குக், கொடுத்துதவுதலும் வேண்டும்.

113உ. (1) ஏதேனும் வங்கி அல்லது நிதி நிறுவனம், ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில் 113ஈ என்னும் பிரிவுக்கிணங்க இச்சட்டத்தின் கீழ் வருமான வரி விதிக்கப்படுதற்குரிய ஆளொருவருக்கு அதனுல் கொடுக்கப்படும் வட்டியிலிருந்து வருமானவரியைக் கழிப்பதற்குத் தவறுமிடத்து அல்லது வங்கி அல்லது நிதி நிறுவனம், அவ்வாறு கழித்த தொகை எதனையும் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பத் தவறுமிடத்து, அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனம், இப்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ்க் கழிப்பதற்கு அது தேவைப்படுத்தப்பட்டதும், ஆனுல் அது அவ்வாறு கழித்திருக்காததுமான வரியின் முழுத் தொகைக்கும் அல்லது விடயத்துக்கேற்றவாறு கழிக்கப்பட்டு ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பி வைக்கப்படாததான வரித்தொகை முழுவதற்கும் அல்லது அதன் பாகத்திற்கும் அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனம் பொறுப்புடையதாதல் வேண்டும். அத்துடன் விடயத்துக்கேற்றுற்போல கழிக்கப்படாததான அல்லது கழிக்கப் பட்டு அனுப்பி வைக்கப்படாததான அத்தகைய பணத் தொகை எந்நாளன்று அல்லது அதன் முன்னர் அத்தகைய பணத் தொகை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வேண்டுமோ அந்நாளைத் தொடர்ந்துவரும் நாளிலிருந்து தவணை தவறப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனம் தவணை தவறியதொன்ருகக் கருதப் படுதலும் வேண்டும்; அத்துடன் இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதத்தில் அத்தகைய பணத் தொகை அத்தகைய வங்கியிடமிருந்து அல்லது நிதி நிறுவனத்திடமிருந்து அறவிடப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் எவரேனும் ஆளுக்கும் கொடுக்கப்படும் வட்டியிலிருந்து வங்கி, அல்லது நிதி நிறுவனம் கழிக்கத் தவறியுள்ள வரித் தொகையை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை எந்த ஆளிடமிருந்து அத்தகைய கழிப்பனவு செய்யப்பட்டிருக்க வேண்டுமோ அந்த ஆளிடமிருந்து ஆணையாளர் தலைமையதிபதி அறவிடலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வருமான வரித் தொகையை வங்கியிடமிருந்து அல்லது நிதி நிறுவனத்திடமிருந்து முழுமையாக அல்லது எந்த ஆளிடமிருந்து அத்தகைய கழிப்பனவு செய்யப்பட்டிருக்க வேண்டுமோ அந்த ஆளிடமிருந்து முழுமையாக அல்லது வங்கியிடமிருந்து அல்லது நிதி நிறுவனத்திடமிருந்து பகுதியளவிலும், அந்த ஆளிடமிருந்து பகுதியளவிலும் அறவிடுவதற்கு ஆணையாளர் தலைமையதிபதி, அவர் பொருத்தமானவையென எண்ணும் அத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதைத் தடுப்பனவாக இப்பிரிவிலுள்ள எதுவும் வாசிக்கப்பட்டுப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

113ஊ. ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் இச்சட்டத்தின் கீழ் வருமான வரி விதிக்கப்படுதற்குரிய எவரேனும் ஆளுக்குக் கொடுக்கப்படும் வட்டியிலிருந்து வருமானவரி கழிக்கும்படி தேவைப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் வங்கி அல்லது நிதி நிறுவனம்—

(அ) இந்த அத்தியாயத்தின் கீழ்க் கழிக்கும்படி தேவைப்படுத்தப்பட்டதான வருமானவரி முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தைக் கழிக்கத் தவறுமிடத்து,

(ஆ) அவ்வாறு கழிக்கப்பட்ட வருமானவரி முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பி வைக்கத் தவறுமிடத்து; அல்லது

(இ) 113ஈ என்னும் பிரிவின் கீழான ஏதேனும் வெளிப்படுத்துகையைக் கொடுத்துதவத் தவறுமிடத்து,

வரிமதிப்பீட்டாளரொருவர், அந்த வரிமதிப்பீட்டாண்டின் இறுதியிலிருந்து மூன்ருண்டுகளுக்குள்ளாக, எந்நேரத்திலும், அத்தகைய வரிமதிப்பீட்டாண்டிற்காக அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனம் கழித்து ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்திருக்க வேண்டிய வருமானவரித் தொகையை, அல்லது மேலதிக வருமானவரித் தொகையை மதிப்பீடு செய்யலாமென்பதுடன், அத்தகைய பண தொகையையும் அத்துடன் சேர்ந்து, 113ஏ என்னும் பிரிவின் கீழ்க் கொடுக்குமதியாக இருக்கக் கூடியவாருன அத்தகைய பணத் தொகையையும் உடனடியாகக் கொடுக்கும்படி எழுத்துமூலமான அறிவித்தலினுல் அத்தகைய வங்கியை அல்லது நிதி நிறுவனத்தைத் தேவைப்படுத்துதலும் வேண்டும்.

113எ. (1) பிரிவு 113ஊ என்னும் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ்ச் செய்யப்பட்ட ஏதேனும் வரிமதிப்பீட்டுத் தொகையினுல் இன்னலுற்றதான ஏதேனும் வங்கி அல்லது நிதி நிறுவனம், அத்தகைய வரிமதிப்பீடு பற்றிய அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேதியின் பின்னர் முப்பது நாட் காலப்பகுதிக்குள்ளாக, அத்தகைய வரிமதிப்பீட்டுக்கெதிராக எழுத்தில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு மேன்முறையீடு செய்யலாம்:

ஆயின், இலங்கையில் இல்லாமை காரணமாக, உடனலமின்மை காரணமாக, அல்லது வேறு நியாயமான ஏது காரணமாக, அத்தகைய காலப் பகுதிக்குள் மேன்முறையீடு செய்வதிலிருந்து மேன்முறையீட்டாளர் தடுக்கப்பட்டுள்ளாரென ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படுவதன் மேல், அவர் அம்மேன்முறையீடு செய்வதற்கான கால நீடிப்பொன்றை வழங்குதல் வேண்டும்.

*(2)* ஓராம் உட்பிரிவின் கீழ், எந்த வரிமதிப்பீட்டுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதோ, அந்த வரிமதிப்பீடு, *113ஈ* என்னும் பிரிவின் கீழ்க் கொடுத்துதவப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் வெளிப்படுத்துகையொன்று இல்லாதபோது செய்யப்பட்டுள்ளவிடத்து, மேன்முறையீட்டுக்கான மனு அத்தகைய வெளிப்படுத்துகையுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

*(3)* பிரிவு *113ஊ* என்பதன் கீழ், செய்யப்பட்ட மதிப்பீடொன்றினுல் விதிக்கப்படும் வருமானவரித் தொகை, அத்தகைய வரி மதிப்பீட்டுக்கெதிராக *(1)* ஆம் உட்பிரிவின் கீழ் மேன்முறையீடொன்று செய்யப்பட்டுள்ளதென்பது எது எவ்வாறிருப்பினும், வங்கியினுல் அல்லது நிதி நிறுவனத்தினுல் கொடுக்கப்படுதல் வேண்டும்.

*(4)* நூற்றுப்பதினேழு *(5)* முதல் *122* வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள் *(1)* ஆம் உட்பிரிவின் கீழ்ச் செய்யப்பட்ட மேன்முறையீடெதற்கும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*(5)* இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கச் செய்யப்பட்ட வரி மதிப்பீடொன்றுக்கெதிராக *(1)* ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட காலப் பகுதிக்குள்ளாகச் செல்லுபடியான மேன்முறையீடெதுவும் செய்யப்படாதவிடத் அல்லது ஏதேனும் வரிமதிப்பீடொன்று தொடர்பில் *117 (5)* என்னும் பிரிவின் கீழ் உடன்படிக்கையொன்று பெறப்பட்டுள்ளவிடத்து, அல்லது வரிமதிப்பீடொன்று மேன்முறையீட்டின்மேல் தீர்மானிக்கப்பட்டுள்ளவிடத்து விடயத்துக்கேற்றுற்போல, அவ்வாறு செய்யப்பட்ட அல்லது உடன்படப்பெற்ற அல்லது மேன்முறையீட்டின்மீது தீர்மானிக்கப்பட்ட வரிமதிப்பீடு, இச்சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்காகவும் முற்றுனதும் முடிவானதுமாதல் வேண்டும்.

*113ஏ.* இப்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ், ஒரு வங்கியால் அல்லது நிதி நிறுவனத்தினுல் கொடுபடற்பாலதான வருமானவரி எதுவும், தவறுகைக்குள்ளாகுமிடத்து, அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனம் அத்தகைய வரியோடு மேலதிகமாக—

*(அ)* அத்தகைய வரி அத்தகைய வரியின் பத்துச்சத வீதத்துக்குச் சமமான தொகையொன்றைத் தண்டமாகவும்; அத்துடன்

*(ஆ)* அத்தகைய வரி தவறுகைக்குள்ளாகத் தொடங்கியதன் பின்னர், ஆறு மாதங்கள் முடிவடையுமுன்னர், அத்தகைய வரி கொடுக்கப்படாதவிடத்து, அத்தகைய வரியின் பதினைந்து சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றை மேலதிகத் தண்டமாகவும்

செலுத்துதல் வேண்டும்:

ஆயின், அவ்வாறு செலுத்தத் தவறியமை அவரது கட்டுப்பாட்டுக்கப்பாற் பட்ட சூழ்நிலைகளினுல் ஏற்பட்டதெனவும், தவறுகைக்குள்ளாய வரித்தொகை யைத் தாம் கொடுத்துள்ளாரெனவும், அத்தகைய கொடுப்பனவைச் செய்யும் நேரத்தில் அவர் கொடுக்குமாறு தேவைப்படுத்தப்படும் வெளிப்படுத்துகையைக் கொடுத்துள்ளாரெனவும், ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படுமளவுக்கு, அத்தகைய தவறுகை புரிந்தவர் எண்பிப்பாராயின், ஆணையாளர் தலைமையதிபதி, அத்தவறுகை புரிந்தவரினுல் கொடுபடற்பாலதான ஏதேனும் அத்தகைய தண்டத் தொகையை விட்டுவிடலாம் அல்லது குறைக்கலாம்.

*113ஒ.* இவ்வத்தியாயத்தில் ''நிதி நிறுவனம்'' என்பது கூட்டிணைக்கப் பட்டதாயினுஞ்சரி, கூட்டிணைக்கப்படாததாயினுஞ்சரி, எந்த ஆளுடைய அல்லது ஆட்கள் குழுவுடைய தொழில் அல்லது அவரது தொலிழின் பாகம் வைப்பு வாயிலாகப் பணத்தை ஏற்றுக்கொள்வதனையும், அத்துடன் அதன் மீதான வட்டிக் கொடுப்பனவையும் கொண்டுள்ளதோ அந்த ஆள் அல்லது ஆட்கள் குழு என்று பொருள்படும்.''.

*16.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 115 ஆம் பிரிவு, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், ''ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காக'' என்னும் சொற்களிலிருந்து ''மூன்றுண்டுகள் கழிந்த பின்னர் செய்யப்படுதலாகாது'' என்பது வரையிலான எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(5) அறுபத்திரண்டாம் பிரிவினது ஏற்பாடுகளுக்கமைவாக,—

(அ) (i) 1984 ஏப்பிரல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக எவரேனும் ஆளினுல் இச்சட்டத்தின் கீழ் கொடுபடற்பாலதான வருமான வரியின் அல்லது செல்வ வரியின்; அல்லது

(ii) ஏதேனும் அத்தகைய வரிமதிப்பீட்டாண்டில் ஆனுல் 1985 நவம் பர் 13 ஆந் தேதிக்கு முன்னர் எவரேனும் ஆளினுல் செய்யப் பட்டதும் அவ்வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின்வரும் ஆண்டின் நவம்பர் முப்பதாம் தேதியன்று அல்லது அதன் முன்னர் அத்தகைய ஆளினுல் செய்யப்பட்ட விவரத்திரட்டொன்றில் உள்ளடக்கப்பட்டிருப்பதுமான ஏதேனும் கொடை தொடர்பில் அவ்வாளினுல் இச்சட்டத்தின்கீழ் கொடுபடற்பாலதான ஏதேனும் கொடை வரியின்,

வரிமதிப்பீடு எதுவும், அவ்வரிமதிப்பீட்டாண்டு முடிவடைந்த திலிருந்து, மூன்று ஆண்டுகள் கழிந்ததன் பின்னர்; அத்துடன்

(ஆ) விடயத்துக்கேற்றுற்போல எவரேனும் ஆளின் வருமானம் அல்லது செல்வம் தொடர்பாக, 1985 ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக, அவ்வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின்வரும் ஆண்டின் நவம் பர் முப்பதாம் தேதியன்று அல்லது அதன் முன்னர் விவரத்திரட் டொன்றைச் செய்துள்ள அத்தகைய ஆளினுல் கொடுபடற்பாலதான விடயத்துக்கேற்றுற்போல வருமான வரியின் அல்லது செல்வ வரியின் வரிமதிப்பீடு எதுவும் அவ்வரி மதிப்பீட்டாண்டு முடிவடைந்த திலிருந்துமூன்று ஆண்டுகள் கழிந்த பின்னர், செய்யப்படுதல் ஆகாது.''.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 128 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் உள்ள ''அம் முடிவானது முற்றுனதாதல் வேண்டும்,'' என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

''அம் முடிவானது முற்றுனதாதல் வேண்டும்:

ஆயின், சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக, அல்லது வேறு நியாயமான ஏதுகாரணமாகத் தவணை தவறியவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் அறிவித்தல் வழங்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக மேன்முறையீடு செய்வதிலிருந்து தடை செய்யப்பட்டுள்ளார் என ஆணையாளர், தலைமையதிபதியானவர், திருப்திப்படுமிடத்து அத்தகைய மேன்முறையீட்டைச் செய்வதற்கான கால நீடிப்பொன்றை அவர் வழங்குதல் வேண்டும்''.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(உ) இவ்வுட்பிரிவின் ''அசைவுள்ள ஆதனம்'' என்னும் சொற்றொடர் தொழிற்சாலையொன்றின் நிலத்தில் பொருத்தப்பட்டுள்ள ஏதேனும் பொறித்தொகுதியை அல்லது எந்திர சாதனத்தையும் உள்ளடக்கும்''

19. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அந்த அட்டவணையின் 11ஆ என்னும் பாகத்தில், ''1985 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''1985 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு'' என்னும் சொற்றொடரை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அந்த அட்டவணையின் 11 ஆ என்னும் பாகத்தை உடனடுத்து, பின்வரும் பாகத்தை உட்புகுத்துவதன் மூலமும்:—

''பாகம் IIஇ

1986 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான வருமானவரி வீதம் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:—

| | |
|---|---|
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் முதல் 21,000 ரூபாவுக்கு | 10 வீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 24,000 ரூபாவுக்கு | 20 வீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 24,000 ரூபாவுக்கு | 30 வீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 24,000 ரூபாவுக்கு | 40 வீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் மீதிக்கு | 50 வீதம் |

20\. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றும் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அந்த அட்டவணையின் விடயம் 1 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலம்:—

1\. பிரிபடா இந்துக் குடும்பங்கள்

1979 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டிற்கும், அவ்வரி மதிப்பீட்டாண்டை உடனடுத்து வரும் ஆறு வரிமதிப்பீட்டாண்டுகளுக்கும்:

| | வரி வீதம் |
|---|---|
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் முதல் 25,000 ரூபாவுக்கு | —30 வீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 25,000 ரூபாவுக்கு | —40 வீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 25,000 ரூபாவுக்கு | —50 வீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 25,000 ரூபாவுக்கு | —60 வீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் மீதிக்கு | —70 வீதம் |

1986, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு:—

| | |
|---|---|
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் முதல் 25,000 ரூபாவுக்கு | —30 வீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 25,000 ரூபாவுக்கு | —40 வீதம் |
| வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் மீதிக்கு | —50 வீதம் |

அத்துடன்

(2) அந்த அட்டவணையின் விடயம் 4 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:—

"4 (இறுதி விருப்பாவணத்தின் கீழான நம்பிக்கைப் பொறுப்பாளர் உட்பட) நம்பிக்கைப் பொறுப்பாளர்கள்

1979, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டிற்கும் அத்துடன், அந்த வரி மதிப்பீட்டாண்டை உடனடுத்து வரும் ஆறு வரிமதிப்பீட்டாண்டுகளுக்கும்:—

| | |
|---|---|
| (அ) 1978 நவம்பர் 15 ஆம் தேதிக்கு முன்னர் நம்பிக்கைப் பொறுப்பு உருவாக்கப்பட்டவிடத்து | 50 வீதம் |
| (ஆ) 1978 நவம்பர் 15 ஆம் தேதிக்குப் பின்னர் நம்பிக்கைப் பொறுப்பு உருவாக்கப்பட்டவிடத்து | 55 வீதம் |
| 1986, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு எதற்கும் எல்லா நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மீதும் | 50 வீதம்" |

(3) அந்த அட்டவணையின் விடயம் 11 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:—

"II. 1971 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க வியாபாரப் பொறுப்பு முயற்சிகள் (கொள்ளல்) சட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட வியாபாரப் பொறுப்பு முயற்சிகள்—

(அ) 1979, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கும், அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துவரும் ஆறு ஆண்டுகள் ஒவ்வொன்றிற்கும் வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின்மீது — 50 வீதம்

(ஆ) 1986 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு—

(i) வரிவிதிக்கற்பாலதான வருமானத்தின் மீது — 50 வீதம்

(ii) ஓராம் பந்தியின் கீழ் கொடுபடற்பாலதான வரியை அதிலிருந்து கழித்த பின்னரான இலாபத்தின் மீதியில் — 25 வீதம்"